# மழலைச் சிமிழ்



## மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி

### கட்டடத் திறப்பு விழா

# சிறப்பிதழ்

11.04.2015

# mathagal.net




எம்மவர்களின் படைப்புக்கள் ஆலயநிகழ்வுகள்
விளையாட்டுக்கள் பொது நிகழ்வுகளை போன்ற
வீடியோ பதிவினை உங்கள் அபிமான
இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு

MATHAGAL.NET@GMAIL.COM

0033751011981

KP.KUMAR

# மழலைச் சிமிழ்

மாதகல் சித்தி விநாயகர்
முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா சிறப்பிதழ்

**இதழாசிரியர்**

**திரு.சு.கிருஷ்ணகுமார்**

***முகாமைத்துவக் குழு***
***மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி***

# 2015

# மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி

## மகுட வாசகம்

மழலை மாண்பே மகத்துவம்

## தொலைநோக்கு

ஆக்க பூர்வமான சிறுவர் நேயச் சூழலில் உருவாக்கப்படும் சமனிலை ஆளுமை கொண்ட சிறார்கள்.

## பணிக் கூற்று

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி முகாமைத்துவக் குழு, முன்பள்ளி சமூகத்தினர், உதவி செய்யும் அமைப்புக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாதுகாப்பும் மகிழ்ச்சிகரமானதுமான சிறுவர் நேயச் சூழலை ஆக்கபூர்வமாக வளர்த்தெடுப்பதனூடு சிறுவர்களது உடல்,உள,மொழி,கணித,சமூக,விவேக,சூழல் ஆகிய விருத்திப் படிநிலைகளை முழுமையடைச் செய்து சமனிலை ஆளுமை கொண்டவர்களாக உருவாக்குதல்.

# மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளியின் தோற்றம்

அன்றையது



இன்றையது



# மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி
# முகாமைத்துவக் குழு
# 2012 – 2015

தலைவர் : * திரு.கி. பேரின்பநாதன்

உப தலைவர் : * திரு.செ.சுபாஸ்கரன்

செயலாளர் : * திரு.வி.ஜெயந்தன்

உப செயலாளர் : * திரு. ச.மயூரதாஸ்

பொருளாளர் : * திரு. ந.சுஸாகரன்

முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் :

* திரு.வி.சிற்றம்பலம்.
* திருமதி.வே.சரோஜினிதேவி
* திருமதி.வி.இராஜகுமாரி
* திருமதி.ச.கலையரசி
* திருமதி.பு.கிருபானந்தி

ஆலோசகர் : * திரு.சு.கிருஷ்ணகுமார்

**ஆசிரிய ஆளணி**

* திருமதி. சறோஜினிதேவி வேலும்மயிலும்
* திருமதி. கல்யாணி சிவகணேஸ்
* திருமதி. கிருஷாந்தினி துசானந்தன்

# இதழின் உள்ளே.....

## ஆசிச் செய்தி

- மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலயக் குருக்களின் ஆசிச்செய்தி
- மாதகல் பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி.

## வாழ்த்துச் செய்திகள்

- வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் வாழ்த்துரை
- வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
- வட மாகாண ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி
- பிரதேச செயலாளர்- வலி தென் மேற்கு
- கனடா - மாதகல் முன்னேற்ற கழகத்தின் வாழ்த்துப்பா
- கனடா - மாதகல் நலன்புரிச் சங்கம்
- பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கம்
- டென்மார்க் மாதகல் நலன்புரிச் சங்கம்
- மாதகல் நலன்புரிச் சங்க செயலாளர்
- மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்
- இளைஞர் சங்கமும் சனசமூக நிலையமும் - மாதகல்
- திரு. வி. சிற்றம்பலம் - ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்
- திரு.சி.தர்மசீலன் - உதவிக் கல்விப்பணிப்பாளர். வட மாகாண கல்வித் திணைக்களம்.

## இதழாசிரியரின் முகமன்

திரு.சு.கிருஷ்ணகுமார் - அன்பரங்கம்.மாதகல்.

# ஆக்கங்கள்

- சித்தி விநாயகர் முன்பள்ளி முகாமைத்துவ குழு செயலாளரின் அறிக்கை
- சித்தி விநாயகர் முன்பள்ளியின் வரலாறு
- முன்பள்ளி சிறார்களின் புலன் விருத்தி செயற்பாடுகளுக்காக முன்பள்ளி ஆசிரியர்கள் பிரயோகிக்க வேண்டிய உத்திகள்
- இளம் குயில் பாடும் சோலை - கவிதை
- முன்பள்ளி சிறார்களின் தனிநபர் சுகாதார பழக்க வழக்கங்களும் சுய செயற்பாட்டிற்கான உத்திகளும்.
- மேற்கு நாடுகளில் குறிப்பாக கனடாவில் முன்பள்ளி.
- முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்தியில் ஆக்கச் செயற்பாடுகளின் அவசியம்.
- முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்தியில் அழகியல் கல்வி செயற்பாடுகள் - ஒரு நோக்கு
- முன்பள்ளி கல்வியில் சிறுவர் இலக்கியம்
- Froebel's System of Kindergarten Education.
- முன்பள்ளி நடைமுறைகள்.
  - முகாமைத்துவ குழுக் கட்டமைப்பும் பொறுப்புக்களும்.
  - பௌதிகக் கட்டடமைப்பும் ஆரோக்கியமான சூழலும்.
  - முன்பள்ளிகளில் பேணப்படவேண்டிய ஆவணங்களும் நாளாந்த செயற்பாடுகளும்.
  - முன்பள்ளி ஆசிரியரின் வகிபாகம்
  - குழந்தையொன்றின் முழு விருத்திக்கான ஆரம்ப அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆலோசனைகள்.
  - உத்தேச பாடத்திட்டமும் பாடக்குறிப்பும்.
- ஆல மரம் - கவிதை
- முன்பள்ளி ஆசிரியர் திருமதி.வே.சரோஜினிதேவி அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு.
- நன்றியுரை



# மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலயக் குருக்களின் ஆசிச்செய்தி

சிறப்புறு மாதகல் ஊரில் தொன்மை வாய்ந்த கல்வி ஆலயமாகிய சித்தி விநாயகர் முன்பள்ளி கட்டிட திறப்பு விழாவிற்கு யானும் இக்கோவிலை வாழ்த்து வதில் பேருவகையடைகின்றேன். இந்த மனிதப்பிறவி எமக்கு வாய்த்தது நாம் செய்த புண்ணியப் பயனே ஆகும். இறைவனின் அனுக் கிரகததால் கிடைக்கப் பெற்ற மனித சரீரத்தை மெய் என்று சிறப்பிக்கப்படுகிறது. இம்மனிதப் பிறவியில் உண்மையான நற்காரியங்களை செய்யவேண்டும் என்பதற்காகவே இப் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

இவ்வகையில் மாதகல் வாழ்மக்கள் மற்றும் மாதகல் புலம் பெயர்ந்து வாழும் மக்கள், கனடா மாதகல் முன்னேற்றக்கழகம், கனடா மாதகல் நலன்புரிச்சங்கம் மற்றும் மாதகல் பிரான்ஸ் நலன்புரிச்சங்கம் இவர்களுடைய நிதி உதவி மற்றும் சரீர உதவிகள் வழங்கி சித்தி விநாயகர் முன்பள்ளி கட்டிடத்தை மிக விரைவாக அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைக் கூறிக்கொண்டு, இக்கட்டிட விழா சிறப்புற அமைய அரசடி சித்தி விநாயகரின் பாதங்களை தொழுது எனது நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவருக்கு
மாடல்ல மற்றை யவை"

சுபம்

பிரம்மஸ்ரீ கதிர் செல்லப்பா குருக்கள் மங்களேஸ்வரக்குருக்கள்
மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலயம்,
மாதகல்



## மாதகல் பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

தன்னைப்போல மற்றவர்களும் சந்தோசமாக வாழவேண்டும் என்ற உயரிய நோக்கோடு தம்மைத் தியாகம் செய்து வாழ்கின்ற நல்ல உள்ளங்களின் சேவையும், பணியுமே உலகின் தொடர்ச்சியான ஓட்டத்திற்கு காரணங்களாகின்றன. அந்த வரிசையில் இன்றைய நல்ல நாளில் எமது மாதகல் பிரதேசத்தில் சித்திவிநாயகர் முன்பள்ளி புதிதாக நிர்மாணித்து, நல்ல தலைவர்களையும் பிரஜைகளையும் உருவாக்கும் பணியை ஆரம்பிக்கின்றது என்பது போற் றுதற்குரிய ஒன்றாகும். சுயநலன்களையும், சுய இலாபத்தையும் தாண்டி தனிமனித, சமூக முன்னேற்றத்திற்கான அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், நலன்புரிச் சங்கங்கள் பல கோணங்களில், பலவடிவங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன இத்தகைய அமைப்புக்களின் தூரநோக்கின் அடையாளங்களே இம் முன்பள்ளியின் எழுச்சியும் உயர்ச்சியுமாக அமைவதோடு எமது சமூகத்தின் வளர்ச்சிப் பரிமாணங்களின் வெளிப்பாடுகளுமாகும்.

இயற்கை வளங்கள் நிறையப்பெற்றதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான மாதகல் பிரதேசம் இன்னும் பல உயர்ச்சிகளையும் வளர்ச்சிகளையும் காணவேண்டுமென்றும், இதற்கு பின் புலத்தில் நின்று அயராது உழைக்கின்ற ஒவ்வொருவருக்கும் எனது நல் வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

**அருட்தந்தை. கை. பீ. கனிசியஸ் றாஜ்**
**பங்குத் தந்தை,**
**மாதகல்.**

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்**
வடக்கு மாகாணம், 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශයේ කාර්යාලය
උතුරු පළාත, 124, ආඩියපාදම් වීදිය කල්වියන්කාඩු යාපනය


எனது இல. / මගේ අංකය / My No. } வமா / அக்ஷ / கலஸிஇ/ — உமது இல / ඔබේ අංකය / Your No } — திகதி / දිනය / Date }



# வாழ்த்துச் செய்தி

மனிதனின் வாழ்க்கையில் வரும் பருவங்களில் குழந்தைப் பருவம் என்பது மிக முக்கிய மானதொன்றாகும் எவ்விதமான சலனங்களும் இன்றி, தீயபழக்கங்களும் இன்றி இருக்கின்ற ஒரு பருவமே இக் குழந்தைப் பருவமாகும். தாய் தந்தையின் முழுப் பராமரிப்பிலே இருந்த பிள்ளைகள் முதன் முதலாக தமது வீட்டுச் சூழலை விட்டு வெளியுலகமான முன்பள்ளிக்கு ஆரம்பக் கல்வியை நோக்கி கால் நடம் பதிக்கின்றனர்.

குழந்தை வீட்டுச் சூழலை விடுத்து குறிப்பிட்ட நேரம் புதியதொரு சூழலில் தனது கல்விப் புலத்தை ஆரம்பிக்கின்றது. நம்மால் இடப்படுகின்ற அத்திவாரக்கல் மிகவும் பலமுடையதாக இருத்தல் வேண்டும். அதைப்போன்றே முன்பள்ளிக் கல்வி அமைந்திருத்தல் வேண்டும். இக்கல்விப் புல மானது பிள்ளைகளுக்குப் பல்வேறுபட்ட வகையில் அமைவதால் குழந்தை விரும்புகின்ற விதத்தில் அது அமைதல் வேண்டும். அத்தகைய பணியை வலிகாமம் வலயத்தின் மாதகல் பிரதேசத்தின் "மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி" சிரத்தையுடன் ஆற்றி வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

குழந்தைகளின் கல்வி விருத்திக்கும், அவர்களின் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கும் ஏற்ற வகையில் புதிய சூழலில், புதுப் பொலிவுடன் பல தரப்பட்ட வளங்களை மையப்படுத்தி மாதகல் பிரதேச வாசிகளினால் உருவாக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

முன்பள்ளி சிறப்புடன் தன் பணியை ஆற்றவும், புதிய கட்டடத் திறப்பு விழா சிறப்புடன் நடைபெறவும், அன்றைய தினம் வெளியிடப்படவுள்ள "மழலைச் சிமிழ்" மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றேன்.

**த.குருகுலராசா,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.**
**வடக்கு மாகாணம்.**


அமைச்சர் / අමාත්‍යාංශ / Minister } 021-205 4094
அலுவலகம் / කාර්යාලය / Office } 021-205 4091(Private Secretary) 021-205 4093(P.R.O) 021-205 4092(General)
தொலை நகலி / ෆැක්ස් / Fax } 021-205 4093
email: edumin.14@gmail.com

காரியாலயம் Office } 0217390650
தொலை நகல் Fax } 0212241547
பணிப்பாளர் DE } 0212241547 0213216482 0772911634
மருதனார்மடம், சுன்னாகம்

வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்
l,dm wOHdmk ldrAhd,h - j,slduus
ure;kdrAuvus pqkakdlus

எனது இல My Number } NP/411/20/3/1(G)/
தங்களது இல Your Number } 0212241547
திகதி Date } 31/03/2015
மருதனார்மடம் சுன்னாகம்



# வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளியின் புதிய கட்டிடத் திறப்புவிழா வைபவத்தின் பொருட்டு வெளியிடப்படும் நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடைகின்றேன். வலிகாமம் கல்வி வலயத்தின் சிறார்களின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களின் அடிப்படை ஆளுமைக் கட்டமைப்பு வளர்ச்சியிலும், முன்பள்ளிகளின் பங்களிப்பு அளப்பரியது. அந்த வகையில் மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளியும் தனது சேவையினைச் சிறார்களுக்கு வழங்கி அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வித்திடுகின்றது என்பது பொருத்தமானது.

இம்முன்பள்ளியானது தொடர்ந்து வரும் காலங்களில் தனது சேவையினை மாதகல் பிரதேச சிறார்களுக்கு வழங்கி அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தினை வழங்க வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

இம் மலரின் உருவாக்கத்திற்கும், வெளியீட்டுக்கும் முன்னின்றுழைத்த அனைத்து ஆசிரியர், மாணவர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது ஆசிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதுடன், சித்திவிநாயகர் முன்பள்ளி எழுச்சி பெறவும் வாழ்த்துகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா,**
**கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்வி வலயம்.**



## வட மாகாண ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாம வலயத்தில் மாதகல் கிராமத்தில் இயங்கி வரும் சித்தி விநாயகர் முன்பள்ளி அப்பிரதேசத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்து வருகின்றது. இக்கிராம குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியையும், பழக்க வழக்கங்களையும், நல்ல விழுமியங்களையும் வழங்குகின்ற சிறந்த நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது. இதுவரை காலமும் ஆரம்ப பாடசாலைக்கு அருகிலுள்ள சிறிய சனசமூக நிலைய கட்டடத்தில் மிகக் குறைந்த வளங்களுடன் இயங்கி வந்து தற்போது அப்பிரதேச இளைஞர்கள், கல்வியாளர்கள், நலன் விரும்பிகளின் பெருமுயற்சியினால் புதிய கட்டிடமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரம்பபிள்ளைப்பருவம் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமான பருவமாகும். இப்பருவத்திலேயே அதிகளவு உடல், உள, மூளை வளர்ச்சி ஏற்படுகின்றது எனக் கல்வியாளர்கள் கூறுகின்றார்கள். எனவே இப்பருவத்தில் குழந்தைகளைச் சரியான முறையில் வளர்த்தெடுக்க வேண்டியது பெற்றோர்களதும், முன்பள்ளி ஆசிரியர்களதும் மிக முக்கிய கடமையாகும். இப்பருவத்தில் கற்பவையே குழந்தையின் வாழ்க்கை நீடித்த கல்விக்கு இட்டுச்செல்கின்றது.

சிறிதுசிறிதாக நிதியைச்சேகரித்து அதற்குரிய இடத்தை பெறுவதற்கு பெருமுயற்சி எடுத்து, முன்பள்ளிக் கட்டிடத்தை அமைத்து இன்று திறந்து வைக்க எடுத்திருக்கும் முயற்சி பெரும் பாராட்டுக்குரியது.

இந்த வகையில் சித்திவிநாயகர் முன்பள்ளியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய சித்தி விநாயகர் முன்பள்ளியின் முகாமைத்துவக்குழுத் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் பங்கெடுத்து செயற்பட்டுவரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள். கிடைக்கின்ற சிறிய கொடுப்பனவில் நிறைந்த சேவையினை செய்து வருகிறார்கள். இந்த வகையில் கட்டிட திறப்பு விழா சிறப்பாக நடைபெறுவதை முன்னிட்டு வெளியிடப்படும் மலர் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்கள்.


**செல்வி.ஜெயா தம்பையா**

**பணிப்பாளர்,**

**ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு,**

**கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**

**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**

**வடமாகாணம்.**



## சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

ஈழவளத் திருநாட்டின் வடபாலமைந்த யாழ்நகரின் பிரதேசசெயலாளர் பிரிவுகளுள் வலிதென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவும் ஒன்றாகும் இப்பிரிவினுள் பாலர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காக் கொண்டு பல முன்பள்ளிநிலையங்கள் செயற்பட்டு வருகின்றன இவ் வகையில் மாதகல் J/ 150 மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் இயங்கி வரும் மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளியானது மாதகல் கிழக்கு மற்றும் மாதகல் தெற்கு கிராமமக்களின் பாலகர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளியானது 1970ம் ஆண்டு மாதகல் இளைஞர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு இளைஞர் சங்கக் கட்டடத்தின் 15X20 சதுர அடி கொண்ட ஒரு அறையில் குறைந்த வசதிகளுடன் இயங்கி வந்தது இம்முன்பள்ளி நிலையத்திற்கான வசதிகளுடன் கூடிய ஓர் இடம் இல்லாமை பாலர்களுக்கான சிறந்த கல்வியை வழங்குவதில் பெரும் தடையாகக் காணப்பட்டு வந்தது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மாதகலைச் சேர்ந்த உள்ளூர் மற்றும் புலம் பெயர்ந்த மக்களது 40 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட நிதிப்பங்களிப்புடன் இம் முன்பள்ளி நிலையத்திற்கான நிரந்தர கட்டடம் 25X60 சதுர அடி பரப்பளவில் அரசடி சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி நிலையம் தற்போது மாணவர்களுக்கான விளையாட்டு முற்றம் விளையாட்டு வசதிகள், தண்ணீர் வசதி, மலசலகூட வசதி, போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும் வருடாந்தம் சராசரியாக 40 வரையான பாலகர்கள் கல்வி கற்று வரும் இம்முன்பள்ளி யில் தற்போது 03 முன்பள்ளி ஆசிரியைகள் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர் வருடாந்த விளையாட்டு விழா, சமய நிகழ்ச்சிகள், கலை விழாக்கள் என்பனவும் இங்கு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது இப் பாலகர்களுக்குச் சிறந்த வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டட வசதியினை ஏற்படுத்தி மாணவர்களது சிறந்த கல்வியை நோக்காகக் கொண்டு இக் கட்டட கட்டுமாணப் பணிகள் சிறந்த முறையில் இடம்பெற கடும் முயற்சியுடன் ஈடுபட்ட தற்போதைய நிர்வாகத்தினரின் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்கது.

இவ்வகையில் பலரது ஒத்துழைப்புடனும் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட இம்முன்பள்ளி நிலைய கட்டட திறப்பு விழா ஏப்ரல் 11ம் திகதியாகிய இன்று மிகவும் சிறந்த முறையில் நடைபெறும் இவ்வேளையில் இம்முன்பள்ளி நிலையம் எதிர்காலத்தில் மேலும் சிறந்த கல்வியினை பாலகர்களுக்கு வழங்கி அவர்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு சிறந்த முறையில் சேவையை வழங்கக் கூடியவர்களாக உருவாக வழிவகுக்க வேண்டும் என இறைவனை வேண்டி எனது வாழ்த்துச் செய்தி யினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்

சு. முரளிதரன்
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்

## கனடா மாதகல் முன்னேற்றக் கழகத்தின் வாழ்த்துப்பா....

## வானம்பாடிகளின் வேடந்தாங்கல்

சித்திவிநாயகனும் சிங்கார வேலனும்
பக்திமணம் பரப்பும் பாணாவெட்டியம்மனும்
நல்லாட்சி புரியும் நம்மண்ணில் - மேலும்
நற்பணிகள் தொடர நன்மைகள் பெருகவே!

ஆடலுடன் பாடலும் அழகுதமிழ் பாடமும்
அமுதமொழி தேடலும் அமைந்திருந்த அறிவகம்
அன்னையின் மடியும் அப்பாவின் அன்புப்பிடியுமே
அகில உலகமென அகமகிழ்ந்த பிள்ளைக்குழைந்தைகள்
வெளியுலகில் தடம்பதித்து வீரகாவியம் பாடவழிவகுத்து
எண்ணும் எழுத்தோடு பல்கலையும் பரிந்துரைத்து
அன்னை உருவில் அன்பின் வடிவில்
அரும்பணியாற்றும் ஆசிரியர்கள் சேவை அளப்பரிது.

முகையரும்பா மொட்டுக்கள் முதிராத சிட்டுக்கள்
முகமலர்ந்து உறவாடும் சிங்காரத் தோப்பு இது.
பிஞ்சுக் குழந்தைகள் கொஞ்சி மகிழும் கல்விக் கோட்டமிது
அதுவே அறிவுக்கு அத்திவாரமிடும் அறப்புள்ளியுமாகும்
வானில் சிறகடிக்கும் வானம்பாடிகளின் வேடந்தாங்கலும் இதுவே.

வருங்கால வாரிசுகளின் வண்ணப்பூங்கா
நாளையுலகம் நம்கையிலே என வீரநடைபோட்டு
வீர வரலாறு படைக்கவிருக்கும் வெற்றியாளர்களை
உருவாக்கும் உயரியபணி நம் கையிலேதான்.
வித்தைகள் பயின்ற விற்பன்னர்களாக்கி
நானிலம் போற்றும் நற்பிரஜைகளாக்கி
முத்திரை பதித்த முத்துக்களை உருவாக்குவதே முன்பள்ளி
கல்வி கசப்பானதல்ல அது கற்கண்டுப்பாகு என
கனிவுடனும் கருத்துடனும் கற்பிப்போரே கடவுளுக்கு நிகராவர்.

இன்றைய இளந்தலைமுறையினர் எதிர்காலத்தலைவர்கள்
நாளைய உலகின் நாடிநரம்புகளும் அவர்களே!
அஞ்சு வயதில் அம்மாவின் முந்தானை பிடித்து- நான்
அடியெடுத்து வைத்த ஆரம்பப்பள்ளி
புகழ் பூத்த ஆசான்கள் பொன்னையா வாத்தியாரும் தையலம்மாவும்
"அ.... சொல்லித்தந்து என் அறிவுக்கண்களைத் திறந்த ஆசான்கள்
"அமெரிக்க மிஷன் பாடசாலை" என் அன்னை இல்லம்
காலத்தின் தேய்விலே அவை கனவாகிப் போனாலும்
பேர் சொல்லிப் பெருமையுடன் இம்முன்பள்ளி இன்று
இமயமாய் எழுந்து பெருமையோடு நிற்கின்றது.

உயர்ந்த உள்ளங்களின் உன்னத சேவையால்- எம்
மண்ணுக்குக் கிடைத்த மாணிக்கப் பெட்டகமே இம்முன்பள்ளி
என கனடா மாதகல் முன்னேற்றக்கழகம் வாழ்த்துகின்றது.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றயவை"

**கனடா மாதகல் முன்னேற்றக்கழகம்**
**ஆக்கம் -: க.துரைசிங்கம் (கனடா)**

# கனடா மாதகல்நலன்புரி சங்கம்

## Mathagal Benevolent Society of Canada

## Registered N0: 1675658 / 30th November 2005

**President**
V. Balakrishnan (416) 724-6466

**Vice-Presidents :**
Mr. V.Thanikasalam (416) 824-2346 Mrs. Jancy Joseph (416) 499-3778

**Secretary:**
Saba. Arulsubramaniam M.A.
(905) 479-5375

**Joint Asst. Secretaries :**
A.Thiruchittampalam (647) 298-0725
A. Mathiyalakan (647) 894-1987

**Treasurer:**
K. Sanmuganathan (416) 298-2158

**Sports Coordinators**
K. Kanagalingam (905) 472-7208 Mrs. Vathani Anton (905) 712-8604
S. Sriskantharajah
Mrs. U. Vasanthy (905) 294-3629

**Public Relations:**
N. Kadampamoorthy (416) 816-0956
M. Thevabalan (416) 297-1386 M. Shanmugarajah (905) 472-7208

**Patron:**
Veera Subramaniam (416) 282-0947

அன்புடையீர்.
வணக்கம்.
வாழ்த்துகிறோம்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"என்பதை மனதிற் கொண்டு. மாதகல் வாழ் மழலைகளின் கல்வியில் அக்கறை பூண்டு அதற்கேற்ற செயல்வடிவம் கொடுப்பதற்காக மாதகலில் சித்தி விநாயகர் முன்பள்ளியை நிறுவி. அதை வளர்க்க அல்லும் பகலும் பாடுபட்டுவரும் மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளிச் செயலவை உறுப்பினர்களுக்குக் கனடா மாதகல் நலன்புரி சங்கத்தின் இதயம் நிறைந்த நல்வாழ்த்துகள்.

காலத்தின் தேவை கருதியும். கல்வியின் முக்கியத்துவம் விளங்கியும் தங்களால் முன்னெடுக்கப் பட்டுவரும் நற்பணிகட்குக் கனடா மாதகல் நலன்புரி சங்கம் என்றென்றும் பக்கபலமாக நிற்கும் என்பதை இத்தாற் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியும். நிறைவும் அடைகிறது.

வீடோ. கிராமமோ. இனமோ. நாடோ முன்னேற வேண்டுமென்று விரும்பி னால் முதலின் அதன் கல்விக் கட்டமைப்பிற்றான் சீர்திருத்தத்தை மேற் கொள்ள வேண்டும். இதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டதன் காரண-மாகவே மாதகலின் கல்விசார்ந்த நடவடிக்கைகளுக்காகக் கனடா மாதகல் நலன்புரி சங்கம் தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. தங்களின் முன்பள்ளிச் செயற்பாடுகளையும் அந்தவரிசையில் வைத்தே பார்க்கிறோம். அதன் காரணமாகவே தாங்கள் முன்பள்ளியை நிறுவும் முடிவைமேற் கொண்டு எம்மை அணுகிய போது எமது ஆதரவை யும் எமது உதவியையும் மனமுவந்து வழங்க முன்வந்தோம். தங்கள் முயற்சி வெற்றி யடைந் தமை குறித்துக் கனடா மாதகல் நலன்புரி சங்கம் தனது வாழ்த்துகளை வழங்கும் அதே வேளை இப்பணியில் கூடிய ஈடுபாடுகாட்டிய இளவல்களையும் வாழ்த்திப் போற்றுகிறோம்.

தங்களைப் போன்றவர்களால் வளர்த்தெடுக்கப்படும் இளம்தலைமுறை மாதகலின் பெருமைக்கும். தமிழினத்தின் விடிவிற்கும். மனிதகுல முன்னேற்றத்திற்கும் பொதுநல நோக்கோடு உழைக்கும் என்று மனதார நம்பி அத்தகைய ஒரு மழலையர் கூட்டத்தை உருவாக்க முன்னின்றுழைக்கும் இளையோரை மீண்டும் வாழ்த்துவதோடு திறப்பு விழா சிறப்பு விழாவாக அமைய வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். நன்றி.

நற்பணி தொடர நல்லாசிகள்!
இவ்வண்ணம்.

| | | |
|---|---|---|
| சபா. அருள்சுப்பிரமணியம். | வி. பாலகிருஸ்ணன் | க. சண்முகநாதன் |
| செயலாளர். | தலைவர் | பொருளாளர் |

Mailing Address: 95, Dairis Crescent, Markham, ON L3S 1S6, Canada Tel : (905) 479-5375E-mail: arul_mbsoc@yahoo.ca

## பிரான்ஸ் மாதகல் நலன் புரிச்சங்கங்கம்

## Association Bienveillante de Mathagal – France

**Président :** M.RAMACHANDRAN Ratnam

**Secrétaire :** M.KUGARAVEENDRANATHAN Veeravagu

**Trésorier :** M.KUGANESWARAN Vigneswaran

**19-03-2015**

**பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி**

எமது மாதகல் கிராமத்தில் எதிர்கால சந்ததிகளின் எதிர்காலம் கருதி, அவர்களின் கல்வி வசதிக்காக, விநாயகர் முன்பள்ளிக்கென குறைந்தகாலப் பகுதியில் கட்டிடம் கட்டப்பட்டு திறப்புவிழா கொண்டாடப்படுவதை எமது சங்கம் வாழ்த்துவதுடன், இதனை உருவாக்க முன்நின்று உழைத்தவர்களையும் பாராட்டக் கடமைப்படுகிறது.

2014ஆம் ஆண்டு நாம் இலங்கை வந்திருந்த போது சித்தி விநாயகர் ஆரம்பப் பாடசாலைக்கென கட்டிட வசதியின்றி 30 சிறுவர்களிற்கு மேல் இளைஞர் சங்கத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியில், இடப்பற்றாக்குறை காரணமாக நிலத்தில் உட்கார்ந்து கல்வி கற்றதைக் கண்டடோம். இப்போது சித்திவிநாயகர் முன்பள்ளி வேலைகள் முடிந்து புதிய கட்டிடத்திறப்பு விழா செய்தியைக் கேட்டதும் நாம் எல்லோரும் அளவிலா மகிழ்ச்சியடைகின்றோம். இந்த முன்பள்ளியை கட்டி முடிக்க எமது சங்கத்தினால் முடிந்தளவு பண உதவி செய்து பங்களித்ததில் நாம் திருப்தி அடைகின்றோம். இப் பாடசாலையின் மூலம் எமது எதிர்கால சந்ததிகள் கல்வியில் மிகப்பெரிய வளர்ச்சி அடைய எமது சங்கம் இன்னுமோர் தடவை வாழ்த்தி விடைபெறுகின்றோம். தொடரட்டும் உங்கள் பணி. எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு எமது சங்கம் என்றும் பங்களிப்பு செய்ய பின்நிற்காது. « **ஒற்றுமையே பலம்** »

**எமது மின்னஞ்சல்: mathagalafr@gmail.com**

பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கம்

# டென்மார்க் மாதகல் நலன்புரிச் சங்கம்
# சித்தி விநாயகர் முன்பள்ளி அங்குரார்ப்பண வைபவம்

மிக நீண்ட காலமாக சித்தி விநாயகர் மடத்தில் அரும்பாகி மாதகல் இளைஞர் வாசிக சாலையின் ஒரு பகுதியில் மொட்டாகி இன்று 2015ம் ஆண்டு இளம்தளிர் காலத்தில் மயில் பள்ளிக்கூட வளாகத்தில் மலர்ந்துள்ளது. இங்கு மலர்ந்துள்ள முன்பள்ளி பாலர்பாடசாலை எம் ஊர்ச் சிறார்களை நல்ல வாசனை வீசக்கூடிய மலர்கள் மலர்க் கொழுந்துகளாக உருவாக்கித் தரும் பணியைச் செவ்வனே செய்து தர எமது வாழ்த்துக்கள்.

பாலர் பிராயம் என்பது வெறுமனே அன்பு பாசத்தைக் கொட்டி, நல்ல உணவு, உடை அளித்துப் பராமரிக்கும் பருவம் மாத்திரம் அல்ல, பாலகர்களின் மூளை, நரம்புகள், கலங்கள் மிக வேகமாக வளர்ச்சி அடையும் பராயமாகும். அத்துடன் அவர்களின் ஐம்புலன்கள், சிந்தனைப் பரப்புகள் இணைந்து வளர ஆரம்பிக்கும் காலம். மேலும் அவர்கள் சூழலுடன் தக அமைப்புச் செய்ய பயிற்சிகள் பெறவேண்டிய காலகட்டமாகும். தனியாக அல்லாது நம்பிக்கையான அன்பான வளர்ந்தவர்களின் மேற்பார்வையுடன், வீட்டிற்கு வெளியே வளரும் காலமாகும். இதனை சமூகம மயமாக்கச் செயற்பாட்டின் கருக்கட்டல் காலம் எனலாம்.

இச் செயற்பாடு திறம்பட இயங்க உள - உடல் பயிற்சிகள் இன்றியமையாதது. அதாவது பிள்ளைகள் செயல் பயிற்சி ஊடாகவே வீர தீரர்களாக எதிர்காலத்தில் உருவாகுவார்கள். இந்த வித முறையில் வீரியமாகும் செயற்பாடு பிள்ளைகட்கு மாத்திரமல்ல குடும்பத்திற்கு, சமூகத்திற்கு, நாட்டிற்கு இன்றியமையாதது.

இந்த அளப்பரிய சேவை செய்வதற்குரிய கட்டடங்கள், தளபாடங்கள், விளையாட்டுப் பொறிகள் என எல்லாவற்றையும் தாராளமாக வழங்கிய புலம்பெயர் அமைப்புக்கள், தனியார்கள் என பலரிற்கும் எமது வாழ்த்துக்கள்.

இந்த புனித நிகழ்ச்சியை நடைமுறையாக்கிய எமது மாதகல் இளைஞர், இளைஞிகட்கும், அவர்கட்கு ஆதரவாக நெறிப்படுத்துவோராக இருந்த பெரியவர்களுக்கும், இச் சீரிய பணியைத் திறமையாகச் செய்துதர பொறுப்பெடுத்துள்ள பயிற்சி ஆசிரியர்கட்கும் பிள்ளைகளைச் சீரிய முறை யில் வளர்ப்பித்து எடுக்க கூட்டு முயற்சி செய்யும் இளம் பெற்றோர்கட்கும் மாதகல் நலன்புரி சங்க டென்மார்க் இளைஞரின் நல்லாசிகளும் வாழ்த்துக்களும்.

நீங்கள் முன்மாதிரியாக வளர்ந்து முன்னேறி வளர பிரார்த்திக்கின்றோம்.

டென்மார்க் மாதகல்
நலன்புரிச்சங்கம்

# மாதகல் நலன்புரிச் சங்கம்
# MATHAGAL BENEVOLENT SOCIETY

*Mathagal* — மாதகல்.



திகதி : 31/3/15

திரு.வி.சிற்றம்பலம்
தலைவர்

திரு.சா.அருள்ஞானானந்தன்
செயலாளர்

திரு.நா.சபாரட்ணம்
பொருளாளர்

## வாழ்த்துக்கள்

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழாவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதற்கு எமக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

எமது கிராம் சிறார்களின் உடல், உள மேம்படுத்தலுக்காக தற்காலத்திற்கு ஏற்ற வகையில் புதுப்பொலிவுடன் விளையாட்டு முற்றத்துடன் இணைந்து புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமை எதிர்கால சந்ததியினருக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இம்முன்பள்ளிக் கட்டடம் அமைவதற்கு அயராது பாடுபட்ட நிர்வாகத்தினருக்கும், தேவையான நிதியுதவியை வழங்கிய அமைப்புக்கள், கொடையாளிகள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவிப்பதில் பெருமகிழ் வடைகின்றோம். இம்முன்பள்ளி திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதிலும் பெருமகிழ்வடைகின்றோம்.

இம்முன்பள்ளி எதிர்காலத்தில் மேலும் பல வளங்களைப் பெற்று மிளிர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்

சா. அருள்ஞானானந்தன்
செயலாளர்,
மாதகல் நலன்புரிச் சங்கம்.

# மாதகல் கல்வி அபிவிருத்தி சங்கம்
MATHAGAL EDUCATIONAL DEVELOPMENT SOCIETY



## வாழ்த்துச் செய்தி

விநாயகர் முன்பள்ளியானது மாதகல் இளைஞர் சனசமூக நிலையத்தில் போதிய இடம், வளங்கள் அற்ற நிலையில் இயங்கிய போதிலும். இங்கு கல்வி கற்ற மாணவர்கள் விரிவுரையாளர்களாக, மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, மற்றும் வேறு உயர் பதவிகளிலும், உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் சேவையாற்றுகின்றார்கள். இங்கு கல்வி கற்ற மாணவர் களுக்கு அடித்தளம் இட்ட ஆசிரியையாக திருமதி. வேலும்மயிலும் இரண்டு தசாப்தங்களாக சேவை செய்து வருகின்றார். இவ் முன்பள்ளி ஆசிரியரின் அர்ப்பணிப்பு பல்வேறு துறைகளிலும் மாணவர் களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளது. இவ் ஆசானின் சேவையை பாராட்டுவதில் இத்தருணத்தில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் விநாயகர் முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுவிலுள்ள இளைஞர்களின் முயற்சியாலும், புலம்பெயர்ந்து வாழும் மாதகல் மக்களினதும், ஊர் மக்களினதும் பங்களிப்புடன் சகல வசதிகளுடனும் கட்டிடம் முழுமை பெற்று கம்பீரமாக மாதகல் மத்தியில் தோற்றம் பெறுகின்றது. சகல வசதிகளுடன் அமைந்த இக் கட்டிடம் முன்பள்ளி மாணவர்களின் கல்வி, விளையாட்டை மேம்படுத் துவதற்கு உறுதுணையாக அமையும். இம் முன்பள்ளி மாணவர்கள் இங்கு கல்வி கற்று முழுமை யான பயனைப் பெற வாழ்த்துகின்றோம்.

**இ.சஞ்சீவன்**
**இயந்திரப் பொறியியலாளர்,**
**பிரதிப் பிரதம செயலாளர் – பொறியியல் சேவைகள்,**
**வடமாகாணம்.**

**தலைவர்**
**மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்**

தலைவர் இ.சஞ்சீவன், பொருளாளர் சா அன்ரன் ஞானந்தனான செயலாளர் வி.ஜெயந்தன்
Email: - mathagaleducationdevelopment@gmail.com
Address: -PRESIDENT: - R Sanseevan, Kanchipuram Mathagal,
SECRETARY: -V Jeyanthan, Navalar Road, Mathagal

## இளைஞர் சங்கமும் சனசமூக நிலையமும் - மாதகல்

# வாழ்த்துப்பா

ஏர் பெருகு மாதகலின் ஏணியாய் திகழ்ந்திடவே
ஏற்றம் தரும் பாலர் பாடசாலை இங்குதயமாகிட்டது
சித்திவிநாயகர் பாலர் பாடசாலை எனும் பெயர் கொண்டே
சித்தியினை மண்ணிற்கு வழங்கிடவே புதுக்கட்டம் உதயமாகிட்டது.
பசுமை நிறை மாதகலின் பாலகர்களை பக்குவமாக்கிடவே
பசிந்து மனம் கொண்ட கொடையாளர்களால் உவந்தாக்கப்பட்டது
மாதகலின் மத்தியில் கல்விக்களம் மேலோங்கிடவே
மாட்சிமையுடன் மாபெரும் நவீன கட்டடம் மலர்ந்திட்டது.

புதுமைகள் காண விரும்பிடும் புதுத்தளிர்களுக்காய்
புலமை தந்திடவே புதிய இடத்தில் நிர்மாணம் கொண்டுள்ளது
சிறப்புடன் கல்விக் கணகளை மேலும் மலர்ந்திடச் செய்யவே
சித்தி விநாயகர் முன்பள்ளி முகாமைத்துவக்குழு முயன்றதன் பயனாமே

அன்னையர்கள் கருத்தோடு காத்திட்ட அரும்புகளுக்கு
அறிவு தரும் அன்னையாய் எங்கள் பாலர் பாடசாலை
விளையாட்டு முற்றம் நவீன கட்டடம் வியக்க வைத்திடுதே
விசேடமாய் திறப்பு விழாக்கண்டு மாதகலை உயர்த்திடுதே

அறிவு மலர்ந்திட அறியாமை அலர்ந்திட திறக்கட்டும் முன்பள்ளி
அளவற்ற ஆண்டுகள் சேவை தந்த முன்பள்ளி புது இடத்தில் புலரட்டும்
ஆண்டாண்டு காலமதாய் அறிவு பெருக்க வாழ்த்துகின்றோம்
அத்திவாரமிட்டு பிள்ளைகளை கட்டமைக்க வாயார வாழ்த்துகின்றோம்
புதுக்கட்டட திறப்புவிழா புகழோடு நிகழ்ந்திடவே
இளைஞர் சங்கத்தினர் நாம் உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

இளைஞர் சங்கமும்
சனசமூக நிலையமும் மாதகல்
கவிதை ஆக்கம் ( மாதகல் மயூரன்)



## வாழ்த்துச்செய்தி

முன்பள்ளிக்கான அத்திவாரம் முறைசார்கல்வியின் தரம் படிநிலைக்கு வித்திடுகின்றது என லாம். வெற்றிகரமான ஆரம்ப பிள்ளைப்பருவ அனுபவங்கள் பாடசாலையில் சாதனை படைப் பற்கு அடிப்படைகளாகின்றன. இவ் அனுபவங்களே பிள்ளையின் உடல், உள, சமூக, அபிவிருத்தி விருத்தியுறுவதற்கு வழி கோலுகின்றன. இதனடிப்படையில் அபிவிருத்தியின் மேம்பாட்டுக்குழு பலமுறை முன்பள்ளி தனது சேவையை வளர்க்கின்றபேரவா சித்திவிநாயகர் முன்பள்ளிக்கான முகாமைத்துவ குழு ஒன்றை அமைப்பதற்கு கருவாகியது. முன்பள்ளி வரும் பாலர்கள் தத்தம் செயற்பாடுகளை சுயமாக வெளிக் கொண்டுசெய்வதற்காக அழகிய விளையாட்டு முற்றம் அமைத்தமை நல்ல முயற்சி யாகும். வரும் சிறார்களின் எதிர் கால வாழ்வுக்கு அடித்தளமிடும் வகையில் ஆடலும், பாடலும் ஊடாக வழிகாட்டி அவர்கள் பயமதை அகற்றி செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் வகையில் சகல வளங்களும் கொண்ட சூழல் பாலர்களை செயற்படத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

ஊரில் போதிய வசதியுடன் நல்ல அம்சங்கள் அடங்கலான ஒரு முன்பள்ளி அமைவதற்கு காலாக இருக்கும். முன்பள்ளி முகாமைத்துவத்துவ குழுவின் அயராத முயற்சியும் நிர்வாகிகளின் அர்ப்பணிப்பான சேவையும் மதிப்பை ஏற்படுத்தியுள்ளன. எதிர்கால சிறார்களின் வளர்ச்சியில் பங் கெடுத்த முகாமைத்துவக்குழு என்றென்றும் பராட்டுக்குரியது. சித்திவிநாயகர் முன்பள்ளி தன்னை நாடி வரும் பாலர்களை வளமுள்ள வாழ்க்கையில் சிறப்பு பெற வழிகாட்டி சீரும் சிறப்புமாக இயங்க மக்களோடு சேர்ந்து வாழ்த்துகிறோம்.

வி.சிற்றம்பலம்
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர்



## வாழ்த்துச்செய்தி

தற்போது உள்ளகல்விச் செயற்பாடுகளில் முன்பள்ளி சிறந்த பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்க்கை பெற்றோர்களின் உள்ளக்கிடக்கையாக இருப்பதன் காரணமாக இக்கல்வியின் தேவைகல்விச் சமூகத்தினரால் உணரப்படுகின்றது. வீட்டுச் சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்டபிள்ளைகள் புதிய சூழலான முன்பள்ளிக்கு காலடி எடுத்து வைக்கிறார்கள் பல்வேறு பழக்கவழக்கங்களுடன் அதே கிராமத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் வருகைதந்து இணைகின்றனர். பிள்ளைகள் ஒன்று கூடிபல்வேறு ஆற்றல்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதன் மூலம் அனுபவக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கும், சீரான நடத்தை, ஒழுக்கம் மற்றும் செயற்திறன் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற் கும் முன்பள்ளி ஆசிரியர்களின் தியாகத்துடனான செயற்பாட்டை பாராட்டவேண்டும்.

இந்த முன்பள்ளியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த இக்கிராமத்தின் குறிப்பிட்ட செயற்பாட் டாளர்கள் நல்லநோக்கத்துடன் தாமாக முன்னின்று திட்டமிட்டு அதற்கேற்ப செயற்பட்டு பௌதிகவளம் மிக்க முன்பள்ளியினை அமைத்துள்ளார்கள். இதற்காக இக்கிராமத்தின் புலம் பெயர்ந்து வெளிநாடு களில் வாழ்பவர்கள் இங்கு வந்தபோது அதன் தேவையினை அறிந்துகொண்டு தங்களின் பெரும் நிதி வளத்தினை இக்கிராமப் பாலகர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கிய இவர்களது கல்விச் சிந்தனை யைப் பாராட்டுகின்றேன். முன்பள்ளியின் பௌதிக வளம் உயர் மட்டத்தில் அமைந்துள்ளமை அனை வருக்கும் மகிழ்ச்சிதரக் கூடிய விடயமாகும். இதன் பயனாக நிறைவான செயற்பாட்டுடனான கற்றல் தேர்ச்சிகளை பிள்ளைகள் பெற்றுக்கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கையாகும். முழுமையான தேர்ச்சிகளைக் கற்போர் அடைவதற்குஆசிரியர்களின் செயற்பாடுகள், பெற்றோரினது ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். தற்போது போதிய பௌதிகவளத்தைப் பெற்றுள்ள இந்த முன்பள்ளியானது ஏனைய முன்பள்ளிகட்கு சிறந்த வழிகாட்டியாக இருக்கவேண்டுமென எல்லாம்வல்ல சித்தி விநாகனை பிரார்த்தித்து மனதார வாழ்த்துகின்றேன்.


சி.தர்மசீலன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்



## இதழாசிரியரின் முகமன் ....

தனது புலன்கள் மூலமாக பெறும் அனுபவங்களின் அடிப்படையில் ஒரு குழந்தை அறிந்து கொள்பவைகளே அக் குழந்தையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன. இதற்கேற்ப வாய்ப்புக் களையும் வளங்களையும் பெற்றுக்கொடுப்பது அச்சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதுமட்டுமல்லாது குழந்தை ஒவ்வொன்றினதும் உடல்நலம், உளநலம், மற்றும் சமூக ஆன்மீக சூழல் என்பவை மேம்பட்டதாக அமையும் வகையில் இடம்பெறும் உறவாடும் நிலைக்குரிய சந்தர்ப் பங்களும் கிரமமாக பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறான புலன்வழி அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதில் தான் ஒரு குழந்தையினது விருத்திக்குரிய படிநிலைகள் அமை யப் பெற்றுள்ளன என்கின் றார்கள் குழந்தை உளவியலாளர்கள். இவ்வகையிலான புலன்வழி விருத்தி என்பது குழந்தைகளைப் பொறுத்தவரையில் நாளாந்தம் அவர்களது வாழ்க்கை நடைமுறையில் கிடைக்கும் அனுபவங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் சேர்மானமாகும். ( Combination ) என்பதே அடிப்படை உண்மை.

குழந்தை ஜனனத்துக்கான கருத்தரிப்பு முதல் அக்குழந்தை பாடசாலைக்குச் செல்லும் வரை யிலான காலப்பகுதி அதன் வளர்ச்சி விருத்தியில் முக்கியமானதாக உள்ளது. இக்காலகட்டத்தில் பெற்றோர் களின் விழிப்புணர்வுக் குறைவும் புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இன்மையும், குழந்தையின் இடர்பாட்டுக்கும் விருத்திக் குறைபாட்டுக்கும் ஏதுவாகலாம் என்ற கருத்துக்கள் முனைப்புற்று உணரப்பட்ட நிலையில் உருவாகியதே சித்திவிநாயகர் முன்பள்ளி முகாமைத்துவக் குழு. இக் குழுவினருக்கு முதல் சவாலாக இருந்தது இம்முன்பள்ளிக்கான காணியோ கட்டிடமோ எதுவுமற்ற அநாதரவான நிலை. எனினும் அறிவுசார் சமூகத்தின் வழிகாட்டலுடன் காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டு இன்று இம்முகாமைத்துவக்குழுவினரின் அயராத கடின உழைப்பின் நிமித்தம் இம் முன்பள்ளி அழகான கட்டிடத்தில் முழுமையான வளங்களுடன் செழுமைச் சீருடன் சோபையுடன் நி-மிர்ந்து நிற்கின்றது. இதற்கான நிதியை வழங்கிய புலம்பெயர் உறவுகள் ஈகையாளர்கள் மட்டு மன்றி இரவுபகலாக கடின உழைப்பை நல்கியவர்கள் என்றென்றும் மாதகல் மக்களின் மனங்களில் நிலை-றந்துள்ளார்கள்.

இவ்வாறு சிறப்புமிக்க வகையில் உருவாகியுள்ள கட்டிட திறப்புவிழாவை முன்னிட்டு வெளி வரவுள்ள சிறப்பு இதழினை உருவாக்கும் பொறுப்பை இம்முன்பள்ளி முகாமைத்துவக்குழு எனக்கு வழங்கியதையிட்டு அவர்களுக்கு முதலில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இவ்விதழின் புதுப்பொலிவுக்கு வலு சேர்க்கும் வகையில் ஆசியுரைகளையும் வாழ்த்துக் களையும் வழங்கிய சான்றோர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் இம்மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் யாவும் முன்பள்ளி செயற்பாடுகளை மட்டுமே அடியொற்றியதாக உள்ளடக்கப்பட்டுள்ளன


என்ற விடயத்தையும் தெரிவிக்கவேண்டியவனாக உள்ளேன். மாதகல் இணையத்தளத்தினூடு (Mathagal net.com) வெளியிடப்பட்ட அறிவிப்பும் முன்பள்ளிச் செயற்பாடுகள் பால் அக்கறை மிக்க கல்வியியலாளர்களின் ஆர்வமும் எனக்கு முன்பள்ளி தொடர்பான பல்வேறு ஆக்கங்களை பெற்று தந்தது. இதற்கு எனது நன்றிகள் மட்டுமல்லாது இந்நூலின் மூலம் பயன்பெறப்போகும் குழந்தை கள் மற்றும் பெற்றோர்களின் நன்றிகலந்த உணர்வலைகளும் உரித்தானவர்களின் மனங்களை நிரப்பவேண்டும் என்பதே எனது பிராத்தனை.

இவ்விதழில் இடம்பெறுகின்ற முன்பள்ளி நடைமுறைகள் எனும் தலைப்பில் உள்ளடங்கிய கட்டுரைகள், பொதுவிடயங்களை சார்ந்ததும் எனது அனுபவங்களைக் கொண்டு ஆலோசனைகளா கவும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த ஆண்டுகளில் இம்முன்பள்ளியில் நடைபெற்ற விழாக்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு புகைப்பட தகவல்களும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. இதன்பேறாக இவ்விதழில் அடங்கியுள்ள விடயங்கள் யாவற்றையும் வினையாற்றலுடன் செயற்படுத்துவதற்குரிய வழி காட்டல்களாகக் கொண்டு எமது சிறார்கள் உரிய முறையில் வழிநடத்தப்பட வேண்டும் என்பது முகா மைத்துவ குழுவினது பொறுப்பாகும.

நாளாந்தம் மாறிவரும் உலக நடப்புக்களுக்கு ஏற்ப தமது குழந்தைச் செல்வங்களை வழிப் படுத்த வேண்டும் என்ற ஆர்வமுடைய பெற்றோர் ஒவ்வொருவரும் விழிப்புடன் செயற்படுவதற்கு இவ்விதழில் உள்ளடங்கிய பலவிடயங்கள் உதவிபுரியும் என்பது எனது நம்பிக்கை.

இவ்விதழிலின் உருவாக்கத்தில் எனக்கு உதவி ஒத்துழைப்புக்களை வழங்கிய முகாமைத்து வக்குழு உபதலைவர் திரு.செ. சுபாஸ்கரன், செயலாளர் திரு.வி. ஜெயந்தன் ஆகியோர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கிய மதிப்புக்குரிய திரு.வி. சிற்றம்பலம் (மாதகல் நலன்புரிச் சங்க தலைவர்) அவர்களுக்கும் நூலுருவாக்கத்தில் பங்கெடுத்த திரு.க.க.ஈஸ்வரன், திரு.தி.அபராஜிதன் (தென் மராட்சிகல்வி வலயம்) அவர்கட்கும், காலதாமதமின்றி அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ மாருதி பதிப் பகத்தினருக்கு எனது நன்றிகள்

திரு.சு. கிருஷ்ணகுமார்
அன்பரங்கம்
மாதகல்



# சித்தி விநாயகர் முன்பள்ளி முகாமைத்துவ குழுவின் அறிக்கை

திரு.வி.ஜெயந்தன்
முகாமைத்துவ குழுச் செயலாளர்,
மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளி.

தனது குடும்பத்திற்குப் பிறகு ஆரம்பப் பாடசாலை ஒரு பிள்ளையின் உலகத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. அப்பிள்ளையின் ஆரம்பப் பாடசாலை நோக்கிய நகர்வின் முதலடியாக முன்பள்ளிகள் திகழ்கின்றன. ஒவ்வொரு பிள்ளையும் பாதுகாப்பான தனது குடும்ப வட்டத்தை விட்டு வெளியுலகைச் சந்திக்கும் முதல் இடமாக முன்பள்ளிகள் விளங்குகின்றன.

எமது சித்திவிநாயகர் முன்பள்ளியானது ஒரு நீண்ட காலவரலாற்றைக் கொண்டது. இது 1975ம் ஆண்டு தொடக்கம் தனியார் வீடுகளிலும் பின்னர் நீண்டகாலமாக மாதகல் அரசடிப்பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான மடத்திலும் இயங்கி வந்தது. 1992ம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வு காரணமாக செயலிழந்த இம் முன்பள்ளி மீண்டும் 1997ம் ஆண்டு தொடக்கம் மாதகல் இளைஞர் சங்கத்திற்குச் சொந்தமான 10X12 அளவுள்ள ஒரு சிறிய அறையில் இயங்கி வந்தது.

ஒரு பிள்ளையின் உளநலவிருத்திக்கும், உளநலச் செயற்பாட்டிற்கும் பாடசாலைச் சூழல் பெரும்பங்கு வகிக்கின்றது. பிள்ளைகளின் வயதின் தன்மைக்கும், இயற்கைத் தன்மைக்கும் ஏற்ற பரிமாணமுள்ள சூழ்நிலையில் பிள்ளைகளது வகுப்பறைகள் அமைக்கப்பட வேண்டுமென கல்வியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். சித்திவிநாயக முன்பள்ளி இயங்கி வந்த இளைஞர் சங்கத்திற்குச் சொந்தமான அறை ஒரு முன்பள்ளி கொண்டிருக்க வேண்டிய எந்த அடிப்படை வசதிகளையும் கொண்டிருக்கவில்லை. போதிய இடவசதி, போதிய காற்றோட்ட வசதி, குடிநீர் மற்றும் மலசலகூட வசதி, பிள்ளைகள் விளையாடுவதற்கான விளையாட்டு முற்றவசதி போன்ற எந்த அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் 10X12 விஸ்தீரணமுள்ள ஒரு சிறிய அறையில் 35 தொடக்கம் 40 மாணவர்கள் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார்கள். இந்நிலையில் 2013ம் ஆண்டின் பிற்பகுதியில் இம் முன்பள்ளிக்கு வருகை தந்த முன்பள்ளிகளுக்கு பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் முன்பள்ளியில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிடில் இம்முன்பள்ளியை மூடிவிடப் போவதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் போன்றோரின் முயற்சியினாலும் திரு. சு. கிருஷ்ணகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி) திரு. வி. சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி) ஆகியோரின் வழிகாட்டுதலுடனும் 04/11/2012 ந் திகதி சித்தி விநாயகர் முன்பள்ளிக்கான முகாமைத்துவக்குழு ஒன்று அமைக்கப்பட்டு முன்பள்ளி எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் விபரம் வருமாறு-:

- திரு.கி.பேரின்பநாதன் - தலைவர்
- திரு.செ.சுபாஸ்கரன் - உபதலைவர்
- திரு.வி.ஜெயந்தன் - செயலாளர்
- திரு.ச.மயூரதாஸ் - உபசெயலாளர்
- திரு.ந.சுஸாகரன் - பொருளாளர்

- திரு.வி.சிற்றம்பலம் - முகாமைத்துவக் குழு உறுப்பினர்
- திருமதி.வே.சறோஜினிதேவி - முகாமைத்துவக் குழு உறுப்பினர்
- திருமதி.வி.இராஜகுமாரி - முகாமைத்துவக்குழு உறுப்பினர்
- திருமதி.ச.கலையரசி - முகாமைத்துவக்குழு உறுப்பினர்
- திருமதி.பு.கிருபானந்தி - முகாமைத்துவக்குழு உறுப்பினர்

எமது முன்பள்ளி எதிர்நோக்கிய பிரதான பிரச்சினை முன்பள்ளிக்கென அடிப்படை வசதிக ளுடன் கூடிய நிரந்தரக் கட்டிடமொன்று இல்லாததேயாகும். எனவே சகல வசதிகளுடன் கூடிய நிரந் தரக் கட்டடமொன்றை முன்பள்ளிக்கென அமைப்பதையே முகாமைத்துவ குழு பிரதான இலக்காகக் கொண்டு செயற்பட்டது. ஆரம்பத்தில் புதிய கட்டடத்திற்கான நிதியுதவியை அரச, அரசசார்பற்ற நிறு வனங்களிடமும் அரசியல் வாதிகளிடமும் கோரிய போதும் பலனெதுவும் கிட்டவில்லை அரச, அரச சார் பற்ற நிறுவனங்கள் கைவிரித்து விட்ட நிலையிலும் எமது புலம் பெயர்ந்த உறவுகள் காத்திரமான பங்களிப்பை வழங்கி எமது முன்பள்ளிக்கான புதிய கட்டடம் தலை நிமிர்ந்து நிற்க வழி அமைத்துள் ளார்கள். முன்பள்ளிக்கான சகல வசதிகளையும் கொண்ட இக்கட்டடம் **4735671/** /- ரூபா செல வில் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் திரு. வி. சிற்றம்பலம் அவர்களின் நிதியுதவியுடனும் கனடா - மாதகல் நலன்பரிச்சங்கத்தின் ரூபா 1,000,000/- நிதியுதவியுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டடம் அமைக்கும் பணிகளை ஒரு கட்டத்தில் நிதியின்மை காரணமாக இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது கனடா - மாதகல் முன்னேற்றக்கழகம் ரூபா 2408320/- நிதியுதவி புரிந்து இக்கட்டடம் முழுமை பெற உதவியுள்ளது. புலம் பெயர்ந்த நாடுகளிலும் எமது கிராமத்திலும் உள்ள சில நல்ல உள்ளங்களும் தனிப்பட்ட ரீதியில் இக்கட்டடம் அமைய நிதியுதவி புரிந்துள்ளனர். மேலும் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம் விளையாட்டு உபகரணக்கொள்வனவுத் தொகையில் பெரும்ப- குதியை அதாவது ரூபா 300,000/- இனையும் கட்டிட நிறிக்காக ரூ 200,000/- இனையும் ஆக மெத்தம் ரூபா 500,000/. இனை வழங்கி உதவியுள்ளது. அத்துடன் தேசிய நல்லிணக்க அமைச்சு வலி தென்மேற்கு பிரதேச செயலகத்தினூடாக விளையாட்டு உபகரணத்திற்கென ரூபா 75,000 /- இனையும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை மலசலகூடம் அமைப்பதற்காக ரூபா 45,000/- இனையும் தந்து உதவியுள்ளன. இவர்கள் அனைவருக்கும் எமது முகாமைத்துவக்குழு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மாணவர்களின் உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் விளையாட்டு பெரும் பங்கு வகிக்கின்றது. இன்றைய முன்பள்ளிகளின் கற்றற்செயற்பாடுகள் விளையாட்டுகளினூடாகவே நகர்த்தப்படுகின்றன. எமது முன்பள்ளி முகாமைத்துவக்குழுவானது புதிய கட்டடம் அமைக்கும் செயற்பாடகளுடன் மட்டும் நின்று விடாது மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் செயற்பாடுகளிலும் கவனஞ் செலுத்தி வந்துள்ளது. முகாமைத்துவக்குழு அமைக்கப்பட்டது முதல் ஆண்டு தோறும் முன்பள்ளிச் சிறுவர்களுக்கான விளையாட்டு விழாக்களும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. இங்கு வெற்றி தோல்விகள் முதன்மைப்படுத்தப்படாது விளையாட்டு களில் சகல மாணவர்களும் பங்கு பற்றுவதும் குழுச்செயற்பாடுகளும் முதன்மைப்படுத்தப்படுகின்றன. 2013ம், 2014ம் அண்டுகளில் அணிநடை, இசையும் அசைவும், விநோதஉடை போன்ற நிகழ்ச்சி களிலும் சகல மாணவர்களும் விருப்பத்துடன் பங்கேற்றிருந்தனர். அத்துடன் 2013ஆண்டின் இறுதி யில் முன்பள்ளி மாணவர்கள் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் கடந்த இரு வருடங்களாக சிறுவர் தினம், வாணி விழா போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பான முறையில் முன்பள்ளியில் கொண்டாடுவதற்குரிய ஒழுங்குகளை எமதுமுன்பள்ளி முகாமைத்துவக் குழு மேற்கொண்டிருந்தது.

தற்போது பாண்ட் வாத்தியம் கொள்வனவு செய்யப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

முன்பள்ளிச் சிறுவர்கள் ஆடல் பாடல்களில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். எமது முன்பள்ளி மாணவர்களின் நுண்கலை நாட்டத்தை அதிகரிக்கும் முகமாகவும் அவர்களது தன்னம்பிக்கை குழுச்செயற்பாடு போன்றனவற்றை வளர்க்கும் முகமாகவும் எமது முகாமைத்துவக்குழு ஆண்டு தோறும் கலைவிழாக்களை நடத்தி வருகின்றது. இந்நிகழ்ச்சிகளில் மாணவர்கள் சுயமாக முன் வந்து தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எமது முன்பள்ளி மாணவர்களுக்கு பொருத்தமான ஒரு சீருடை தெரிவுசெய்யப்பட வேண்டுமென எமது முகாமைத்துவக்குழு தீர்மானித்தது. அதற்கமைய மாணவர்களின் பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், ஆடைஅலங்கார நிபுணர், முகாமைத்துவக்குழு உறுப்பினர் என்போர் அடக்கிய சீருடை தெரிவுக்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு அக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் தற்போதைய சீருடை வடிவமைக்கப்பட்டு அனைவரின் வரவேற்பையும் பெற்றது.

சித்தி விநாயகர் முன்பள்ளியின் முகாமைத்துவக்குழு அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகி ஒரு சில மாதங்கள் ஆகிவிட்டன. இக்காலப்பகுதியில் எமது முகாமைத்துவக்குழு தமக்கான இலக்குகளை நிர்ணயித்து அதனையடைவதில் வெற்றிகண்டுள்ளது. இதற்கு எமது புலம்பெயர்ந்த உறவுகள், ஊர்மக்கள், மாணவர்களின் பெற்றோர், முன்பள்ளி ஆசிரியர்கள், எமது வழிகாட்டிகள் ஆகியோரின் உதவியும் ஆலோசனைகளுமே காரணமாகும். இவர்களனைவருக்கும் முகாமைத்துவக் குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# சித்தி விநாயகர் முன்பள்ளியின் வரலாறு

திருமதி. வேலும்மயிலும் சறோஜினிதேவி
முன்பள்ளி ஆசிரியர்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்கை. அவ்விலங்கைத் திருநாட்டின் சிகரமான யாழ்ப்பாணக்குடா நாட்டின் தென்கிழக்கே அமைந்த சிறப்புடைய பதி மாதகல் மருதமும் நெய்தலும் கொஞ்சிக்குலாவுகின்ற காலங்காலமாய் நல்லறிஞர் பலரைத் தோற்றுவித்த எழி லுறு பதியாகும்.

ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற இரு அந்நியராட்சிக் காலங்களின் பாலமாய்த் திகழ்ந்த யாழ்ப்பாண வைபவமாலை எனும் ஈழத்து வரலாற்று நூலை ஆக்கிய மயில்வாகனப் புலவர் மற்றும் ஏரம்பையர் என்ற காலம் போற்றும் உயர் அறிஞர்கள், புலவர்களை உருவாக்கிய புண்ணிய பதியிலே மழலைகளின் அறிவை மேம்படுத்தும் நோக்கில் மயில்வாகனப் புலவர் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்ட ஆரம்பக்கல்விப் பாடசாலை இப்பாடசாலைகளில் முன் அரசு பாலர் வகுப்புகளை சேர்த்து நடத்தி வந்தது பின் அவ்வகுப்பு எல்லாப் பாடசாலைகளிலும் இடை நிறுத்தப்பட்டது ஆரம்ப பிள்ளைப் பருவம் மிக முக்கிய பருவம் அறிவு விருத்திப்படி நிலை யில் 3-5 வயது வரையான காலம் கற்றலுக்கான அடித்தளம் இடப்படவேண்டியதுடன் புல னுணர்ச்சியைத் தூண்டி தட்டி எழுப்பும் பருவம் என்பதையுணர்ந்த ஆன்றோர் முன் பள்ளியின் அவசியத்தை உணர்ந்து அவ்வகுப்புகளை தனிநபர் மூலம் ஆரம்பிக்கத் தொடங்கினர் அந்த வகையில் எமது கிராமத்தில் விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள சித்தி விநாயகர் ஆலய மடத்தில் இம் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது

அக்காலத்தில் திருமதி அன்னம் மயில்வாகனம், திருமதி கோகிலா யோகநாதன் என் போர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர் பின் இளைஞர் சங்க சனசமூக நிலையக்கட்டிடத்தின் ஒரு பகுதியினுள் திருமதி பரமேஸ்வரி தில்லையம்பலம் திருமதி.செந்தமிழ்ச்செல்வி.இரத்தின சிங்கம் ஆகியோர் ஆசியராக பணிபுரிந்த காலத்தில் இயங்கி வந்தது. 1992ல் இடம்பெயர்வு ஏற்பட்டதால் நான்கு வருடங்களாக முன்பள்ளி இயங்கவில்லை 1996ல் மீளக்குடியேற்றத்தின் பின் இளைஞர் சன சமூக நிலைய சிறிய மண்டபத்தில் மீண்டும் சித்திவிநாயகர் முன்பள்ளி ஆரம்பமாகியது அன்று தொடக்கம் இன்றுவரை மழலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாட டில் இணைந்துள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் விபரம் வருமாறு

| ஆண்டு | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை | ஆண்டு | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1996 | 10 | 1 | 2006 | 43 | 2 |
| 1997 | 15 | 1 | 2007 | 12 | 2 |
| 1998 | 22 | 1 | 2008 | 50 | 2 |
| 1999 | 24 | 1 | 2009 | 40 | 2 |
| 2000 | 29 | 1 | 2010 | 43 | 2 |
| 2001 | 33 | 1 | 2011 | 40 | 2 |
| 2002 | 35 | 1 | 2012 | 41 | 2 |
| 2003 | 40 | 1 | 2013 | 40 | 2 |
| 2004 | 37 | 1 | 2014 | 38 | 2 |
| 2005 | 40 | 2 | 2015 | 40 | 2 |

இம்முன்பள்ளி மழலைகளுக்குத் தேவையான காற்றோட்டம், இடவசதி, மலசலகூடம், வெளியகவிளையாட்டு என்பன இல்லாமல் அல்லற்படுவதைக் கண்ணுற்ற முகாமைத்துவக் குழுவினர் இதன் குறைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்குடன் எம்மண்ணில் உதித்து வெளிநாடுகளில் வசிக்கும் மக்களுடன் தொடர்பு கொண்டு மயில்வாகனப்புலவர் பாட சாலைக்கு என நன்கொடையாக கொடுத்துதவிய நிலத்தில் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டி சித்தி விநாயகர் முன்பள்ளியாகத் திகழச் செய்துள்ளனர். இதனை உருவாக்கி தந்த முகாமைத்து வக் குழுவிற்கும் புலம்பெயர் வாழ் எம்மக்களிற்கும் முன்பள்ளிச் சமூகம் பணிவன்புடன் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.



# முன்பள்ளிச்சிறார்களின் புலன் விருத்திச் செயற்பாடுகளுக்காக முன்பள்ளி ஆசிரியர்கள் பிரயோகிக்க வேண்டிய உத்திகள்

செல்வி.சு.சுலோச்சனா
அதிபர்,
யாழ்/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்

சித்திரம் பேசுதடி - என்
சிந்தை மயங்குதடி"

என்ற வரிகள் சித்திரம் பேசுதடிஎன்பது பதுமையான மழலைகளைக் குறிக்கின்றன. இக் குழந்தைகளின் மழலை மொழிக்கு மயங்காதவர் யாரும் இல்லை. இதைத்தான் வள்ளுவரும் தனது குறளில்

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

என மழலைச் சொல் கேளாதவர்களே குழலின் இசையும் யாழின் இசையும் இனிமையானது எனக் கூறியுள்ளார்.

இங்கு மழலைகள் என்போர் 0 -5 வயது வரை உள்ள பிள்ளைகளைக் குறிக்கும். மனித மூளையின் முக்கிய வளர்ச்சிப்பருவம் அக்குழந்தை தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போது ஆரம்பிப்பதாகவும் 5 வருடங்களில் வளர்ச்சி காணப்படும் எனவும் உளவியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். இக்காலப்பகுதியே முன்பள்ளிக் கல்வியைப் பெற ஏற்ற காலமாகும். அதாவது முன்பள்ளி என்பது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று ஆரம்பக் கல்வியைத் தொடங்கும் நிலைக்கு முன்னராகப் பெறுகின்ற முறைசார்ந்த நிறுவன ரீதியான செயல்பாட்டினை "முன்பள்ளிக் கல்வி என்று கூறலாம். அதாவது 0-3 வயதுவரை பிள்ளைக்கு வழங்கப்படும் பராமரிப்பினை ஆரம்பப் பிள்ளை பருவ பராமரிப்பும் விருத்தியும் எனவும் 3 - 5 வயது வரை வீட்டிற்கு வெளியே வழங்கப்படுகின்ற ஒழுங்கு படுத்தப்பட்ட கல்வியை முன்பள்ளிக்கல்வி எனவும் வழங்குகின்றோம்

இந்த முன் பள்ளிக் கல்வியைப் பெற ஆரோக்கியம் முக்கியமானது. ஆரோக்கியமான உள்ளம் ஆரோக்கியமான உடலிலேதான் இருக்க முடியும். ஒருவரின் உளவளர்ச்சி இயல்பிலேயே அமைய மாட்டாது. சூழலுடன் இடைவினை கொள்ளும் போதுதான் ஏற்படும். அதாவது பெற்றோரும் மற் றோரும் குழந்தைகள் மீது காட்டும் கரிசனையிலேயே பிள்ளையின் உடல் உள சமூக அபிவிருத்தி வலுப் பெறுகின்றது. இப்பொழுது அவர்களின் ஐம்புலன்களும் விருத்தியடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. அறிவின் வாயில்கள் என அறிஞர்களால் வர்ணிக்கப்படும் கண்,காது, மூக்கு, மெய், வாய், என்ற ஐம்புலன்களும் புறச் சூழலுடன் இசைவாக்கம் அடையும் போது விருத்தி ஏற்படுகின்றது. இந் நிலையில் இவர்களுக்கு புலக்காட்சிகள்மூலம் கற்பிக்க முடியும் இக்கல்விமுறை சிறந்ததென புறுனர், மொன்ரிசூரி அம்மையார், பீனே, ரூசோ, ஹோல், புரோபல், கேர்பார்ட், பெஸ்டலோசி போன்ற குழந்தை உளவியல் அறிஞர்கள் கூறியுள்ளனர். இவ்வாறு புலக்காடசி மூலம் கல்வியை வழங்க முன்வரும் ஆசிரியர்கள் எப்பொழுதும் பிள்ளைகளின் சுபாவத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். இவர்கள் பிள்ளைகளிடம்

1. ஆன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்.
2. பொறுமை,சுயகட்டுப்பாடு,சமநிலை, நேர்மை தவறாதவராக உடல் உள விருத்தியுடன நல்லொழுக்கமும்,அறிவாண்மையும் .ஆளுமையும் உடையவராக விளங்கவேண்டும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே ,அவர் நல்லவராவதும் தீயவராவதும் ஆசிரியர் வழிகாட்டலிலே" என்க் கூறுவது சாலப் பொருந்தும் இலங்கை ஆசிரியர் கீதமும் இதனைப் பினவருமாறு கூறுகிறது.

"முத்து முத்தான சித்திரங்கள் இலங்கை
முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை
நல்ல பாதையில் சேர்க்கும் பணி நமதே"

முன்பள்ளி ஆசிரயர்களாகிய எம்மிடம் ஒப்படைக்கப்படும் இப்பிள்ளைகளை இனம் கண்டுஅவர்களது புலன்விருத்தியூடாகவே கல்வியை அளித்து முன்வரச் செய்யும் பணி எம்முடைய தாகும். இவர்களது கற்றலை உள்வாங்கும் பலம் கண்களுக்கு உண்டு.ஒலியின் செறிவு அதன் இயக்கவீச்சும் செவிப்புலனூடாகவும் .முகர்தல் மூலமும் சுவையை அறிவதன்ஊடாகவும் முன்பள்ளி மாணவர்கள் கல்வியைப் பெறுகின்றனர்.இவற்றை வழங்க ஆசிரியர் பின்வரும் உத்திகளை இப்புலன்களினூடாக வழங்க வேண்டும்.

1. இசை
2. இசைவும் அசைவும்
3. நடிப்பு
4. உடற்கல்விச் செயற்பாடுகள்
5. இரசனை
6. கற்பனை
7. ஆக்கத்திறன்
8. கருதது வெளிப்படுத்தும் திறன்
9. குழந்தைகள் விரும்பும் நிறங்களில் உடை அணிதல்

போன்ற செயற்பாடுகள் மூலம் கற்றலை வழிப்படுத்தலாம்

* பாடல்களை இசையுடன் ஆசிரியர் பாடிக் கற்பித்தல்மாணவர்களைப் பாட வைத்தல் இவ் விசைக் கேற்ற அசைவு, ஆடல், மாணவர்களை ஆடச் செய்தல்
* பல்வேறு மிருகங்களின் வேடமணிந்துஉணர்ச்சியுடன் கதை கூறல் நடித்தல் மாணவர்களைக் கூற வைத்தல் அதேபோல மாணவர்களும் வேடமணிந்து கதை கூறல் நடிக்கச் செய்தல்.
* வானொலி தொலைக்காட்சிகள் மூலம் சிறுவர் நிகழ்ச்சிகளை ரசிக்கச் செய்தல்.
* மிருகங்கள் பறவைகள் போலச் செய்தல் மாணவர்களையும் இவ்வாறு செய்யத் தூண்டல் இதன் மூலம் அவர்களின் கற்பனைத்திறனை வளர்த்தெடுக்கச் செய்தல்.
* ஆக்கத்திறன் விருத்திக்கு கை வேலைகள் பேப்பர் .கிளேயில் உருவம் செய்தல்,சித்திரம் வரைந்து அதில் பல்வேறு தானியங்களைப் பயன்படுத்தி ஒட்டுதல். களிமண் ஆக்கங்கள் செய்தல் போன்றவற்றை மாணவர்களிடத்தே ஏற்படுத்தல் இதன் மூலம் மாணவர்களிடையே சிந்தனா சக்தி கற்பனா சக்தி, கலை உணர்வு உற்று அவதானித்துச்

செய்தல் கைகளுக்கான தசைப்பயிற்சி போன்ற பல்வேறு திறன்களை வளர்க்க உதவுதல் ஆசிரியர் கையாள வேண்டிய நுட்பங்களாகும்.

* பல்வேறு பாடல்களை இசையுடன் பாடி ஆடப் பழக்கல்

* பாடல்கள் பெரும்பாலும் துள்ளல் இசையுடன் கற்பித்தல் மாணவர்களின் துலங்கல் அதிகரிக்கும்.

* பல வண்ண நிறங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் கணனி,தொலைக்காட்சி, வானொலி போன்ற உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல் விளையாட்டுக்கள் மூலம் கற்பித்தல் மகிழ்ச்சிகரமான கற்பித்தலாக அமையும்

* முழு நாளும் வகுப்பறைக்குள் அமர்த்திக்கற்பியாது வகுப்பிற்கு வெளியே .இயற்கைச் சூழலில் (மரங்களின் கீழ்,விளையாட்டு இடங்களில் நன்கு வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள இடங்களில் இயற்கை அழகை ரசித்தபடி கற்பித்தல்.

* சுற்றுலா, ஆலயதரிசனம் ,கண்காட்சிகள் நிகழ்வுகளில் பங்குபற்றல் மூலம் பல்வேறு நுட்பங்களை முன்பள்ளி ஆசிரியர்கள் பின்பற்றி கற்பிக்க வேண்டும்.

* பிள்ளைகளின் மனவெழுச்சிக்குப் பொருத்தமான சேலைகள் நறுமணங்கள் என்பன பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் மாணவருக்கு ஆசிரியர் மேல் பயம் , வெறுப்பு, ஏற்படும்.அவர்கள் விரும்பும் நிறம் , மணம் என்பவற்றை இனம் காண்பதோடு ஆசிரியரையே நெருங்கி வந்து பழகுவர்.

* மாணவருக்குப் போசாக்கான சத்துள்ள உணவுகளை உண்ண பொருத்தமான ஆரோக்கியத்திற்குகந்த நிறமூட்டிகள் வாசனைப்பொருட்கள் என்பனவற்றைப் பயன்படுத்த பெற்றோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

* மாணவர்களுடைய ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பாராட்டுதல், வெகுமதி அளித்தல், உற்சாகமளித்தல் மேலும் செய்யத்தூண்டுதல் போன்ற பல்வேறு நுட்பங்களை ஆசிரியர் கையாள வேண்டும்.

* ஒவ்வொரு பிள்ளையினது மனதிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் பிள்ளைகள்மீது அன்பு ,கருணை, ஆதரவு,

* அரவணைப்பு பொறுமை என்பவற்றை ஆசிரியர் கடைப்பிடிக்கும் போது பிள்ளை ஆசிரியரை நெருங்கி தனது தேவையைக் கேட்டல் , பயம்நீங்கல் போன்ற உள நெருக்கீட்டிலிருந்து விடுபட்டு கற்றலில் ஈடுபடும்.

எனவே முன்பள்ளி மாணவர்களது பிஞ்சு உள்ளங்கள் நன்மை தீமை அறியாத பருவம். இப் பருவத்தை வழிப்படுத்தி ஆரம்பக் கல்விக்கு வழிகாட்டும் பணியை செய்ய முன்பள்ளி ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து சூழலுக்கேற்ற நுட்பங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் வேண்டும்.

# இளங்குயில் பாடும் சோலை

சித்திவிநாயகர் முன்பள்ளி! - நாங்கள்
சேர்ந்தேமகிழ்ந்திடும் முன்பள்ளி!!
உத்தமராய்நாம் வாழ்திடவே-நல்ல
ஊக்கம் தந்திடும்முன்பள்ளி!

(சித்தி....)

எண்ணெழுத் தறியும் சாலையிது! -பல
இளங்குயில் பாடும் சோலையிது!!
வண்ணப் பூக்களின் கூட்டமிது! -தமிழ்
வளரும் பயிர்நிறைதோட்டமிது!!

சிறுசிறுபாட்டுகள் பாடிடுவோம்! - தினம்
சிறுசிறுகதைகள் கேட்டிடுவோம்!!
சுறுசுறுப் பாய்நாம் இருந்திடுவோம்! - பிறர்
சொல்வதைக் கேட்டேநடந்திடுவோம்!!

(சித்தி....)

நாங்கள் படித்துமுன்னேற - இங்கு
நற்பணியாற்றும் முன்பள்ளி!
ஓங்கிஉயர்ந்திடஉதவிடுவோம்! -அதன்
உதவியைநெஞ்சிற் சுமந்திடுவோம்!!

மாதகல் அரும்புகள் நாம்மலர்ந்து-நல்ல
மணந்தரும் மலராய்விரிந்திடுவோம்!
சாதனைபுரியும் சிறுவர்களாய் - மாறிச்
சரித்திரம் படைத்துஉயர்ந்திடுவோம்!!

(சித்தி....)

"அருள்மணி"
(சபா. அருள்சுப்பிரமணியம் M.A.)

# முன்பள்ளி சிறார்களின் தனிநபர் சுகாதார பழக்க வழக்கங்களும் சுய செயற்பாட்டிற்கான உத்திகளும்

வைத்தியகலாநிதி தியாகராஜா இளங்கோ
போதனா வைத்தியசாலை.
மட்டக்களப்பு

ஒரு நாட்டின் அபிவிருத்தியானது அந்நாட்டிலுள்ள ஆரோக்கியமான மனித வளத்தில் தங்கியுள்ளது. மனிதவள ஆரோக்கியமானது அவர்களது சிறுபராயத்திலேயே கட்டியெழுப்பப்பட வேண்டியதொன்றாகும். இதற்குரிய செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகள் முன்பள்ளிகளில் ஆரம்பிக்கப்பட்டு வழங்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆரோக்கியம் தவிர இளம்பராயத்திலேயே சுயதிட்டமிடக்கூடிய ஆற்றலையும் வளர்த்தல் அவசியமாகும். ஆரம்ப காலங்களில் இச்செயற்பாடுகளுக்குரிய முக்கியத்துவம் குறைவாக வழங்கப்பட்டிருப்பினும் நவீன மாற்றங்களுடன் கூடிய இன்றைய காலப்பகுதியில் இவை அத்தியாவசியமானவையாகும்.

சிறுவர்களுக்குரிய சுயகவனிப்பு தொடர்பான பயிற்சிகள் (Self-care Skills) பொதுவாகத் தினசரி மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும். இது தினசரி வாழ்க்கைக்குரிய செயற்பாடுகள் (Activities of Daily Living) என அழைக்கப்படும். தாமாகவே உணவை உட்கொள்ளல், முறையான உணவுட் கொள்ளல் செயற்பாடு, கழிவறைகளைப் பயன்படுத்தும் விதம், உடலை சுத்தப்படுத்தும் விதம், கைகளை சுத்தப்படுத்தும் விதம், ஆடைகளை நேர்த்தியாக அணிதல், பற்களைச் சுத்தப்படுத்தல், தலை வாருதல் மற்றும் தன்னுடைய உடமைகளைப் பாதுகாப்பாகப் பேணுதலும் கையாளுதலும் போன்றனவற்றை அன்றாடம் மேற்கொள்ள வேண்டிய பழக்கவழக்கங்களாகக் கொள்ளலாம். இப்பயிற்சிகளானவை சிறுவர்களின் வளர்ச்சியுடன் விருத்தியடைய வேண்டியவையாகும். இச்செயற்பாடுகள் சுயாதீனமாக சிறுவர்களிடத்தில் ஏற்படுவதில்லை ஆரம்ப வயதிலேயே இவை தொடர்பான செயன்முறைகளைக் கற்றுக்கொடுத்தல் அவசியமாகும். இதன் மூலம் சிறுவர்களின் சுய கவனிப்பு தொடர்பான செயற்பாடுகளை ஊக்குவிக்க முடியும்.

மேலே கூறப்பட்ட பயிற்சிகளையும் பழக்கவழக்கங்களையும் பல்வேறு வகையான கற்பித்தல் முறைகள் மூலமும் செயன்முறைப் பயிற்சிகள் மூலமும் வழங்க முடியும். கற்பித்தலின்போது ஒவ்வொரு பயிற்சியினதும் படிமுறைகள் சிறுவர்களால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல், பயிற்சிகளை மீளவும் செய்து பார்ப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குதல், பயிற்சியை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்குப் போதிய கால அவகாசத்தை வழங்குதல், ஒவ்வொரு குழந்தைக்கும் பொருத்தமான பிரத்தியேக பயிற்சிகளை வழங்குதல், பயிற்சி முடிவில் சிறுவர்களின் நடத்தை மாற்றங்களை அவதானித்தல் என்பன மிக முக்கியமாகும். இவ்வகைப் பழக்கவழக்கங்களை சிறுவர்கள் அவர்களது ஆறு வயதிற்கு முன்பே கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். எனினும் சிறுவர்கள் இச்செயற்பாடுகளைக் கற்றுக்கொள்வதில் கால தாமதத்தை ஏற்படுத்துவரெனின் குழந்தைகள் நிபுணர் ஒருவரது ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது சிறந்தது.

சிறுவர்களுக்குப் பல் சுத்தப்படுத்தக் கற்றுக்கொடுக்கும்போது அதிகாலை எழுந்தவுடனும் உணவுண்ட பின்பும் இரவு நித்திரைக்கு முன்பும் சுத்தப்படுத்தக் கற்றுக்கொடுக்க வேண்டும். குறைந்தது தினசரி இரு தடவைகள் பல் சுத்தப்படுத்தப் பழக்க வேண்டும். இதன்போது சிறுவர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பற்பசைகளைப் பயன்படுத்துவதோடு அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட தூரிகைகளையும் பயன்படுத்த வேண்டும். சாம்பல் மற்றும் பற்பொடிகள் பயன்படுத்துவதனை முற்றாகத்

தவிர்க்க வேண்டும். இரண்டு நிமிடங்களுக்குப் பற்களைச் சுத்தப்படுத்துதல் அவசியமாகும். இதில் ஒரு நிமிடம் மேல் பற்களைச் சுத்தப்படுத்தவும் மற்றைய ஒரு நிமிடம் கீழ் பற்களைச் சுத்தப்படுத்தவும் கற்றுக்கொடுக்க வேண்டும். சிறுவர்களுக்கு ஆறு வயதாகும் முன்பே பற் சுகாதாரம் பற்றிய முழுமை யான பயிற்சி களை வழங்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும், சிறுவர்களுக்குக் கழிப்பறையை முறையாகப் பயன்படுத்தக் கற்றுக்கொடுப்பது ஆரோக்கியமானதாகும். அத்துடன் முறையற்ற கழிப்பறைப் பாவனையால் ஏற்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகளைப்பற்றி சிறுவர்களுக்கு விளக்கமளிக்க வேண்டும். கழிவகற்றலின் பின் உடல் மற்றும் கைகளைச் சுத்தப்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். கிருமியழிப்பிற்காகப் பரிந்துரைக்கப் பட்ட லைபோய் போன்ற சவர்க்காரங்களை சுத்தப்படுத்தலுக்காகப் பயன்படுத்தலாம். (சவர்க்காரங்களை) சிறுவர்களின் பாவனைக்கேற்ப சிறிய அளவில் வெட்டி வைத்துக்கொள்ளலாம்.

சிறுவர்களுக்கு உணவு உள்ளெடுத்தல் தொடர்பான பயிற்சியளிக்கும்போது உணவை வீணாக் காமல் கீழே சிந்தாமல் உண்ணப் பழக்குவதோடு ஆரோக்கியமான உணவுகளைத் தேர்ந் தெடுத்து உண்ணப் பழக்க வேண்டும். கொழுப்பு, மாப்பொருள் மற்றும் புரத உள்ளடக்கம் கொண்ட பிரதான உணவு வகைளை சிறுவர்கள் அறிந்திருத்தல் சிறந்தது. பெரும்பாலான சிறுவர்கள் ஆரோக் கியமான உணவுகளில் நாட்டம் காட்டமாட்டார்கள். எனவே அவர்களை ஈர்க்கக்கூடிய ஆரோக்கிய வாசனைப் பொருட்களையும் நிறப்பொருட்களையும் இவ்வுணவுகளுடன் சேர்த்து சிறுவர்களுக்கு வழங்கலாம். சிறுவர் களின் உப்பு மற்றும் இனிப்பு போன்றவற்றைக் குறைவாகவே பயன்படுத்த வேண்டும். சிறுவர்கள் அதிகமாக உணவைத் தவிர்க்கும் போது சில பரிந்துரைக்கப்பட்ட பசிதூண்டிகளை வைத்தியரின் ஆலோசனை மூலம் வழங்கலாம். மேலும், சிறுவர்களின் உணவு உள்ளெடுக்கும் நேரத்தைத் தினமும் மாறாமல் வைத் திருக்க வேண்டும். அடிக்கடி உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளை உள்ளெடுத்தலைத் தவிர்க்க வேண்டும்.

சிறுவர்களுக்குரிய உணவில் புரதச் சத்து அதிகமாக இருப்பதோடு பழங்கள், கீரை மற்றும் மரக்கறி வகைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். சிறுவர்கள் தமக்குரிய உணவைத் தாமே உணவுப் பெட்டிகளில் இட்டு பாடசாலைக்கு எடுத்துச்செல்லப் பழக்குவதோடு உண்ட பின்பு பெட்டியைச் சுத்தப்படுத்தவும் பழக்க வேண்டும். உணவு உண்ண முன்பு ஒரு நிமிடத்திற்கேனும் அமைதியாகக் கடவுளைப் பிரார்த்திப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

சிறுவர்களுக்கு தண்ணீர் குடிப்பதன் முக்கியத்துவத்தை உணரச்செய்து தினமும் போதியளவு சுத்தமான கொதித்தாறிய நீரைக் குடிக்கப் பழக்க வேண்டும். அத்துடன் தண்ணீருக்குப் பதிலாக இயற்கையான பழச்சாறுகளை அருந்தப் பழக்குவது ஆரோக்கியமானது. குடிநீரையும் வீணாக்காமல் அருந்தப் பயிற்சியளிப்பது அவசியமாகும். சிறுவர்களுக்கு குடிநீர் கொண்டு செல்வதற்காக தரமான பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்த வேண்டும்.

வீடுகளில் செல்லப்பிராணிகள் வளர்க்கப்படும்போது குறிப்பாக நாய் மற்றும் பூனைகள் காணப்படும்போது அவற்றினால் பரவக்கூடிய நோய்கள் பற்றியும் சிறுவர்களுக்கு எச்சரிக்கையளிக்க வேண்டும். இப்பிராணிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட தடுப்பு மருந்துகளை மிருக வைத்தியர் மூலம் வழங்க வேண்டும். சிறுவர்களுக்கு செல்லப் பிராணிகளுடனான நெருங்கிய தொடுகையைத் தவிர்ப் பதற்குப் பழக்க வேண்டும்.

சிறுவர்கள் வீட்டில் மற்றும் வகுப்பறைகளில் பயன்படுத்தும் தமது உடமைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கப் பயிற்சியளிக்க வேண்டும். அத்துடன் அவர்களின் உடமைகளை அடையாளப்படுத்து வற்குரிய உத்திகளை சிறுவர்களுக்குக் கற்றுத் தரவேண்டும். ஏனைய சிறுவர்களின் உடமைகளைத் தேவையற்றுப் பயன்படுத்துவதையும் அவர்களின் அனுமதியின்றித் தொடுவதனையும் முற்றாகத் தவிர்க்கப் பழக்க வேண்டும். சிறுவர்களின் பாடசாலை உபகரணங்களின் பாவனை முறையையும் பராமரிக்கும் முறையினையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதோடு அவர்களின் உடமைகளை வீட்டிலும் பாடசாலையிலும் தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வைப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட பயிற்சிகளைக் கற்பிப்பது மட்டும் போதுமானதன்று. இந்த அன்றாட செயன்முறைகளைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிப்பதற்குரிய ஆர்வத்தையும் சிறுவர்களிடத்தே ஏற்ப டுத்த வேண்டும். இதற்காக சிறுவர்களுக்குரிய பயிற்சிகளை நகைச்சுவையாகக் கற்றுத் தரமுடியும். இதற்காக அவர்களுக்கு ஆர்வமுள்ள பொருட்களைப் பயன்படுத்தலாம். உதாரணமாக கை சுத்தப் படுத்தும் பயிற்சியளிக்கும் போது வேறுபட்ட நறுமணமுடைய மற்றும் நுரையை உருவாக்கக் கூடிய சவர்க்காரத்தைப் பயன்படுத்தலாம். அதேபோன்று பல் சுத்தப்படுத்தும் செயற்பாட்டில் வெவ்வேறு நறுமணமுள்ள பற்பசைக ளைப் பயன்படுத்த முடியும். இவ்வாறான செயற்பாடுகள் சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதோடு அவற்றைத் தொடர்ச்சியாக பின்பற்றவும் உதவுகின்றது.

சிறுவர்களுக்குரிய விளையாட்டுகளும் உடற்பயிற்சிகளும் சுய சுகாதாரப் பயிற்சிகளுடன் சேர்க்கப்படுவது வரையறையின்றிய பயனைத் தரக்கூடியது. குழந்தை ஒன்றுக்குப் பயிற்சி அளிக்கப் போகும் செயற்பாட்டைத் தெரிவு செய்யும்போது அவனது ஆர்வத்தையும் வலிமையையும் கருத்திற் கொள்வது அவசியமாகும். உதாரணமாக குழந்தை ஒன்று தனியாக விளையாடக்கூடிய விளை யாட்டுகளில் ஆர்வமாக உள்ளதா அல்லது பந்தாட்டம் மற்றும் காற்பந்தாட்டம் போன்ற குழு விளை யாட்டுகளில் ஆர்வமாக உள்ளதா என்பதனை அறிந்து அதனுள் ஈடுபடத் தூண்டலாம். எனினும் குழு விளை யாட்டில் சிறுவர் களின் உடல் ஆரோக்கியம் மேம்படுத்தப்படுவதோடு சமூகத் தொடர் பாடல் பழக்கங் களும் விருத்திய டையும். பொதுவாகக் குழந்தைகள் தம்மிடத்தில் அறிமுகமாபவரிடம் இலகுவில் நட்பை வளர்த்துக்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருப்பார்கள்.

எனினும் எல்லாக் குழந்தைகளிலும் இப்பழக்கங்களை எதிர்பார்க்க முடியாது. இவ்வாறான குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது இது அவர்களது ஆளுமையைப் பெரிதும் பாதிப்ப தோடு தமது கருத்துகளைக் கூட வெளிப்படுத்த முடியாத தன்மையை உருவாக்கிவிடும். அத்துடன் இது பல வழிகளிலும் சிறுவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்துவிடுவதோடு மனதள வில் தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்தும். குழந்தைகளின் இவ்வாறான தனிமைப்படுத்தப்ப டும் நிலைக்கு பெற்றோர்களும் காரணமாகின்றனர். குறிப்பாகத் தொழில்பார்க்கும் பெற்றோரின் பிள்ளைகளில் இவ்வாறான சிக்கல்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகக் காணப்படலாம். எனவே பெற்றோர் இதனை உணர்ந்து குழந்தைகளிடம் அதிகம் உரையாட வேண்டும்.

இதன் மூலம் சிறுவர்களின் மனநிலையைப் பூரணமாக உணர்ந்து கொள்ள முடியும். அத்து டன் குழு விளையாட்டுகளில் குழந்தைகளை அதிகம் ஈடுபடுத்துவதோடு பூங்கா மற்றும் ஏனைய பொழுது போக்குக்குரிய பொது இடங்களில் குழந்தைகளை அழைத்துச் சென்று அவர்களை மற்றைய சிறு வர்களின் நடத்தையை அவதானிக்க விடலாம். அவர்களுடன் சிறிய நட்புடன் பழகவும் அனு மதிக்க முடியும். இவ்வாறான செயற்பாடுகள் நிச்சயம் சிறுவர்களின் ஆளுமையையும் தைரியத்தையும் விருத்தி செய்யும். சிறுவர்களுக்கு தினமும் குறைந்தது எட்டு மணித்தியாலங்கள் தூங்குதற்குப் பழக்க வேண்டும். அத்துடன் பகல் தூக்கத்தை முற்றாகத் தவிர்க்க வேண்டும். ஓரளவு முதிர்நத சிறுவர்களின் ஆரோக்கிய மேம்பாட்டிற்காக தினசரி 20 நிமிட உடற்பயிற்சி மற்றும் சுகாதாரமான பழங்கள் மற்றும்

மரக்கறி வகைகளை தினசரி மூன்று வேளைகள் உள்ளெடுத்தல் போன்ற பழக்கங்களை ஏற்படுத்த வேண்டும். இவற்றைத் தவிர சிறுவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே தியானம் மற்றும் யோகா பயிற்சிக ளைக் கற்றுத் தருவது மிகவும் பயனுடையதாகும். இப்பழக்கங்கள் அவர்களது ஆரோக்கியமானதும் ஆளுமையானதுமான வாழ்க்கைக்கு வழியமைக்கும்.

சிறுவர்களுக்குரிய பயிற்சியின்போது அவர்களைக் கவரக்கூடிய வகையில்மாதிரிகளுக் குரிய படங்களைக் காட்சிப்படுத்தி விளக்கமளிப்பது சிறந்தது. இது தவிர சில சிறுவர்கள் சில பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்வதற்கு அவர்களின் சகோதரர்கள் அல்லது அவர்களின் வயதினை ஒத்த நண்பர்கள் முன்மாதிரியாகக் காணப்படுவார்கள். சுய சுகாதாரப் பயிற்சிகளை விளக்கக்கூடிய காணொளி ஒளிபரப்புவதன் மூலம் கைகளைச் சுத்தமாகக் கழுவுதல், உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கிய மான உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்தல் போன்ற செயற்பாடுகளை மனதில் நிறுத்தி நினைவில் வைத்துக்கொள்வர்.

சிறுவர்களின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காக அவர்களை ஈர்க்கக்கூடிய கார்டூன் சித்திரங்கள் மற்றும் கோட்டுப்படங்கள் கொண்ட பதாகைகளைக் காட்சிப்படுத்துதல் அவசிய மாகும். இதன் மூலம் சிறுவர்களின் ஆரோக்கியமான நடத்தைகளை மேம்படுத்தலாம். குழந்தைகள் தமது அன்றாட பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யும்போது அவர்களது இயலாமை மயைக் கேலிபேசுதலை அல்லது கண்டித்தலை முற்றாகத் தவிர்க்க வேண்டும். மாறாக எளிய வழி களில் பயிற்சிகளைக் கற்றுக்கொடுத்தல் அவசியமாகும்.

ஒரு மனிதனின் பங்கு அவன் வாழும் சமுகத்திற்கும் அவனது நாட்டின் முன்னேற்றத்திற்கும் காணப்பட வேண்டுமாயின் அவனுக்கே உரிய திறமையை வளர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். குறிப்பிட்ட திறமைகள் குறிப்பிட்ட சிறுவர்களிடத்தே காணப்படும். எனவே அந்தத் திறமைகளை இனங்கண்டு அதனை வளர்த்து விடுவது பெற்றோர்களின் முக்கிய பணியாகும். உதாரணமாக சில குழந்தைகள் கையில் பேனா அல்லது பென்சில் கிடைத்து விட்டால் சிலேட்டிலோ தாளிலோ கிறுக்கிக் கொண்டிருப்பார்கள் இந்தக் குழந்தைகளுக்கு ஓவியத்தில் அதிகம் ஆர்வம் காணப்படுகின்றது என்பத னைப் பெற்றோர் இனங்கண்டு அதனை ஊக்கப்படுத்த முடியும்.

நடனம், நடிப்பு, விளையாட்டு, பேச்சுக் கலை மற்றும் இசை போன்ற துறைகளிலுள்ள ஆர்வத் தைச் சிறுவர்களின் நடத்தை மற்றும் செயற்பாடுகளிலிருந்தே அறிந்து கொள்ளமுடியும். இவ்வாறு பெற்றோர்களோ ஆசிரியர்களோ அறிந்து கொண்டாலும் சிறுவர்களிடமே கேட்டறிந்து கொள்ளுத லும் சிறந்தது. அத்துடன் குழந்தைகள் தமது திறமையை வெளிப்படுத்தி பரிசில்கள் பெறும்போது அவர்களைப் பராட்டுவதோடு அவர்கள் தோல்வி அடைந்தாலும் அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்துவதும் அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட சிறுவர்களுக்குரிய அடிப்படைப் பழக்கவழக்கங்களையும் பயிற்சிகளையும் வழங்குவதன் மூலம் சமுகத்துக்கு வேண்டிய ஒரு ஆரோக்கியமான மனித வளத்தை உருவாக்க முடியும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

# மேற்கு நாடுகளில் குறிப்பாகக் கனடாவில் முன்பள்ளி

யோகா.அருள்சுப்பிரமணியம் (கனடா)
M.Sc. in Yoga, Dip.in Montessori

"எந்தக் குழந்தையும் நல்லகுழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே - அவர்
நல்லவர் ஆவதும் தீயவர்ஆவதும் அன்னைவளர்ப்பினிலே......"

இப்பாடலடிகள் முற்றிலும் உண்மையானவைஎன்பதைநாம்அன்றாடம் கண்ணாரக் கண்டு வருகிறோம். இதனால் அன்னையின் உருவாக்கமே ஒரு குழந்தையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் படிக்கல்லாக அமைகிறது என்பதை யாவரும் ஏற்கவும் செய்கிறோம். அன்றைய அமைதி யான வாழ்க்கை முறையும், சந்தடிகளற்ற சூழ்நிலையும் மனித வாழ்வை ஒரு குழப்பமற்ற அமைதி நிறைந்த ஆற்றுநீர் போன்று ஓடிக்கொண்டிருக்கத் துணை செய்தன. ஆனால் இன்றோ இதற்கு நேர்மா றான ஒரு வாழ்க்கையை மனிதன் வாழ வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். இது யாவரும் அறிந்ததே. அறிவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க வேண்டிய கட்டாயத் தேவை மனிதனுக்கு இன்று ஏற்பட்டுள்ளதால் அவன் வாழ்வியல் முறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்திவிட்டன.

அன்று அன்னையின் மடியில் ஆடி அசைந்து, அன்னயின் தோள்களிலும் தந்தையின் அரவ ணைப்பிலும், சகோதரங்களினதும் உற்றார் உறவினர்களினதும் பாசத்தில் திளைத்து வளர்ந்த குழந்தைகள் இன்று பிறந்து ஆறாம் மாதத்திலோ அதற்கு முன்னதாகவோ குழந்தைகள் காப்பகங் ளிற்கு அனுப்பப்பட்டு விடுகின்றனர். மேலைத் தேசங்களில் கணவன் மனைவி இருவரும் இன்று ஓடி ஓடி உழைக்க வேண்டிய கட்டாயநிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அன்னைய ரது உருவாக்கும் கடமை குழந்தைகள் காப்பகங்களிற்குக் கைமாறியுள்ளதைநாம் கண் கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே காப்பகங்கள் எனக் குறிப்பிடும்போது அங்கு பொறுப்பு மிக்க வர்களாகக் கருதப்படுபவர்கள் அங்கு பணிபுரியும் ஆசிரியர்களே. அவர்கள் பிள்ளைகளின் எதிர் காலத்தில் மிக்க அக்கறை கொண்டவர்களாகவும், கடமை உணர்ச்சி மிக்கவர்களாகவும் செயலாற்ற வேண்டிய பொறுப்பைச் சுமந்தவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். குழந்தையின் "போலச்"செய்யும் பண்பு அபிவிருத்தியடையும் காலம் (imitation ages) இந்த2 - வயது முதல் 4 வயது வரையிலானதா கும் என்று அறிஞர் மு.வ. அவர்களும் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். இது மனித வாழ்வின் ஆரம்பத் தில் ஒரு பொன்னான காலமாகும். குழந்தை மனதில் பதியும் விடயங்கள் ஆழமாகப் பதிந்துவிடும் காலமும் இதுதான். இவ்வாறு உருவாக்கப்படும் பதிவுகளே ஒருவருடைய தன்மைகள், திறமைகள் அனைத்துக்கும் அத்திவாரக் கல்லாக அமைந்துவிடுகிறது.அத்தகைய ஒருமுக்கியமான காலத்தை ஆசிரியர்களே திட்டமிட்டு மிகக்கவனமாக அமைக்க வேண்டியநிலை இன்றைய வாழ்க்கை முறை யில் ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பாரிய பொறுப்பைச் சுமக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் எதிர் கால வாழ்வு சிறப்பாக அமையப் பெரும்பங்காற்றியவர்களாக மாறுகிறார்கள். இதை மனதிற் கொண்டு ஒவ்வொரு காப்பகப் பணியாளரும் தத்தமது கடமைகளைச் சரியாகச் செய்யும் போது ஒரு சிறப்பான. ஆரோக்கியமான நல்ல சமுதாயம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்பத் துணைபுரிந்தவராக மாறுகிறார். மேலும் இவர்கள் தாமும் தமதுகடமைகளைச் சரிவரச் செய்தோம் என்னும் மனத்திருப்தியை அடையவும் இது வழிவகுக்கின்றது.

மேலை நாடுகளில் இந்த உண்மை உணரப்பட்டதன் காரணமாகவே முன்பள்ளிகளிற் பணியாற் றுவோர் எத்தகைய தகைமைகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று வரையறை செய்துள்ளனர். தாயகத்தை பொறுத்தவரையில் சாதாரண அறிவுடன் க.பொ.தசாதாரணதரம் படி- த்த வர்கள் குழந்தைகள் காப்பகங்கள் (Nussary/Daycare) நடத்தலாம், அல்லது அதிற் பணிபுா-

யலாம். ஆனால் மேலைநாடுகளைக் குறிப்பாகக் கனடாவைப் பொறுத்தவரையில் அப்படிச் செய்ய இயலாது. ஒருவர் High School Diploma பெற்றபின்னர் இரண்டுவருடம் Early Childhood Education (E.C.E) பட்டயப்படிப்பு முடித்த பின்னர் தான் இப்படியான காப்பகங்களில் தொழில்புரிய அனுமதி அளிக்கப்படுகிறது. இதற்குமுன்னர் (E.C.A) Early Childhood Assistant என்னும் பட்டயப்படிப்பை ஒருவருடத்தில் முடித்தவர்களோஅல்லது சில கல்லூரிகளில் துரித கதியில் (Fast Track Course) பெறும் பட்டயப்படிப்பை நிறைவு செய்தவர்களோ தொழில் புரியவாய்ப்பிருந்தது. ஆனால் அந்த நிலை இன்றுமாறி (E.C.E) தகதி படைத்தவர்களுக்கு தொழில் வழங்கும் நிலை வளர்ந்து வருகின் றது. தொழிற் சந்தையில (Labour Market) E.C.E உள்ளவர்கள் தரமெ முதலாவது இடத்தைப் பெற்றுள்ளதை தற்போதைய காலகட்டத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இதுவே இங்கு பணிபுரிபவர்களின் நிலையாகக் காணப்படுகிறது. அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் CPR/First யுனைபயிற்சிபெற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதும் கண்டிப்பாகநோக்கப்படுகிறது. அத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இவர்கள் தமதுதகுதிநிலையைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும் மிகக் கண்டிப்பாக இங்கு கடைப்பிடிக்கப்படுகின்றது.

இவை மாத்திரமன்றி இரண்டு வருடங்கள் பட்டயப் படிப்பை முடிந்தவர்களுக்கு அல்லது ஒரு சிறுவர் காப்பகத்திற் பணிபுரிந்தபட்டறிவைக் கொண்டவர்களுக்கு அரசாங்கம் சில சலுகைகளுடன் கூடியதொழில் பயில்வோருக்கானபயிற்சி (Apprenticship Training) ஐக் கொடுத்து அவர்களைத் தரம் உயர்த்துவதற்கான பல பயிற்சித் திட்டங்களைக் கொண்டுள்ளது. இங்கு கனடாவில் மூன்று வித மான ஆட்சி அமைப்புகள் காணப்படுகின்றன. அவையாவன கூட்டரசு, மாகாணசபை, நகராட்சி மன்றம் என்பனவாகும். பயிற்சியாளர்களுக்கான கற்பித்தல் முறைக்கு உற்சாகம் ஊட்டும் தர முயர்த்தும் பயிற்சித்திட்டங்களை மூன்றுவிதமான அரசாங்கத்திடமும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புத் தேர்ச்சியடைந்த ஆசிரியர்கட்கு உண்டு. ஒரு கனேடியர் அல்லது நிரந்தர வதிவுரிமைபெற்ற ஒருவர் மேற்கூறிய வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகளை அரசாங்கம் வழங்கி வருகிறது. இவை தவிர 'Occasional Childcare' என்னும் ஒரு திட்டமும் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதாவது ஒரு நிகழ்ச்சிக்கு அல்லது ஒரு பயிற்சித் திட்டத்துக்கு ஒரு தாயார் போகும்போது அதற்கு அண்மித்த இடத்தில் அவர் தனதுகுழந்தையைப் பாதுகாப்பாகவிட்டுச் செல்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன . இந்த ஒழுங்குகளைப் பெறும் பெற்றோரிடமிருந்து அதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

புதிய குடிவரவாளர்களை உள்வாங்கும் நாடுகளுள் ஒன்றாக விளங்கும் கனடா இங்கு வந்து பல்லின சமூகத்தோடு இணையப் போகும் ஒருவர் ஆங்கில அறிவைப் பெற்றவராக மிளிரவேண்டும் என்பதிலும் கவனமாக இருந்து வருகிறது. அதற்காக அதாவது புதியகுடிவரவாளர்களின் ஆங்கில அறிவை மேனிலைப்படுத்துவதற்காகப் பெருமளவு பணத்தை முதலிட்டு "LINC" (Language Instruction for Newcomers) வகுப்புகளை நடத்திவருகிறது. இந்த வாய்ப்பைப் பயிற்சியாளராகச் செல்லும் பெற்றோரும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகஉள்ளது.

அடுத்ததாக ஒரு காப்பகத்தை நடத்துபவர் அதற்கான உரிமத்தை (Licence) அரசாங்கத்திடம் பெற்றிருக்க வேண்டும்.அது மாத்திரமின்றி காப்புறுதியும் செய்திருக்க வேண்டும். அத்துடன் பாடசாலை அமையவுள்ள இடம் பள்ளிகள் நடத்த உகந்த இடம் (Zoning) என்ற பரிந்துரையையும் உரிய அலுவலரிடம் பெற்றிருக்க வேண்டும். முன்கூறிய முன்நிபந்தனைகளை நிறைவு செய்யாத முன்பள்ளிகளின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஊரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத எந்த முன்பள்ளியை யும் எந்த நேரத்திலும் நிறுத்தி விடவேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.இங்குவீட்டில் நடத்தப்படும் (Home Based) காப்பகங்களும் நடாத்தப்படுகின்றன அவைகளும் இந்தக் கட்டமைப்புக் குள் தான் நடத்தப்படுகின்றன. அங்கும் ஒருகாப்பாளருக்கு 5பிள்ளைகளுக்கு மேல் வைத்திருக்கக் கனேடியச் சட்டம் இடமளிக்கமாட்டாது. அடுத்து பிள்ளைகளை காப்பகங்களுக்கு அனுப்பும் பெற்றோரின் செலவுகள் இங்கு சாதா

ரணமாக ஒருமாதத்திற்கு $600.00 இலிருந்து $800.00 வரை ஒரு குழந்தைக்கு பெற்றோர் செலுத்து கின்றனர். ஒரு Montessori என்றால் $ 1000.00 செலுத்துகின்றனர். வருமானம் குறைவாகப் பெறும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு அவரவர் சம்பளத்திற்கு ஒரு பகுதியை அரசாங்கம் கொடுத்து உதவுகின் றது மற்றும் படி குடும்ப வருமானம் கூடியவர்கள் முழுத் தொகை யையும் பெற்றோரே செலுத்தி ஆக வேண்டும். இதனால் சிலர் தமதுபெற்றோரை இத்தேவைக்காகப் பயன்படுத்துவதைநாம் காணக் கூடியதா இருக்கிறது. ஊரில் இருந்து அழைத்துவரப்படும் சில பெற் றோர் இத்தேவை முடிந்ததும் அநா தரவாக விடப்பட்டுமுதியோர் காப்பகங்களைத் தஞ்சமடைந்துள்ள பரிதாபநிலை எமது சமூகப்பிரச்சினை யாக வடிவெடுத்துள்ளதையும் இங்குசுட்டிக் காட்டுவது பொருத்த மாக இருக்குமென நம்புகிறேன்.

எது எப்படியாயினும் கனடாவைப் பொறுத்தவரை பெற்றோரின் உழைப்பின் பெரும் பகுதி பிள்ளைகளின் காப்பகங்களுக்குப் போய்விடுகின்றது. ஆயினும் தரமான காப்பகங்களில் வளர்ந்து வரும் சிறார்களின் பழக்க வழக்கங்களை நாம் கூர்ந்து நோக்கும் போது காப்பகங்களுக்குச் செல்லாது 4 வயதில் நேரடியாக பாடசாலைக்கு வந்து சேரும் பிள்ளைகட்கும் இவர்கட்கும் இடையில் பாரிய அளவில் வேறுபாடுகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கும் .பாடங்களை கிரகிக்கும் தன்மை, பழக்க வழக்கங்கள், பொருள்களை பகிர்ந்து விளையாடும் தன்மை என்பனவற்றிலே காப்பகங்களில் வளர்ந்த பிள்ளைகள் சிறந்து விளங்குவதை நாம் காணலாம்.

கனடாவைப் பொறுத்த வரை பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சலுகைகள் முக்கியத்துவம் ஒரு சிறப்பம்சமாக காணப்படுகின்றது. அதேபோன்று நம் நாட்டிலும் நிலைமை வரவேண்டும் என்பது எனது பேரவா. நான் கூட 1986 ஆண்டிலிருந்து 1988 வரை எனது கிராமமான பொன்னாலையில் பாபுஜி Nursary School என்று ஒரு பாடசாலையை நிறுவி நடாத்தி விட்டு கனடா புறப்படும் போது அதை இன்னொரு ஆசிரியரிடம் கையளித்து விட்டு வந்தேன். அதனூடாக நான் பெற்றுக் கொண்ட பட்டறிவு என்னை இன்றும் வழி நடத்த உதவுகின்றது

சமூகத்தின் கட்டமைப்பிலும், கல்விவளர்ச்சியிலும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தவல்ல முன்பள்ளியைத் தொடங்கி நடத்தவுள்ள மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி இயக்குநர் சபையின் செயற்பாட்டை வாழ்த்தும் அதேவேளை அவர்கள் பணிவளர்ந்து வியாபிக்கவேண்டி, முன்பள்ளித் தொடக்க நிகழ்வு சிறப்புற அமைய வாழ்த்தி விடைபெறுகிறேன்.



# முன்பள்ளிச் சிறார்களின் ஆளுமைவிருத்தியில் அழகியல் கல்வி ஒரு நோக்கு

திரு. க. க. ஈஸ்வரன்
தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி
தென்மராட்சிக் கல்வி வலயம்

முன்பள்ளிச் சிறார்களின் சிந்தனைக்கு விருந்து கொடுத்து எண்ணங்களை விரிவுபடுத்த உதவுவது அழகியல் உணர்வுடன் கூடிய கற்றல் செயற்பாடுகளாகும். எது எது பிள்ளையின் மனதுக்கு விருப்பத்தை ஏற்படுத்துகின்றதோ அவற்றில் மனதை பறிகொடுத்து கற்பனையுலகில் சஞ்சரித்து இன்பம் காணுகின்ற பருவம் முன்பள்ளிப்பருவம். இப்பருவத்தில் விதைக்கப்படுகின்ற கருத்தோட்டமான அறிக்கைகளும் திறன்களும் மனப்பாங்குகளுமே நல்ல சமூகப் புரிந்துணர்வுடன் கூடிய பிரஜையை உருவாக்கும் என்பது உளவியல் அறிஞர்களினதும் குழந்தைக்கல்வியாளர்களினதும் சித்தாந்தமாக வுள்ளது. இச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துனவாகவே முன்பள்ளிகளும் அதற்கெனத் தனித்து வமாகப் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களும் நாடு முழுவதும் ஆரம்பக்கல்விப்பணியில் தடம் பதித்துச் செயற்படுகின்றனர் என்றால் மிகையில்லை.

கலை என்பது "கலா" என்பதை வடசொல்லடியாகப் பிறந்ததாகும். கலை என்பதை வரைவி லக்கணப்படுத்த முயன்றவர்கள் மிகப்பலர். அவர்கள் அனைவரதும் ஒத்தகருத்து இயற்கையிலே காணப்படுகின்ற அனைத்து வண்ணங்களும் பௌதிக மற்றும் உயிரினங்களும் அவற்றின் செயல் களும் ஒருவரின் ஐம்புலன்களுடாகவும் உணரப்பட்டு மனதிலே பதிந்து வெளிப்படும் ஆற்றல் கொண்ட கைங்கரியமே கலை என்பதாக அமைந்து விடுகின்றது. சுருக்கமாகக் கூறினால் ஒருவன் முன்பு அனுபவித்த ஓர் உணர்வைத் தன்னுள்ளத்தில் மீண்டும் எழுப்பி அசைவுகள், கோடுகள், வண்ணங்கள், ஒலிகள் அல்லது சொல் வடிவங்கள் மூலம் அந்த உணர்வை பிறரும் உணரும்படி செய்வது கலை எனலாம். கலை கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம் இன்பம் அதன் பயன் கலையானது தன்னலமும் பழிவாங்கலும் நிறைந்த உலகை விட்டு நம்மை வெகு தூரத்திற்கு அழைத்துச் செல்ல வல்லது என ரவீந்திரநாத் தாகூர் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கது.

கலைகள் நுண்கலைகள் நுண்கலைகள் சாராதவை என இருவகைப்படுவன. நுண்கலைகள் என்ற வகையில் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், போன்றனவும் நுண்கலை சாராதவை என்ற வகையில் விளையாட்டு மருத்துவம் சமையல்,சோதிடம் போன்றவையும் உள்ளடங்குவனவாகும். இவற்றில் அழகியல் உணர்வை மேம்படுத்துவன நுண்கலைகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவையே கவின் கலைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்தியில் அழகியல் கலைகளாகிய நுண்கலைகள் நூற் றுக்கு எழுபத்தைந்து வீதமான பங்களிப்பை நல்குகின்றன என்றால் அதில் மிகையில்லை. குறிப்பாக இசை, நடனம், நாடகம் சித்திரம் ஆகிய கவின்கலைகள் சிறுவர்களை மட்டுமன்றி பெரியோர்களை யும் தம்பால் ஈர்க்க வல்லன.

இசை என்பது செவிகளுக்கு விருந்தூட்டி சிந்தனைக்கு இனிமை தந்து, சுகமான கற்றல் சூழலை ஏற்படுத்தி சிறார்களின் ஆளுமை விருத்திக்கு வித்திடுவது. "இசையால் வசமாகத உள்ளம் இருக்க முடியாது" தாயின் தாலாட்டுப்பாடல் சுயசங்கீதமாக ஒலிக்க குழந்தை தன்னுலகில் சஞ்சரித்த பூரிப் பால் உறங்கி விடுகின்றது இந்த ஆரம்ப சங்கீதமே பறவைகளின் ஒலிகள், மிருகங்களின் ஒலிகள், இயற்கையின் அசைவுகளின் சங்கீதமான ஒலிகள் மனிதர்களின் தொடர்பாடல் ஒலிகளை வேறுபடுத்தி

உள்ளம் என்னும் இறுவட்டில் பதிவேற்றிக்கொள்ள உதவுகின்றது. முன்பள்ளியில் பிள்ளை சந்திக்கும் இரண்டாவது தாயின் (முன்பள்ளி ஆசிரியர்) அரவணைப்பு முதலில் பாடலாக வெளிவர பிள்ளையின் சிந்தனை அதைப் பெரிதும் விரும்பிக் கொள்கின்றது. அவ்விருப்பமே புதிய புதிய விடயங்களை



அறிவதற்கான / தேடுவதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

இசை இசைக்க ஆரம்பித்து விட்டால் உடலில் புத்துணர்ச்சி பரவத்தொடங்கும். அப்புத்துணர்ச்சியே இசைக்கேற்ப அசைவுகளை தூண்டி விடுகின்றது. துலை, கண்கள், கைகள், கால்கள் ஏன் உடல் முழுவதுமே அசைவைத் தோற்றுவிக்க ஆடல் பிறக்கின்றது. எத்தகைய இசைக்கு எத்தகைய அங்கங்களை எப்படி எப்படி அசைத்தல் வேண்டும், எப்படி அசைத்தால் இசைக்குப் பொருத்தமாக அமையும் என்ற தகவல் பரிமாற்றம், தீர்மானங்கள், செயற்பாடுகள் பிள்ளையின்


ஆளுமையில் பெரும்பங்கெடுத்துக் கொள்கின்றது. தன்னை மறந்து பிள்ளை ஆடி மகிழ்திருக்கின்றது. புதிய புதிய இசைகள் வரும்போது எப்படி எப்படி அசைவுகளை கொடுக்க வேண்டும் என்பதை இயலபாகவும் ஆசிரியர் மூலமும் கற்றுக் கொள்கின்றது. வாழ்க்கை கலையில் நடிப்பங்கு மெல்ல மெல்ல விருத்தியடைகின்றது. குறியீடுகளால் தன் எண்ணத்தை வெளிப்படுத்த முயல்கின்ற பிள்ளையின் ஆளுமை இயற்கையோடு ஒன்றிணைக்கப்படுகின்றது. மகிழ்ச்சியும் உற்சாகமும் எதையும்





பகுத்துணரும் பண்பும் ஆடற்கலை மூலம் முதிர்ச்சி பெறுகின்றது.

இசைக்கு அசைவுகளை வெளிப்படுத்திய பிள்ளை நாடகம் என்ற கலை மூலம் சமூகத்தில் பல்வேறு பாத்திரங்களையும் தானாக உருவகித்து நடிக்கத் தொடங்குகின்றது அப்பாவாக, அம்மாவாக, அண்ணாவாக, அக்காவாக, ஆசிரியராக, வியாபாரியாக, குற்றவாளியாக,எனப் பல்வேறு பாத்திரங்களையும் புனைகின்ற போது சமூகப்புரிந்துணர்வு பிள்ளைக்கு துலங்கத் தொடங்குகின்றது. தாயின், தந்தையின், தமையனின், தமக்கையின் கடமைகள் எவை என அறியத்தொடங்குகின்றது. இது இருத்திவைத்து அறிவுறுத்துவதைவிட ஆயிரம் மடங்கு பயன்மிக்க செயற்பாடு எனில் மிகையில்லை. குழுவாக பாத்திரமேற்று நடிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் தமது ஆளுமையை பலமடங்கு பெருக்கி கொள்கின்றது என்பது வெளிப்பாடானது. ஒவ்வொரு பாத்திரமும் எவ்வெவ் தொனிகளில் கருத்துக் களை வெளிப்படுத்த வேண்டும். என்பதும் அதனால் அதைகேட்போர் எத்தகைய மனஉணர்வை பெறுவர் என்பதும் அன்பு, மரியாதை, இரக்கம் உதவும் மனப்பாங்கு நன்றியுணர்வு போன்ற பல சமூக விழுமியங்கள் இங்கு பயிலப்படுவதோடு கோபம், பொறாமை, சண்டையிடுதல், களவுசெய்தல், எதிர்த்துப் பேசுதல் போன்ற பொருந்தா உணர்வுகளில் இருந்து விடுபட்டு சமூக நீரோட்டத்தில் கலந்து ஓடுவதால் நடிப்புக்கலை ஒரு சிறந்த ஊடகம் எனில் மிகையில்லை.




பிள்ளை தனது உள்ளத்தின் தோன்றும் எண்ணங்களை எழுதுகோலாக கொண்டு வரைந்து தூரிகை கொண்டு வண்ணந்தீட்டி மகிழ்வதும் பிறரை மகிழ வைப்பதும் சித்திரம், ஓவியம் என்றழைக்கப்படும் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து வண்ணந்தீட்டுவது என்பது ஆழ்ந்த நுண்ணறிவினாலும் இயற்கையை கூர்ந்து அவதானித்த அனுபவத்தாலும் பெறப்படுவதாகும். சித்திரம் வரையும் ஒவ்வொரு பிள்ளைகளுக்குள்ளும் அதீத திறமைகள் ஒளிந்திருப்பதைப்பலரும் கண்டு காட்டியிருக்கின்றார்கள். அமைதியாக இருப்பதும், இனிமையாகப் பேசுவதும் பிழையற்ற சிந்தனைகளும் வெளிப்பாடுகளும் மற்றவரையும் அவ்வாறு நடக்க வேண்டும் எனத்தூண்டுவதும் இயலபாகக் கொண்டவராக இருப்பார் இத்தகையோர் கல்வியிலும் அதித நாட்டங் கொண்டு இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சித்திரக்கலை முன்பள்ளிச் சிறார்களின் ஆளுமை விருத்தியில் தனித்துவமான பங்கை வகிக்கின்றது என்றால் அது தவறாகாது.





நிறைவாக எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் இன்றைய சிறார்கள் சமூகத்தின் அமைப்புக் கேற்ப தம்மை மிளிரவைத்தல் அவசியமாகின்றது. வெறுமனே ஏட்டுக்கல்வியாலும் போதனைகளாலும் சாதனை படைப்பது என்பது வெறும் தாள்களில் தராதரத்தை எழுதிவைத்து பேணுவதற்கே உகந்ததாகும் அந்நிலையமாற்றிக் சொல்லிலும், செயலிலும், உணர்விலும், நடத்தையிலும் பிறர் போற்றும் அல்லது அகிலம் போற்றும் விழுமிய பண்புகளை கொண்டிருத்தல் வேண்டும். அதற்கு அழகியல் உணர்வும் அவற்றின் மீது ஆறாத பெருவிருப்பும் கொண்டவராக இருத்தல் அவசியமானது எனலாம் இன்றைய சமூதாயத்தில் உயர்பதவிகளில் அமர்ந்து பணிபுரிவோர் பலரும் குறித்த ஒரு அழகியற் கலையில் தேர்ச்சி பெற்று வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவராக திகழ்வது ஒரு சிறந்த தீர்க்க தரிசனமான சிந்தனை எனில் அதில் நூதனம் இல்லை.



# முன்பள்ளிச் சிறார்களின் ஆளுமை விருத்தியில் ஆக்கச்செயற்பாடுகளின் அவசியம்

தி. அபராஜிதன்
தொழில்வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி
தென்மராட்சி கல்வி வலயம்

உங்களது வாழ்வின் மகிழ்ச்சியான காலம் எது என்றால் அதற்கான விடை முன்பள்ளிப் பருவமே என்பதாகும். இதனை பல உளவியலாளர்கள் தங்களது நீண்ட கால ஆய்வின்பின் உறுதி செய்துள்ளனர். சிசு ஒன்று தாயின் கருவில் இருக்கும் போதே அதாவது முன் பிரசவப்பருவ காலத் தின்போதே கற்கக் தொடங்குவதாக கூறப்படுகின்றது. இக்கற்றலானது அதன் நீட்சியாக பிறப்பி லிருந்து நான்கு வாரங்கள் நிறைந்த சிசுப்பருவம், தொடர்ந்து ஒரு வயது வரையான குழந்தைப்பரு வம், அதன் வளர்ச்சியோடு இரண்டு தொடக்கம் ஐந்து வயது வரையான முன்பிள்ளைப்பருவம் என விரிந்து செல்வதை நோக்கலாம். இதனடிப்படையில் குழந்தையொன்றின் முன்பிரசவ காலத்தில் அதாவது குழந்தை பிறக்கும் போதே மூளையின் ஐம்பது வீதமான கலங்கள் உருவாகிவிடுகின்றன. இரண்டாம் வருட முடிவில் எழுபத்தைந்து வீதமான மூளைக்கலங்கள் வளர்ச்சி பெற்று விடுகின்றன. எனினும் முன்பள்ளி பருவத்தின் காலம் பல்வேறு விடயங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது. இக் காலமே ஆயிரக்கணக்கான நரம்பிணைப்புக்கள் வளர்ச்சியடையும் காலமாக உள்ளது.

இப்பருவ பிள்ளையானது தான்பெறுகின்ற அனுபவங்கள் மூலம் திருப்தியடைகின்றது. அத்து டன் தன்னம்பிக்கை, சுயமதிப்பு தானே தீர்மானம் மேற்கொள்ளல் போன்ற நற்பண்புகளை கட்டியெ ழுப்ப அவர்களை வளம்படுத்துவோர் துணை நிற்க வேண்டும். இதற்காகவே கல்வித்துறை சார்ந்தவர்கள் இலங்கையின் முன்பள்ளிக்கட்டமைப்பை வலுவடையச்செய்யவேண்டும் என்ற நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் செயற்பாட்டுரீதியிலான செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின் றனர். அந்த வகையில் முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்தியில் ஆக்கச்செயற்பாடுகளின் அவசியம் பற்றிய கட்டுரையாக இது அமைகின்றது.

வீட்டிலேயே சுதந்திரமாக பெற்றோருடன் அனுபவங்களைப் பெற்ற பிள்ளை ஒரு வகையான முறைசார் கட்டுப்பாட்டு வரம்பிற்குட்பட்ட முன்பள்ளி எனும் சட்டகத்தினுள் பிரவேசிக்கின்றது. இக் குழந்தை புலனுறுப்புக்களால் உய்த்தறியக்கூடிய பொறிவழி சார்ந்த செயற்பாடுகளான இயல், இசை, நாடகம், ஆடல், பாடல், அபிநயம், ஆக்கத்திறன், விளையாட்டு போன்ற மகிழ்வூட்டும் செயற்பாடு களின் மூலமாக பல்வேறுபட்ட விடங்களை அறியச் செய்வதே சாலச்சிறந்த வழியாகும்.

முன்பள்ளிச்சிறார்களின் சமூக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடச்செய்தல், பிள்ளையை சுற்றியுள்ள உலகை அறியச்செய்தல், பிள்ளையால் தனிமையாகவும் கூட்டுணர்வோடும் செய்யக் கூடிய காரியங்களை செய்யத்தூண்டல், சுகாதாரப்பழக்க வழக்கங்களைப் பழக்குதல், விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் பங்குபற்ற சந்தர்ப்பமளித்தல், பலவிதமான செயற்பாடுகளை விருப்பப்படி செய்ய அனுமதித்தல், புதிய கண்டுபிடிப்புக்களை கண்டறிய தூண்டுதல் போன்றவற்றிற்கான வாய்ப்புக்களை உருவாக்கி கொடுக்கலாம். அத்துடன் குழந்தையொன்றின் பிறப்பில் உள்ள திறமைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆத்துடன் பிள்ளையின் பாதுகாப்பிலும் அன்பிலும் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும். இவற்றை செய்வதன் மூலமாக எதிர்காலத்தில் குழந்தை நற்பிர சையாக உருவாகும் என்பது திண்ணம்.

ஆக்கத்திறன் வெளிப்பாடுகளில் பிள்ளையை ஈடுபடுத்துவதன் மூலமாக அழகியல் உணர்வுகளையும் தன்னால் செய்யமுடியும் என்ற நம்பிக்கையும் திறன்விருத்தி செயற்பாட்டில் பங்குகொள்ளும் நிலையினையும் உருவாக்க முடியும். முன்பள்ளி கட்டமைப்பில் ஆக்கத்திறன் வெளிப்படுத்துகையில் ஆசிரியர்களதும் பெற்றோர்களதும் பங்களிப்பு கணிசமாக உள்ளபோதும் பிள்ளையின் பங்களிப்பிற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும்.

சமகாலத்தில் விஞ்ஞான அறிவியல் சார்ந்த தொழினுட்ப உலகில் இப் பருவ பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியையும் குறைத்து மதிப்பிடமுடியாது. அவர்களது குறும்புத்தனம், உடனடியாக எதை யும் செய்யதூண்டும் போக்கு, விரைவான முன்வருகை என்பனவற்றை நாம் எதிர்மறையாக நோக்காது நேர்மனப்பாங்குடன் மாற்றி அவர்களை சரியான வழிநடத்திப் பயணிக்க செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். மற்றும் பிள்ளைகளின் மனவெழுச்சி துலங்கல்களை வெளிப்படுத்துவதற்கான களமாக அழகியற் செயற்பாடுகளுக்கு (இயல், இசை, நாடகம்) உள்ளீர்த்து தமது திறமை களை வெளிக்காட்ட சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் உள நெருக்கிடையற்ற சிறந்த மனவெழுச்சி. கொண்ட மாணவ சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். அந்த வகையில் அறிவை பெறுவதில் பிறப்புரிமை, சுயகற்றல் பிள்ளையின் முயற்சி என்பன செல்வாக்கு செலுத்தும் ஆனால் ஆளுமையை வளர்ப்பதில் அறிவு ஒரு குறித்த பங்கினையே ஊடுகடத்தும். ஏனைய காரணிளான சமூகம், தலைமைத்துவம், திறன்விருத்தி செயற்பாடுகள், ஆக்கச்செயற்பாடுகள், அனுபவங்கள் என்பன இணைந்தே ஒருவரின் ஆளுமையை விருத்தி செய்யும். ஆகவே அறிவுடன் கூடிய ஆளுமையே ஒருவரை முழுமனிதனாக உருவாக்கமுடியும். அதற்கான அத்திபாரமே முன்பள்ளி சிறார்களின் ஆக்கத்திறன் என்றால் மிகையாகாது.



# முன்பள்ளிக் கல்வியில் சிறுவர் இலக்கியம்

செ.மகேஷ்
ஒய்வுநிலைஉதவிக் கல்விப் பணிப்பாளர்
(வடக்குகிழக்குமாகாணக் கல்வித் திணைக்களம்)
நிபுணத்துவஆலோசகர்.ஆறுதல். இலங்கை

ஒருமொழியின் வளர்ச்சியைஅம்மொழிவழிபிறந்த இலக்கியங்களேநிச்சயிக்கின்றன. தமிழ் இலக்கியங்கள் எமதுபரம்பரைநீட்சியில் காலங்காலமாகப் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. தமிழ் மொழி யில் பிறந்த இலக்கியங்களைப் படித்து இசைத்துச் சொல்லிமுன்னெடுப்பதில் இன்றையபள்ளிகள் முன்னணியில் திகழ்கின்றன.மொழியின்ஒலிவடிவங்களும் வரிவடிவங்களும்இலக்கியங்களின் வெளிப்பாட்டினால் பேணப்பட்டுவருவதோடுமேலும் அவை இரசிக்கப்படுவதற்கும் நயக்கப்படுவதற் கும் வளர்க்கப்படுவதற்கும் மொழிவழிவிரிந்தகேட்டல்பேசுதல் வாசித்தல் எழுதுதல் ஆதியாம் திறன் கள் உதவுகின்றன

தமிழ்மொழியின் எழுத்துக்கள் ஒலிபிறக்க உச்சரிக்கப்படும் போது இனிமை செறிந்ததென உணரப்பட்டுள்ளது. முன்பள்ளிகளில் ஒலி வடிவ மொழிப்பயன்பாட்டுக்கு முன்னுரிமை உண்டு எனவே பேசுதல் பாடுதல் ஆகிய ஒலிப் பிறப்பினால் விளையும் சொற்கள் இசை கலந்தும் இனிமை செறிந்தும் பயன்படுத்தப்படுதல் விரும்பப்படுகிறது. அந்த வகையிலே வெளிப்பட்ட பண்டையதமிழ் மொழி இலக்கியங்கள் செய்யுள் வடிவிலேபேணப்பட்டுவந்துள்ளன. தொடர்ந்து உரைநடை விரிந்த காலத்-தில் வெளிப்பட்டவையும் அடுத்தடுத்ததலைமுறையினரால் அடுக்குமொழியிலும் சொற்செறிவுடனும் பேணப்பட்டன.

இலக்கிய உணர்வு ஒவ்வொரு மனிதனின் பிறப்பிலிருந்தும் அவனிடத்தே விளைந்து வரும் சிந்தனை வளர்ச்சியிலே உருவாகி வளம் பெற்று நவீனம் பெறுகின்றது. சிறுபராயத்திலிருந்தே இலக்கிய உணர்வின் பால் ஒவ்வொருவரும் ஈடுபட்டிருந்தாலும் வெளிப்படுத்தும் ஆற்றல் ஒவ்வொ ருவரிடையேயும் வேறுபட்டேதோன்றுகின்றது. இயற்கையின் அழகைஅதன் அசைவுகளைப் பார்க்கும் கண்கள் இயற்கையோடிசைந்துஅவற்றை இரசிக்கின்றன. சிறுவர்கள் இயற்கையையும் தமதுசூழலையும் அறியும் ஆசையோடும் ஆர்வத்தோடும் வளர்கிறார்கள். அவர்களிடத்தில் இலக்கிய இரசனை நிறை வாகவேஉள்ளது.அவ்வாறுஅவர்களிடத்தில் விளைந்துள்ள இலக்கிய இரசனை. மேலும் வளர்க்கப்படுவதுஅவசியம்எனஉணர்வோம்.

சிறுவர் இலக்கியங்கள் என்றவகையிலேசிறுவர்களுக்கெனஆக்கப்படும் இலக்கியங்களைச் சிறுவர்களிடத்தில் கொண்டுசேர்ப்பதிலும் சிறுவர் இலக்கியத்தைவளர்ப்பதிலும் முன்பள்ளிகளும் ஆரம்பபாடசாலைகளுமேசிலகட்டாயங்களின் அடிப்படையில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் சிறுவர் பாடல்களும் சிறுவர்களுக்கானசிறுகதைகளும் சிறுவர்களிடத்தில் இலக்கிய இரசனையையும் கல்வி யின்பால் ஈடுபாட்டையும் ஏற்படுத்தும் எனநம்பப்படுகின்றது.

காலங்காலமாகமுன்பள்ளிச் சிறுவர்களுக்கெனப் பாடல்களைத் தேர்ந்து அவற்றை இசை யுடனும் அபிநயத்துடனும் பாடவும் ஆடவும் பயிற்றி வருகிறோம் பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டுவந்தபழையகதைகளுக்குள் சிறுவர்களின் சிந்தனையைவலம்வரச் செய்து பலவேளை களில் குண்டுச் சட்டிக்குள் குதிரையைஓட்டும் வழமையையும் நாம் பேணிவருகின்றோம்.

சுதந்திரமான சுயமான புதியஆக்கங்களுக்குச் சிறுவர்களைமுன்னெடுப்பதற்கு இசைவானதாக எமது சூழலையும் அதன்மீதானபார்வையையும் சிறுவர்கள்தமதுள்ளத்தில் பதிக்கும் வகையில் நாம் செயற்படவேண்டியஅவசியம் இன்று உணரப்பட்டுள்ளது.

ஔவையின் ஆத்திசூடிகொன்றைவேந்தன் என்பவையும் சுப்பிரமணியபாரதியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோர் ஆக்கித் தந்தசிறுவர் பாடல் களும் சிறுவர் இலக்கியங்களேஅவைஇன்றும் உயர்ந்தவையாகப் பாராட்டப்படுகின்றன. ஆனால் அவற்றின் மீதான இன்றையகவனம் நம்மிடத்தில் அருகிவிட்டதைக் காணுகின்றோம். இவர்களைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான கவிதை, சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்களை ஆக்கியோர் வரிசை யில் பா.சத்தியசீலன்,வித்துவான் வேந்தனார் சபா.ஜெயராசா,த.துரைசிங்கம் கவிஞர் ச.வே.பஞ்சாட் சரம், அநு.வை.நாகராஜன்,செ.மகேந்திரன்,மயிலங்கூடலூர் நடராசன்,கல்வயல் வே.குமாரசாமி, ச.அருளானந்தம் ஓ.கே.குணநாதன்,போன்றோர் நினைவில் நிற்பவர்கள் ஆவர்.

சிறுவர் பாடல்களைப் போன்றேசிறுவர் கதைகளும் சிறுவர்களுக்கான இலக்கிய வடிவத்தில் முன்னணியில் உள்ளன.சிறுவர் கவிதைகளில் ஈடுபாடுகொண்டுள்ளபலரும் சிறுவர்களுக் கான சிறுகதை களை ஆக்குவதிலும் ஆர்வம் கொண்டுள்ளனர். ஆறுமுகநாவலர் சைவச் சிறார்களின் ஒழுக்க நடத்தைகளைக் கருத்திற் கொண்டு எழுதி வெளியிட்ட கதைகள் மறைந்து வருகின்றன பழைய பாட்டி கதைகளையும் தேவதைக் கதைகளையும் மந்திரதந்திரக் கதைகளையும் முன்னோர் உரைத்தவையாகக் கொண்டு சிறுவர்களின் இலக்கியஆர்வத்தைவளர்க்கநாம் இன்றுமுயற்சிக்கின்றோம் எனினும் அவ்விலயக் கிய வெளிப்பாடுகளைச் சிறுவர்கள் இரசிக்கும் வகையில் சொல்லுதல் சிறுவர் இலக்கியத்தைவளர்க்கும் உத்திகளில் மிகவும் சிறந்ததாகும்.

சிறுவர் கதைகளைச் சொல்லுதல் ஒருகலையாகும் அத்தகையதிறன் பெற்றிருந்த மாஸ்ரர் சிவலிங்கத்தை எவருமே மறந்து விடமாட்டார்கள் அவ்வாறே சிறுவர் நாடகங்களும் தோன்றுதல் வேண்டும். இன்றைய சிறுவர் நாடகவளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று செயற்படுபவர் குழந்தை சண்முகலிங்கம் ஆவார் இவரால் ஆக்கப்பட்டசிறுவர் நாடகங்கள் புதிய உத்திகளோடு சிறுவர் களை நடிப்பில் ஈடுபடுத்திசிறுவர் நாடக இலக்கியம் வளரஉதவுகின்றன. சிறுவர்கள் விருப்புடன் ஆடல் பாடல்களைஅபிநயத்தோடு இசைத்தல் சிறுவர்கள் இரசித்துச் சுவைக்கும் வகையில் கதை களைக் கூறுதல் சிறுவர்நாடகங்களைஆக்கிசிறுவர்கள் மூலம் அவற்றைமேடையேற்றுதல் ஆகிய முன்பள்ளிச் செயற்பாடுகள் சிறுவர் இலக்கியங்களைவளர்க்கஉதவுவனவாகும். 'கண்ணன் எங்கள் கண்ணனாம் கார்மேக வண்ணனாம் என்றுதொடங்கும்அபிநயப்பாடல் ஒன்றினைச் சிறுவர்களுக் கெனப்பயிற்றிஎல்லாமேடைகளிலும் அதனைஅரங்கேற்றுகின்றோம். அதில் கலந்துள்ள இசையும் காட்சிஅழகும் பலரையும் கவருகின்ற அதேவேளை சிறுவர்களுக்குப் பொருத்தமானதாக அதனை வெளிப்படுத்தும் வகையையாம் உணர்தல் வேண்டும்.

அவ்வாறே முன்பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடல்களும் நயந்துகேட்டு இரசிக்கச் சொல்லப்படும் கதைகளும் பார்த்தும் கேட்டும்நயக்கநடிக்கப்படும் நாடகங்களும் சிறுவர்களின் உடல்உள ஆரோக்கியத்துக்கும் குதூகலத்திற்கும் பயன்தரத் தக்கவைகளாக அமைதல் வேண்டும். எண்ணங்கள் தூய்மையானவையாக வெளிவர வேண்டுமெனில் மகிழ்ச்சிஅவசியமாகும்.

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களுக்கு மாத்திரமல்ல பெரியவர்களுக்கும் சிறுவர்களின் பால் விரி யும் அன்பையும் அறிவையும் வளர்க்கஉதவுவனவுமாகும். முன்பள்ளிகளில் கற்பிக்கும் அல்லது சிறுவர்களின் வழிகாட்டிகளாகசெயலாற்றும்பள்ளிஆசிரியர்கள் சகலகலா வல்லுனர்களாக இலக்கி இரசனையுடையோராகத் தம்மை வளப்படுத்திக் கொள்ளுதல் இன்றைய தேவையாகும். நாளை தலைவர்களே இன்றைய சிறுவர்கள் என்றவகையில் அவர்களின் உயர்ச்சிக்குத் துணைவெய்யும் சிறுவர் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் வாய்ப்புக்கும் இயைந்தசந்தர்ப்பங்களைக் கண்டறிவோம். அவற்றை வழிப்படுத்தும் வழிகாட்டி களானஆசிரியர்களின் வாண்மைசிறக்கவகைசெய்வோம்.

# "Froebel's System of Kindergarten Education"

Mrs. C.A. Thitukumar
Assistant Director of Education(Eng),
Zonal Education Office, Thenmaradchy.

Friedrich Froebel (1782 – 1852) a German educationist is renowned for estab lishing the Kindergarten as an integral part of a child's education. His ideas on early child hood education are still in full swing, in many countries Kindergartens following Froebel's Child education theory are found in leading cities of Austria, Belgium, Canada, Germany, Great Britain, the Netherlands, Hungary, Japan, Switzerland, the United States and in many countries all over the world. In the United States, Froebel's Kindergarten system has been a great success, for years and years.

Mother's loss had a great impact on young Froebel and freauently was reflected on his child education theories. Froebel lost his mother, only he was just nine months old. No wonder, he was longing for mother care and company, from a very infant which was a strong force for him to develop a deep sense of the importance of early childhood and of the critical role played by the teachers of the young.

Froebel's concern for childhood education was tremendous and sensitive experi encing the motherless childhood, he naturally developed a longing towards caretaker, and the impact the care would pour on young kids. A teacher's friendly manner influences the Kindergartners he believes, for teachers should develop themselves possess friendly and supportive manners and care towards the kids.

Froebel attended Pestalozzi's institute and extended Pestalozzi's ideas. He saw nature as a prime source of learning and believed the schools should provide a warm and supportive environment for children.

Froebel founded the first Kindergarten ("child's garten) in 1837, his idea was to cultivate the child's development and socialization.

Today's child friendly school discipline is in full force in the Kindergarten educa tion. When it is said that schools should provide a warm and supportive environment for children a teacher's role becomes vital. Froebel further believed in the importance of es tablishing an emotionally secure environment for children. Children can be made find the school pleasant and fun-filled. School climate should be inviting and touching above all provides a hearty welcome to the child and should make him close to nature. Froebel em phasizes that school has to make the child feel that "school is home". How closer Froebel was to the modern strategies of early childhood education catering for the child is the very important responsibility of Kindergarten teachers.

School should support the little onces in their needs such as safety and biological needs. Froebel's views on school climate is vividly seen today in child friendly school

behavior, which is rapidly emerging in our school system, and is focused on child- centred education. Froebel stresses that the right sort of school environment kindles the child's learning force and develops his personality, he further views if the child is spotted, a val able educationally interest behaviour is started. The earlier you start the more you benefit from is his idea. The school climate contains the pleasant and happy faces of teacher things that invite the Kindergartners to handle them with; ie sand , clay toys, especially he likes wooden toys. Another feature that attracts the toddlers is songs child's garten should be a place for little ones to roam around, play, sing and dance etc.

Froebel laid much emphasis on "Unity in diversity", and diversity in unity, and on the need for making "the inner outer" and "outer inner". He feels child's garten is the place where a child brings out his inner thoughts, ideas, talents and desires in the form of making clay toys, wooden toys, music and positive interaction. at the same time the child's outer inner functions as such mingling with play mates. he takes in what's there outside. what other mates possess or bring in can be shared by everyone, that helps the child to absorb more knowledge, skills and attitudes.

Regarding Kindergarten education Froebel thought child is not only a follower but can perform an act if there is a purpose for it. Teacher has to provide some kind of purpose to the child to do task. This ultimately leads the child to advocate any development regarding a permanent discipline on it. Froebel thinks one way of providing a purpose for the child is by making the purpose interesting and comfortable. interest depends on the child and not on the purpose. The created interest should be natural, but if it is by artificial stimulus it may fade away and withdraw Froebel's absolute intention is to develop the Kindergarten child through his innate interest for 'play". As the children are practical, through games and by performing activities, they can be cultivated towards progress. Every teacher of Kindergarten knows that the "play impulse" is at the height of its strength. when the child enters the pre-school, and fortunately the play impulse is of the greatest educational value. "Froebel says" childhood is the period of play not of work. His ideas were rooted in the premise that man is essentially active and creative rather than merely receptive. His belief in self-activity and play in child education resulted in the introduction of a series of toys, or learning apparatuses, devised to stimulate learning through well – directed play accompanied by songs and music. The toys, which he called gifts, consisted of six sets, or groups, arranged in ascending order of complexity, beginning with coloured balls and progressing to such objects as blocks, squares and cubes. These objects provide a series of exercises for preschool children. Froebel insists that play is nature's own means of educating her young and this from the kindergarten. The play spirit is the spirit of the young child and play has valuable reasons in developing the physical and social skills. He lays much emphasis on importance of constructive play and self activity in early childhood. He further thinks just like work and lessons play should serve to realize the child's inner destiny Froebel insists the method that seeks to educate the child through his own interests, and through his own felt purposes. For that , Froebel's play – way method paves way for providing little children with toys, that become the source of child's creativity and enthusiasm.

Froebel was indeed interested in the development of toys for children – what he

called gifts. These gifts or playthings included balls, globes, dice, cylinders, collapsible dice, shapes of wood to be put together, paper to be folded, strips of paper, rods, beads and buttons. This idea is to promote primary judgement distinguishing form, colours, separation and association, grouping, matching, and so on .Under the teacher's guidance the gifts are properly experienced they link the natural inner unity of the child to the unity of all things. E.g :- the sphere gives the child a sense of unlimited continuity , the cylinder a sense both of continuity and of limitation. Even the practice of sitting in a circle symbolizes the way in which, each individual with a unity in itself feels that he is a part of a living thing a world, and a part of larger unity. The child is to feel that his nature is actually joined with the larger nature of things.

Froebel puts greater vitality on "Games" as well. Games are not only fun but they teach and allow children to pretend and thereby stretch this imagination. It is a current child education strategy that games will help the child develop thinking skills, literal skills, social skills and many more living skills.

Froebel's belief in learning through games is fruitful and brings successive out comes. The child lives all the time, and his development depends on the way in which he lives his life from the moments that he takes his first breath if not before. Froebel laids much emphasis on the idea of 'mind and body must be educad equally and cordinately and the spiritual side of mans nature must not be neglected.

Froebel's kindergarten education emphasizes the child's self activity performing activities involves the child ' live in the learning process' Froebel in his ideas, shows ways to stimulate child's imagination through such materials as sand and clay and paper. By carrying out ' self – activity' the child understands the part of the materials with those of the whole; he acquires skills which are vital for further progress. The child is to be educated through his own, that is 'living through vital purposeful self –activity, inspired and stimulated by his ownse, felt needs. Froebel further thinks through a child's creativity his living skills can be promoted and will go on as a long process. The kindergartners are delighted in doing tasks and seeing the results immediately,. as well as in overcoming difficulties, with sand paper and clay child tries various ways and to form ideas of objects. E.g: lines surfaces and other connections. A child's self expression is done through self activity for instance a child moulds various patterns with sand and clay. If we allow our Kindergartners to play with clay, sand and paper, to our astonishment how beautiful ideas are brought out through them. Especially self – activities will encourage and enrich the kindergartners. Sculpting with clay and working with sand further help little ones build their creative skills. as they use their imagination artistically. Children will love taking part in sand, clay, paper activities which utilize many small hand muscles Froebel's" ideas on self – activity" are still popular in kindergartens. E.g:- Finger – painting, Board creations etc. Wood working activities allow the toddlers to use their imaginative skills freely in a delightful manner. Active participation by the child is very essential in the process of acquiring skills and attitudes.

Singing songs plays a vital role in kindergarten education. This is not only for exercising voice but also of instilling spirit of humanity and nature. Songs are enchanting

and are destined to become little one's favorites, because they all encourage them to think about things that live around them, and some only in dreams. Froebe thinks with songs children can experience the fun of pretending to be everything hear and sing.

**A Kindergarten song**


I am a pencil, long and thin
Put me in the sharpener and watch me spin
Spin around! spin around! Then I stop! stop!
Onto the paper I will hop hop

Froebel's kindergarten curriculum consists of gardening and caring for animals in order to induce sympathy for plants and animals. Natures treasure to mankind is vegetation for that from the infanthood, we should provided systematic training : watering plants, watching the buds blossoming are fun filled experiences with a sense of enjoying one's own efforts and endeavours. And this helps the child to learn to keep a close link with nature.

Small children want to imitate the adults and want to do as exactly as they do, they as for they pretend themselves as care- takers and adults. Nurturing plants and animals cultivate a sense of responsibility in the minds of little children.

Froebel believes moral education should be an educational force to shape a child in decent habits. and he makes it a point that spiritual ideals could not be defined. but only felt. We could make the children come to know the " inner relationship of things", things " meaning God, man. Nature and their unity .

One of the pioneer educational reformers, Froebel contributed a lot to the kinder garten education, being the founder of the kindergarten movement and a theorist on the impor tance of constructive play and self- activity in early childhood education, Froebel lives in the kindergarten founded by him in the 19th century and goes on until now. As Froebel's theory on kindergarten is liberal, it has lively and beautiful ideas regarding early childhood education.



# முன்பள்ளி நடைமுறைகள்



**திரு.சு.கிருஷ்ணகுமார்**
வலயக் கல்வி பணிப்பாளர்
தென்மராட்சி

- ✱ முகாமைத்துவக் குழு கட்டமைப்பும் பொறுப்புக்களும்.
- ✱ பௌதிகக் கட்டமைப்பும் ஆரோக்கியமான சூழலும்.
- ✱ முன்பள்ளிகளில் பேணப்பட வேண்டிய ஆவணங்களும் நாளாந்த செயற்பாடுகளும்.
- ✱ முன்பள்ளி ஆசிரியரின் வகிபாகம்.
- ✱ குழந்தை ஒன்றின் முழு விருத்திக்கான ஆரம்ப அனுபவங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆலோசனைகள்.
- ✱ உத்தேச பாடத்திட்டமும் பாடக்குறிப்பும்.

# முன்பள்ளி முகாமைத்துவ குழு கட்டமைப்பும் பொறுப்புக்களும்

முன்பள்ளி முகாமைத்துவத் திட்டத்திலுள்ள பரிந்துரைகளை முன்பள்ளிகளின் முன்னேற்றத்திற்கு செயற்படுத்துவதற்கு முதலில் முன்பள்ளிகள் தோறும் முகாமைத்தவக் குழுக்கள் அமைக்க வேண்டும். இதற்கமைய மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளியின் முகாமைத்துவக் குழு 04.11.2012ஆம் திகதி முதல் செயற்பட்டு வருகின்றது. இத்தகைய முகாமைத்துவக் குழு அமைக்கப்பட வேண்டியதன் நோக்கமும் அதன் கட்டமைப்பும் முகாமைத்துவக் குழுவுக்கான பொறுப்புக்களும் பற்றிய விபரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

## 1.நோக்கங்கள்

1.1 முன்பள்ளிக்கான தொலைநோக்கு பணிக்கூற்று என்பவற்றை வடிவமைத்தல்.

1.2 முன்பள்ளியின் முக்கியத்துவத்தை சமூகத்தில் மேம்படுத்தல்

1.3 ஆசிரியர்கள் தொடர்ச்சியாகத் தங்களை வலுப்படுத்திக் கொள்வதற்காக தேவைப்படும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வசதியேற்படுத்திக்கொள்ளல். குறிப்பாக தகவல் தொழில் நுட்பம், மொழித்திறன்கள் விருத்திக்கான சந்தர்ப்பங்கள்.அத்துடன் சிறுவர்கள் இத்தகைய முக்கிய தொடர்பாடல் திறன்களை அறிந்து கொள்வதை உறுதிப்படுத்தல்.

1.4 முன்பள்ளியில் கற்றுக்கொள்ளும் சிறுவர்கள் கீழ்வரும் முக்கிய விருத்திப்படிகளை அடைந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்: உடல்விருத்தி, மொழிவிருத்தி,கணித விருத்தி,சூழலை புரிந்து கொள்ளல்,ஆக்கத்திறன் விருத்தி(அழகியல்).

1.5 அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து யதார்த்தமான உதவிகளை முன்பள்ளிக்குப் பெற்றுக்கொடுத்தல்.

1.6 விடுமுறைக்காலம் தவிர்த்து கிழமையில் ஐந்து நாட்களிலும் முன்பள்ளி திறக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

1.7 முன்பள்ளிகள் ஒவ்வொரு நாளும் (மு.ப 08.00 - மதியம் 12.00 மணிவரை) திறந்திருப்பதையும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மு.ப 08.30 - மு.ப 11.30 மணிவரை நடைபெறுவதையும் உறுதிப்படுத்திக்கொள்ளல்.

1.8 பிள்ளைகள் செயற்பாடுகளில் ஈடுபடவும், பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்தவும் போதிய வளங்கள் முன்பள்ளியில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல். உதாரணம்: கற்பித்தல் சாதனங்கள்,நூலகம்,கற்றல்வட்டம்

1.9 பிள்ளைகளின் அபிவிருத்தியில் சுகாதார நற்பழக்கவழக்கங்களின் அவசியம் தொடர்பில் விழிப்புணர்வூட்டல்களை முன்னெடுத்தல்.

1.10 முன்பள்ளி நிர்வாகம், சிரமதான செயற்பாடுகள்,மர நடுகை போன்றவற்றில் பெற்றோர்களை அங்கத்தவர்களாக்கிக்கொள்வதன் மூலம் ஊக்குவித்தல்.

1.11 முன்பள்ளி ஆசிரியர்கள் தரமான கல்வியைக் கொடுப்பதற்காகத் தேவைப்படும் ஒத்துழைப்புக்களை வழங்கலும், மாதாந்தக் கூட்டங்களின் மூலம் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பினை ஊக்குவித்தலும்.

1.12 முன்பள்ளிக் கட்டடம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு முற்றம் என்பன சிறப்பாகப் பராமரிக்கப்படுவதோடு அது எவ்விதத்திலும் பிள்ளைக்கு ஆபத்து ஏற்படுத்தாது என்பதையும் உறுதிப்படுத்தல்.

1.13 சிறுவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் போசாக்கு மிக்க உணவின் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வேற்படுத்தல்.

1.14 முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த வேதனத்தை அவர்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்.

1.15 சிறுவர் உரிமைகள் தொடர்பாக, குறிப்பாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

## 2 நிர்வாகக்கட்டமைப்பு

2.1. இனம்,மதம் போன்ற பேதங்கள் எதுவுமற்று முன்பள்ளிப்பிள்ளைகளின் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் இதில் அங்கத்துவம் பெறுவதற்கு தகுதியுடையோராவர்.

2.2. முன்பள்ளியின் பெற்றோர்கள் தெரிவின் மூலம் அல்லது தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் குறைவாகயிருப்பின் அடுத்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர்களைப் புதிதாகத் தேர்ந்தெடுக்கலாம்.

2.3. முன்பள்ளி ஆசிரியர் இயல்பாகவே ஒரு அங்கத்தவராக கருதப்படுவார்.

2.4. வலயக் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதி முன்னிலையில் தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.5. நலன் விரும்பி அல்லது விடய அறிவுள்ள,அனுபவம்மிக்க குழுவின் நோக்கத்தை அடைய வழி செய்யக்கூடிய திறனுள்ள யாராயினும் ஒருவரைத் தீர்மானிக்கும் பட்சத்தில் அவரைக் குழுவில் இணை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளலாம். எனினும் இவருக்கு வாக்களிக்கும் தகைமை இல்லை.

2.6. இக்குழுவில் ஆகக்குறைந்தது 7 அங்கத்தவர்களும் கூடியது 11 அங்கத்தவர்களும் அங்கம் வகிக்கலாம் (ஒற்றை இலக்கங்களில்)

2.7. நிர்வாகக் குழு தெரிவானது வருடாந்தம் மார்ச் 31ம் திகதிக்கு முன் நடாத்தப்பட வேண்டும். குழு அங்கத்தவர்கள் இரண்டு தடவைகள் அதாவது ஆகக்கூடியது இரண்டு வருடங்க க்குப் பதவி வகிக்கலாம்.பின்னர் அவர்கள் ஏனையோருக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்

2.8. முன்பள்ளிகள் ஏனைய மக்கள் அடிப்படை அமைப்புக்களால் நிர்வகிக்கப்படுமாயின்,அந்த அமைப்புக்களின் அங்கத்தவர்களுள் ஒருவர் இக்குழுவில் நிர்வாகப்பொறுப்பொன்றுக்கு தெரிவு செய்யப்பட வேண்டும்.

2.9. கீழுள்ள பதவிநிலைகளுக்கு நபர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

- தலைவர் - தனது பிள்ளையை முன்பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர்களில் ஒருவர் மட்டுமே தலைவராக இருக்கலாம்.

- உப தலைவர் - முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படல் வேண்டும்.முன்பள்ளியில் ஒரு ஆசிரியர் மட்டுமே இருக்குமிடத்து பெற்றோர் ஒருவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படலாம்.
- செயலாளர் - முன்பள்ளியின் ஆசிரியர் ஒருவர் செயலாளராகத் தெரிவு செய்யப்படல வேண்டும்.
- உப செயலாளர் - முன்பள்ளியின் பெற்றோர்களில் ஒருவர் இதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.
- பொருளாளர் - பெற்றோர் ஒருவர் இதற்காகத் தெரிவு செய்யப்படல் வேண்டும்.
- முன்பள்ளியை நடாத்தும் நிறுவனங்களின் பிரதிநிதி ஏதாவது ஒரு பதவிக்குத் தெரிவுசெய்யப்படலாம்.

## 3 வகிபங்கும் பொறுப்புக்களும்

### 3.1 தலைவர்

தலைவரின் பிரதான வகிபங்கானது முன்பள்ளிக் கூட்டங்களில் தலைமையேற்று நடத்துதலும் முன்பள்ளியின் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கும் அபிவிருத்திக்கும் தேவையான நடவடிக் கைகளை எடுத்தலும் ஆகும். முக்கிய பொறுப்புக்கள்:

3.1.1. முன்பள்ளி.வலயக் கல்வி அலுவலகத்தினூடாக மாகாண கல்வியமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல்.

3.1.2. முன்பள்ளியின் நிர்வாகச் செயற்பாடுகளில் கல்வி அமைச்சுடன் பிரதான தொடர்பாளராகச் செயற்படுதல்.

3.1.3. முன்பள்ளியின் அபிவிருத்தியின் பொருட்டு நடைபெறம் மாதாந்தக் கூட்டங்களையும் விசேட நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்தலும் தலைமையேற்று நடாத்துதலும்.

3.1.4. வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியைப் புதிய ஆசிரியர்களை நியமித்தலும் பதவி விலக்கலும்.

3.1.5. முன்பள்ளி ஆசிரியர்களுக்காகப் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி வலயக் கல்வி அலுவல கத்தினூடாக நியமனக்கடிதத்தை வழங்கல்
   - சேவைக்கால நிபந்தனைகள்
   - சம்பள அளவுத்திட்டம்

3.1.6. மாதாந்த வேதனம் - ஆசிரியர்களுக்கு மாதத்தின் குறிப்பிட்ட நாளில் முழுவதுமாக வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தல்.

3.1.7. முன்பள்ளி ஆசிரியருடன் தொடர்பேற்படுத்தி முன்பள்ளியின் நாளாந்தச் செயற்பாடுகளுக்கு உதவுதல்.

3.1.8. ஆரம்பிக்கும் உரிமை (starting right guidelines) வழிகாட்டியின் படி முன்பள்ளியின் செயற்பாடுகள் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

3.1.9. வலயக்கல்விப் பணிப்பாளர் / முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளரால் மேற்கொள்ளப்படும் சிபார்சுக்கமையவும் வழிகாட்டலுக்கமையவும் முன்பள்ளிகள் நடாத்திச்செல்லப்படுகின்ற மையை உறுதிப்படுத்தல்.

3.1.10. வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியின் பேரில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிர்வாகக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் தலைவருக்கு உள்ளது.

3.1.11. பொருளாளருக்குத் தேவையான அனுமதி மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கலும் அத்துடன் சரியான ஆவணங்கள் பதியப்பட்டு பணம் வைப்பிலிடப்படுகின்றமையை உறுதிப்படுத்தலும்

3.1.12. வங்கிக்கூற்றுக்களின் பிரதியை பெற்றுக்கொள்ளல்.

3.1.13. முன்பள்ளிக்கான கரும இலச்சினை(seal) மற்றும் முக்கிய ஆவணங்களை தம் பொறுப்பில் வைத்துக்கொள்ளல்

3.1.14. முன்பள்ளியின் விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆசிரியர் கோரும் விடுமுறைகளுக்கான அனுமதியளித்தலும் மற்றும் நடவடிக்கைகளைப் பின்பற்றலும்

3.1.15. செயலாளரின் அனைத்து அறிக்கைகளும் முறையாக பேணப்படுகின்றமையை உறுதிப்படுத்தல்.

### 3.2 உபதலைவர்

தலைவர் சமூகமளிக்காத பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அனைத்தையும் உபதலைவர் நிறைவேற்றல் வேண்டும்.

### 3.3 செயலாளர்:

முன்பள்ளியின் நிதி தவிர்ந்த ஏனைய அனைத்து நடவடிக்கைகளுக்குமான அறிக்கைகளை முறையாகப் பேணுதல் செயலாளரின் பிரதான வகிபங்காகும்.

**முக்கிய பொறுப்புக்கள்:**

3.3.1 கடிதங்களை எழுதுதல் மற்றும் பெறுதல்.

3.3.2 தலைவரின் ஆலோசனையுடன் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரித்தலும் அங்கத்தவர்களுக்கு முன்னறிவித்தலும்.

3.3.3 பொருத்தமான நேரத்தில் அங்கத்தவர்களுக்கு கூட்டத்தின் திகதி,நேரம்,இடம் என்பவற்றை அறிவித்தல்.

3.3.4 கூட்ட அறிக்கைகளை சரியாக பேணுதல்.

3.3.5 முன்பள்ளியுடன் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் முறையாக பேணுவதை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

3.3.6 முன்பள்ளிக்கு தேவையான வளங்களைப் பதிவு செய்து வைத்திருத்தலும் அதனை ஒவ்வொரு தடவையும் பரிசீலனை செய்தலும்.

3.3.7 வருடாந்தம் முன்பள்ளி சிறார்களுக்கு இரண்டு கலாசார நிகழ்வாவது பெற்றோர்களுடன் இணைந்து நடத்துதல் வேண்டும்.

### 3.4. உப செயலாளர்

செயலாளர் சமூகமளிக்காத பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அனைத்தையும் உபசெயலாளர் நிறைவேற்றுதல் வேண்டும்.

### 3.5.பொருளாளர்:

பொருளாளரினது பொறுப்பு முக்கியமானது. அவர் அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்பவராகவும் அறிக்கையிடுபவராகவும் இருப்பார்.

**முக்கிய பொறுப்புக்கள்:**

3.5.1. முன்பள்ளயின் அனைத்து நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளல்.

3.5.2 முன்பள்ளயின் நிதியியல் ஆவணங்களை பேணுதலும் குழுவிற்கு நிதியியல் ஆலோசனை வழங்குதலும்.

3.5.3.மாதாந்த குழுக்கூட்டத்தில் மாத வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்.

3.5.4. வங்கிக்கணக்கு பொருளாளரினதும் தலைவர் அல்லது செயலாளரினதும் கையொப்பத்துடன் நிர்வகிக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

3.5.5.வங்கியிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளும் பணம் வலயக்கல்விப்பணிப்பாளரது அல்லது முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளரது அனுமதியின்பின்னர் பெற்றுக் கொள்ளப்படுகின்றமையை உறுதிப்படுத்தல்

3.5.6. வங்கியிலிருந்து மீளப்பெற்றுக் கொள்ளும் பணம் வலயக் கல்விப்பணிப்பாளரது அல்லது முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளரது அனுமதியின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படுகின்றமையை உறுதிப்படுத்தல்.

3.5.7. முன்பள்ளிக்கான சகல நன்கொடைகளும் வங்கியில் வைப்பிலிடப்படுள்ளதை உறுதிப்படுத்தல்.

3.5.8. காசோலைப் புத்தகம் மற்றும் ஏனைய புத்தகங்களுக்கு பொறுப்பாளியாய் இருத்தல்.

3.5.9. சகல காசோலைகளும் இரண்டு நபர்களால் கையொப்பம் இடப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தல்.

3.5.10. முன்பள்ளியின் கணக்குகள் வருடாந்தம் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளரால் அல்லது அவரது பிரதிநிதியால் ஆய்வு செய்யப்படுகின்றமையை உறுதிப்படுத்தல்.

3.5.11. தலைவரினதும் குழுவினதும் ஆலோசனைகளின் படி முன்பள்ளிக்கான நிதி திரட்டல் தந்திரோபாயம் ஒன்றை வகுத்தல்.

### 3.6 குழு அங்கத்தவர்கள்

3.6.1 முன்பள்ளியை நிர்வகித்தலில் குழு அங்கத்தவர்கள் வினைத்திறனாகச் செயற்பட வேண்டும்.

3.6.2. குழு அங்கத்தவர்கள் முறையாகக் கூட்டங்களுக்கு வருகை தருவதுடன் அவர்களது ஆக்க பூர்வமான கருத்துக்களையும் யோசனைகளையும் முன்பள்ளியின் விருத்திக்காக வழங்கல் வேண்டும்.

3.6.3 குழு அங்கத்தவர்கள் விசேட நிகழ்வுகளின் போது அல்லது வெளிக்களப் பயணங்களின் போது அல்லது இவை போன்ற ஏனைய செயற்பாடுகளின் போது தமது காத்திரமான பங்களிப்பினை வழங்கல் வேண்டும்.

### 3.7. ஆலோசகர்

நிர்வாக குழு தேவைப்படின் அவர்களது தீர்மானமெடுத்தல் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் முகமாக ஒரு வளவாளரை ஆலோசகராக நியமித்துக் கொள்ள வேண்டும். எனினும் அவருக்கு தெரிவின் போது வாக்களிப்பதற்கான தகுதியில்லை.

### 4. கூட்டங்கள்

#### 4.1. மாதாந்த கூட்டங்கள்

4.1.1 ஒவ்வொரு மாதமும் மூன்று வேலை நாட்களுக்கு முன்னரான முன்னறிவித்தலுடன் இக்கூட்டம் கூட்டப்படும்.

4.1.2 கூட்டத்திற்கு வருகை தந்திருக்கவேண்டிய ஆகக்குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2/3 பங்கினராகும்.

4.1.3 தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வராத அங்கத்தவர்கள் குழுவில் இடம்பெற்றிருக்க அனுமதிக்கப்படமாட்டார்.

#### 4.2. இடம்

4.2.1 கூட்டங்கள் குழு அங்கத்தவர்களுக்கு வசதியான நேரத்தில் முன்பள்ளிகளில் கூட்டப்பட வேண்டும்.

#### 4.3. வருடாந்த பொதுக்கூட்டம்

4.3.1 வருடாந்த பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் கூட்டப்படல் வேண்டும்.

4.3.2 ஆகக்குறைந்தது 15 நாட்களுக்கு முற்பட்ட அறிவித்தல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு விடுக்க ப்படல் வேண்டும்.

4.3.3 தலைவர் கடந்த ஒருவருடத்தில் முன்பள்ளியில் நடைபெற்ற செயற்பாடுகளை முன்வைத்தல் வேண்டும்.

4.3.4 பொருளாளர் அவ்வாண்டின் நிதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3.5 செயலாளர் அவ்வாண்டின் செயற்பாடுகளின் தொகுப்பறிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.

#### 4.4. விசேட பொதுக்கூட்டம்

4.4.1 விசேட பொதுக்கூட்டம் யாதாயினும் விசேட தேவைகளின் பொருட்டு நிர்வாகக் குழுவினால் கூட்டப்படலாம்.

உதாரணமாக: விசேட நிகழ்வுகள். ஒழுக்க விழுமிய செயற்பாடுகளின் பிரழ்வுகள் நிமித்தம் குழு அங்கத்தவரை நீக்கல். முன்பள்ளியில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டுச்சூழல். நிர்வாகக் குழுவினரிடம் போதிய நம்பிக்கையின்மை.

4.4.2 அங்கத்தவர்களுக்கு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கப்படல் வேண்டும்.

4.4.3 இவ்விசேட கூட்டம் தக்க காரணங்களின் நிமித்தம் குழு அங்கத்தவர்களை மாற்றுவதற்கான அதிகாரத்தை கொண்டிருக்கும்.

# முன்பள்ளிகளின் பௌதிக கட்டமைப்பும் ஆரோக்கியமான சூழலும்

## 1.முன்பள்ளிகளின் பௌதிக கட்டமைப்பு

### 1.1முன்பள்ளிகளின் இட அமைவு

- இலகுவில் அடையக்கூடியதாக இருத்தல்.
- பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்கும் பொருத்தமற்ற இடங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அப்பால் இருத்தல் வேண்டும். (மதுபானச்சாலை,இறைச்சிக்கடை,மீன்சந்தை, திரையரங்குகள்)
- பிள்ளைகளுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய இடங்களுக்கு அப்பால் பாதுகாப்பான தூரத்தில் அமைந்திருத்தல். (திறந்த கிணறுகள், குளங்கள், சரிவுகள், பெரிய நீர்த்தொட்டிகள்)
- பிள்ளைகளின் சுகாதாரத்திற்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்.

### 1.2 வளாகம்

- வளாகத்தினைச்சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது மதில் இருத்தல் வேண்டும்.
- பிரதான வாயில் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும்.
- வளாகமானது சுத்தமானதாகவும்,கீழ்வளரிகள் இன்றியும் இருத்தல் வேண்டும்.
- ஏறுதல், பாய்தல், சமநிலை, ஊஞ்சல் போன்ற செயற்பாடுகளுக்கு ஏற்ற இடமும் சாதனங்களும் போதிய அளவில் இருத்தல் வேண்டும்.

### 1.3 கட்டிடம்

- நிரந்தரக் கட்டிடம்
- ஒரு பிள்ளைக்கு தேவையான ஆகக்குறைந்த இடப்பரப்பு 20 சதுர அடி
- போதிய அளவு ஒளியும் காற்றும் இருத்தல் வேண்டும்
- அரைச்சுவர்கள் குறைந்தது ஒரு மீற்றர் உயரமாக இருத்தல் வேண்டும்
- சுவர்கள் கவர்ச்சிகரமாக நிறந்தீட்டப்பட்டிருத்தல் வேண்டும்
- கட்டிடம் நன்கு பராமரிக்கப்படுதல் வேண்டும்
- கட்டிடமானது விருத்தி நிலைய நடவடிக்கைகளுக்காக மட்டும் பயன்படுதல் வேண்டும்
- கட்டிடமானது ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டாலும் பிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்களும் அவர்கள் செய்த வேலைகளும் பாதிக்கப்படக்கூடாது.

### 1.4 கிடைக்கும் வசதிகள்

- பிள்ளைகளின் வேலையைக் காட்சிப்படுத்துவதற்குப் போதிய சுவர்ப்பரப்பு, பலகைகள் அல்லது தட்டுகள்.
- அலுவலக அறை
- களஞ்சிய அறை
- சமையலறை
- சுகவீனமுற்ற பிள்ளைக்குச் சுகவீன அறை /பாதுகாப்பான இடம்
- பிள்ளைகளுக்குப் பொருத்தமான நீரடைப்பு மலசலகூடங்களும் பாவனைக்கான தண்ணீரும் (25 பிள்ளைகளுக்கு ஒரு மலசலகூடம்)

### 1.5 தளபாடம், சாதனங்கள், வசதிகள்

- பிள்ளைகளுக்குப் பொருத்தமான இலேசான பலகையினால் செய்யப்பட்ட மேசைகளும், கதிரைகளும்.
- ஆசிரியர் மேசைகளும், கதிரைகளும்.
- ஆவணங்கள் வைப்பதற்கான அலுமாரிகள்

- பிள்ளைகளுக்குரிய சுவர்க் கரும்பலகை
- கற்றல் விளையாட்டுப் பொருட்களைப் பிள்ளைகளின் கண்மட்டத்தில் வைப்பதற்கான இராக்கைகள்
- படங்களும், புத்தகங்களும் அவற்றை வைப்பதற்கான இடமும்
- பிள்ளைகளின் வேலையைக் காட்சிப்படுத்தும் வசதிகள்
- உணவு தயாரித்தலுக்கும் பாதுகாப்பதற்கும் பயன்படும் சாதனங்கள், உணவு மூடிகள் மற்றும் தண்ணீர் சேமிப்பதற்கான பாத்திரங்கள்
- குடிநீர் கொதிக்க வைப்பதற்கும் சேமிப்பதற்கும் உரிய வசதிகள்
- பிள்ளைகள் தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் புத்தகப் பைகளை வைப்பதற்கு ஒரு இராக்கை / கொழுக்கி

1.6 துப்பரவு செய்யும் வசதிகள்

- குழாய் / கிணற்றிலிருந்து தண்ணீர் கிடைத்தல்
- மலசலகூடத்திற்குப் போதிய நீர் வசதி இருத்தல் வேண்டும்
- குடிப்பதற்குக் கொதித்தாறிய நீர்
- சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் வெளிக்கள விளையாட்டின் பின்னும் கைகழுவுவதற்கும் மலசலகூடப் பாவனைக்கும் போதிய நீர் உள்ள இடம்.
- வீசவேண்டியவற்றை ஒழுங்காக அகற்றுவதற்குரிய வழிமுறைகள்

## 2.ஆரோக்கியமான சூழல்

2.1 சுகாதாரப் பராமரிப்பும் போசாக்கும்

- பிள்ளைகளிடத்தில் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.
- பிள்ளைகளின் சுத்தம், சுகாதாரத்தில் நாளாந்தம் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் போசாக்குள்ள உணவு பரிமாறப்பட வேண்டும்.
- போதிய மருந்துகளுடன் கூடிய முதலுதவிப் பெட்டி.
- பிள்ளைகளின் சுகாதார அறிக்கைளைப் பேணுதல்.

2.2 கற்றலும் உள சுகாதாரச் சூழலும்


- சூழவுள்ள வளாகம் அல்லது பிரதேசத்தைப் பிள்ளைகள் அவதானிப்பதற்கும் தேடுதல் திறன்களை விருத்தி செய்வதற்குமேற்ற முறையிலி பயன்படுத்துதல்.
- பிள்ளைகள் தனியாகவும் குழக்களாகவும் விளையாடுவதற்குப் பாதுகாப்பான வெளிப்புறம்.
- வெளிப்புற விளையாட்டுக்குத் தேவையான சாதனங்கள் (உதாரணமாக, ஊஞ்சல், ஏறுசட்டங்கள் சுவர்கள் முதலியன)
- மண் மற்றும் நீர் விளையாட்டுக்களுக்கும் ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.
- மண் விளையாட்டுக்கும் நீர் விளையாட்டுக்கும் பல்வேற பருமனிலான கொள்கலன்கள், வடிவங்கள், கனவளவுகள் கிடைக்க வேண்டும்.
- போதியளவு உள்ளகக் கற்றல் சாதனங்களும் அனுபவங்களும் பிள்ளைகளின் ஆக்கத்திறன் பின்பற்றுதல், இயல்பாக இயங்கும் நிலை, எழுந்துவரும் திறன்கள் என்பவற்றை உருவாக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். விளையாட்டு மூலை, சுற்றாடல் மூலை, சித்திர மூலை, சங்கீத மூலை, நீர் மூலை, மணல் மூலை ஏனைய கற்றல் மூலைகள் இருத்தல் வேண்டும்.
- விசேட தேவையுடைய பிள்ளைகளுக்குப் பொருத்தமான தூண்டுதல்களையும் கற்றல் அனுபவங்களையும் வழங்குதல்.

2.3 – சமூகச் சூழல்

- பிள்ளைகளும் பெற்றோரும் முன்பள்ளிக்கு வரும்பொழுதும் போகும்பொழுதும் அன்புடன் வாழ்த்துதல் வேண்டும்.
- முழுச்சுற்றாடலும் மகிழ்ச்சி மற்றும் ஏற்புடமையைப் பிள்ளை அனுபவிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- பிள்ளைகளை அச்சுறுத்தும் பிரம்பு போன்ற பொருட்களற்ற சூழல்.
- பிள்ளைகள் தாம் விரும்பித் தெரிவுசெய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் சுதந்திரமும் வாய்ப்பும் வழங்குதல் வேண்டும்.
- சுய ஊக்குவிப்புள்ள மகிழ்ச்சியான விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் காரணமாகச் சுய கட்டுப்பாடு தோன்றுவதை ஊக்குவிக்க வேண்டும்.
- உடை, சப்பாத்து அணிதல் தாமாகவே விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் தேர்ச்சி பெறும் உணர்வோடும் செயல்களில் ஈடுபடுவதற்கும் கற்றல் போன்ற விடயங்களில் மற்றவர்கள் தங்கியிருக்காமைக்கும் உதவுதல்.
- பிள்ளைப் பராமரிப்பாளர் பிள்ளையின் பெற்றோர் பிள்ளையின் உரையாடல்களுக்குப் பிள்ளையை ஊக்குவித்தல்.
- பிள்ளைகள் சேர்ந்து விளையாடுவதற்கும் மற்றவர்களுக்கு உதவிசெய்யவும் வளங்களை பகிகிர்ந்துகொள்ளவும் ஏனைய பிள்ளைகளின் கருத்துக்களையும் தேவைகளையும் மதிக்கவும் போதியளவு வாய்ப்புக்களை வழங்குதல்.
- ஆட்களுக்கு இடையே உள்ள தொடர்புகள் நல்ல பழக்கவழக்கங்கள் உருவாகுதல், சுத்தம் பற்றிய பெறுமானங்கள்,மனப்பாங்கு நேர்த்தி, பாதுகாப்பு என்பவை விருத்தியடைய உணவுவேளை போன்ற நாளாந்த நிகழ்வுகளைப் பயன்படுத்தல்.

2.4 சமயச்சூழல்

- பெற்றோர் விருப்பத்துடன் சமய வழிபாட்டில் பங்கேற்றல்.
- சமய வழிபாட்டிற்கெனப் பொருத்தமான இடம் ஒதுக்கப்படல்.
- சமய விழாக்களைக் குறிக்கும் விசேட கொண்டாட்டங்கள்.



# முன்பள்ளிகளில் பேணப்பட வேண்டிய ஆவணங்களும் நாளாந்த செயற்பாடுகளும்

ஒரு முன்பள்ளியானது எவ்வாறு முறைப்படியாகவும் வினைத்திறனுடையதாகவும் முகாமைத்துவம் செயற்பட வேண்டும் என்பதனை முகாமைத்துவ விடயங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றின் மூலம் முகாமைத்துவத்தின் தராதரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. வினைத்திறனுள்ள சேவையை வழங்குதல் தொடர்பாக சில அறிக்கைகளைப் பேணுதல், சமய மற்றும் கலாசார செயற்பாடுகளுக்குரிய வசதிகளை வழங்குதல் என்பன அவசியமாக உள்ளது.

இதற்கேதுவாக முன்பள்ளி ஒன்றில் பேணவேண்டிய தகவல்கள் மற்றும் ஆளணிகள் அவர்களுக்குரிய கடமைகளுக்குரிய நாளாந்த வேலைத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன. இவற்றைப் பேணிவரும் முன்பள்ளிகள் தமக்குரிய சமூகப் பொறுப்பினை உணர்ந்து கொண்டவர்களாக விளங்குவர் என்பது திண்ணம்.

**1.பேணப்படவேண்டிய ஆவணங்கள்:**

i. சேர்வு இடாப்பு
ii. பிள்ளைகளின் வரவு இடாப்பு
iii. ஆசிரியர் வரவு இடாப்பு
iv. பெற்றோர் கூட்ட வரவு இடாப்பு
v. அவசரத்தேவையின்போது தொடர்புகொள்ளவேண்டிய பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் - முகவரிகள் கொண்ட இடாப்பு.

vi. பிள்ளைகள், ஆசிரியர்கள் / பராமரிப்பாளரின் சுய விபரக்கோவை.
vii. பிள்ளைகளின் சுகாதார அறிக்கைகள்.
viii. பிள்ளைகளின் முன்னேற்ற அறிக்கை
ix பொருட்பதிவேடு
x. சம்பவத்திரட்டுப்புத்தகம் (log book)
xi.. நிதிசார் அறிக்கைகள்
xii. தவணை வருடாந்த வேலைத்திட்டம்
xiii. பெற்றோர் ஆசிரியர் கூட்டறிக்கை
xiv.. முகாமைத்துவச் சபைக்கூட்ட அறிக்கை
xv. ஆசிரியர் விடுமுறைப் பதிவேடு

**2. ஆளணிகள்**

ஆசிரியர்கள் / பராமரிப்பாளர்கள்

- ஒவ்வொரு 20 பிளளைக்கும் ஒரு ஆசிரியர்கள் / பராமரிப்பாளர்கள் இருத்தல் வேண்டும்.
- ஆசிரியர்கள் / பராமரிப்பாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொழிற்றகமைப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆசிரியர்கள் / பராமரிப்பாளர்கள் சேவைக்கால பயிற்சிகளும் பெற்றிருத்தல் வேண்டும்

3.உதவியாளர்

பின்வருவனவற்றுக்கு உதவியாளர்கள் தேவை

- கட்டிடம் மற்றும் வளாகம் போன்றவற்றைப் பேணுதல்.
- பிள்ளைகளின் சுத்தத்தைக் கவனித்தல்.
- உணவு தயாரித்தல் உணவின் பின்னர் சுத்தம் செய்தல்.

4. பெற்றோர் மற்றும் நிருவாக ஆதரவு

- முகாமைத்துவச் சபையொன்று இருத்தல் வேண்டும்.
- பெற்றோர் ஆசிரியர் சங்கம் இருத்தல் வேண்டும்.

5. நாளாந்த வேலைத்திட்டம்

விருத்தி நிலையத்தின் செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்

- நடைமுறை ஒழுங்குகள்
- சமய அனுட்டானங்கள்
- வெளிப்புற விளையாட்டு
- குறுகிய இடைவேளை
- அமைப்பாக்கப்பட்ட கற்றல் செயற்பாடுகளும் தலைப்புக்களுக்கு செயற்பாடுகளும் தலைப்புக்களுக்கு பொருத்தமான ஆக்கத்திறன் விளக்கமும் (இவை அவதானம், தேடுதல், கேட்டல், மற்றும் தொடர்பாடல் என்பவற்றை உள்ளடக்கும்) ஆக்க விளக்கமானது பேச்சு, வரைதல்.பாத்திரமேற்று நடித்தல், முன்வாசிப்பு, முன்எழுத்து, முன்எண் செயற்பாடுகள் ஊடாக அமைதல் வேண்டும்.
- உணவு நேரம்
- கற்றல் (மூலை)களுடன் இணைந்த சுதந்திரமான விளையாட்டு.
- குழு விளையாட்டு / தனி விளையாட்டு
- சங்கீதம், பாட்டு, நாடகம் என்பவற்றின் மூலம் அழகியல் உணர்வினை விருத்தி செய்தல்.
- கதை சொல்லல்.
- சுற்றாடல் பற்றிய அறிவு தொடர்பான விளையாட்டு, அவதானம், தேடுதல்.
- அடிப்படைச் சுகாதாரப் பழக்கவழக்கங்களும் சுய உதவிச் செயற்பாடுகளும்.
- சுத்தம் பேணுதல்
- நாளின் முடிவில் வாழ்த்துதல்




# முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபாகம்

சமூகத்தின் பின்புலத்தில் உருவாகும் முன்பள்ளியொன்றில் வாய்ப்புக்களும் வளங்களும் போதிய அளவில் கிடைத்தால் மட்டும் அம் முன்பள்ளிச் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கவையாக விளங்கமுடியாது. அந்த வாய்ப்புக்கள் வளங்களுடன் அங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்களும் தமது பொறுப்புக்களை நன்கு உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு அவர்களது புலன்கள் மூலமாக வழங்கவேண்டிய ஆரம்ப அனுபவங்களை அர்த்தமுடையனவாக வழங்கத் தவறுமிடத்து குழந்தையின் எதிர்கால விருத்தியின் முன்னேற்றம் அது முதிர்ச்சியடையும் வேகத்தை வெகுவாகப் பாதிப்பதாக அமையும். எனவே முன்பள்ளி ஆசிரியாகள் தமது சூழலைப் பயன்படுத்தி தமக்குரிய வளங்களுக்கேற்ப தமது செயற்பாடுகளைத் திட்டமிட்டு வழங்குவதே நடை முறைக்கு உகந்ததாகும். குழந்தையின் அறிவு விருத்தியடைவதற்குரிய வாய்ப்புக்கள் புலன்வழி உணர்வுகள் மூலமாகவும் அனுபவங்கள் மூலமாகவும் குழந்தை அறிந்துகொள்ளும் வகையில் முன்னைய அனுபவங்களுடன் தொடர்பு பட்டு புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும். முன்பள்ளி ஆசிரியா் ஒருவரின் வகிபாகம் பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- முன்பள்ளியின் உள்.வெளிப்புறங்களை சுத்தமாக பேணுதல்
- காலை வேளைகளில் முன்பள்ளிக்கு வரும் பிள்ளைகளை அன்போடு வரவேற்றல்.
- ஆசிரியர் கனிவான குரலினால் நட்புறவோடு பிள்ளைகளை அழைத்தல்
- பெயர் கூறிப் பிள்ளைகளை அழைத்தல்
- பொறுமையும் சகிப்புத் தன்மையும் இருத்தல்
- புதுப்புது செயல்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தி மகிழ்வித்தல்
- பிள்ளைகள் கூறுவதை அவதானமாக செவிமடுத்தல்
- செயற்பாடுகளின் போது பிள்ளைகளை பாராட்டுதல்
- ஆசிரியர் பிள்ளைகளின் செயற்பாடுகளின் போது உதவுபவராக இருத்தல்
- செயற்பாடு ஒவ்வொன்றும் புதுமையாகவும், கவர்ச்சியாகவும் இருத்தல்
- செயற்பாடுகளின் போது இடையிடையே கேள்வி கேட்டு பிள்ளைகளை சிந்திக்க வைத்தல்
- கற்றல் நிலையங்களை அமைத்தல், சுதந்திரமான செயற்பாடுகளில் ஈடுபட வைத்தல்
- பிள்ளைகளின் பின்னணி பற்றி அறிந்திருத்தல்
- பெற்றார், ஆசிரியர் சங்க கூட்டம் நடாத்துதல்
- பெற்றோரிடம் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தல்
- பெற்றோரின் நாளாந்த வகுப்பறை ஈடுபாடு அவசியம் என்பதை உணர்ந்து செயற்படல்
- பெற்றோர் மூலை அமைத்தல்
- ஒழுங்கான முறையில் ஆக்கங்களை காட்சிப்படுத்தல்
- பிள்ளைகள் கையாளக் கூடிய வகையில் விளையாட்டு பொருட்களை ஒழுங்காக வைத்தல்.
- பிள்ளைகளின் பார்வை மட்டத்தில் காட்சிப் பொருட்களை வைத்திருத்தல்.
- ஒரு பிள்ளையை மற்றப் பிள்ளையுடன் ஒப்பிடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- பிள்ளைகளது இயல்பிற்கும் , விருப்பத்திற்கும், திறனுக்கும் ஏற்ப செயற்பாடுகளை திட்டமிடுதுல்
- ஆசிரியர் கவர்ச்சியானதும் பிள்ளைகள் விரும்பத் தக்கதுமான பல்வேறு சூழலை அமைத்து பிள்ளைகளை ஆராய்ச்சியில் ஈடுபடுத்தல்
- பிள்ளைகள் தனியாகவும் குழுவாகவும் செயற்பட சந்தர்ப்பம் அளித்தல்
- குழுக்களுக்கும் தனியாளுக்கும் அவர்களுக்கு விரும்பிற்கேற்ப செயற்பட ஊக்குவித்தல்.

- ஆசிரியர் தாமே தேடி அறிவைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொண்டு செயற்படுதல்
- பாடத்திட்டம், பாடக்குறிப்பு, பாடப்பதிவு சரியாக மேற்கொள்ளல்
- வெளிக்கள விளையாட்டுக்கு இடத்தையும் உபகரணங்களையும் ஒழுங்கு செய்தல்
- பிள்ளைகள் தமது உரிமைகளையும் தேவைகளையும் பெறுவதற்கு வழிகாட்டல்
- ஆசிரியர்களின் செயற்பாடுகள் பிள்ளைகளினால் ஆர்வத்துடனும், விருப்புடனும் ஏற்றுக் கொள்ள கூடியதாகவும் வளைந்து கொடுக்கக் கூடியதாகவும் இருக்க திட்டமிடுவது ஆசிரியரின் கடமையாகும்.
- பிள்ளைகளை சிறிய சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லல்




# குழந்தையொன்றின் முழு விருத்திக்கான ஆரம்ப அனுபவங்களை பெற்றுக்கொடுப்பதற்கான ஆலோசனைகள்

சு.கிருஷ்ணகுமார்
வலயக்கல்வி பணிப்பாளர்
தென்மராட்சி

ஒரு குழந்தையின் ஆரம்ப முதிர்ச்சிக்குரிய காலப்பகுதி என்பது அதன் பிறப்பிற்கும் முதன் முறை பாடசாலை செல்வதற்கும் இடைப்பட்ட காலம் என்பது உளவியலாளர்களின் தீர்க்கமான கருத்து. இப்பரு வத்தில் இவற்றை பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை அவர் தம் பெற்றோர் மட்டு மல்ல இவ்விடயங்களைக் கையாள்வோரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும். இதற்கேற்ப குழந்தையின் முழுவிருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க சம்மந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

குழந்தையின் அறிவையும் அடிப்படை ஆற்றல்களையும் நற்பழக்கவழக்கங்களையும் வளர்த் தெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அவர்களது வீட்டுச்சூழலில் நாளாந்த செயற்பாடுகளின் மூலம் அளிக் கப்பட்டுவரினும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வழிமுறைகளினூடு இவற்றை வழங்குவதற்கான ஏற்பாடாகவே முன்பள்ளிகளின் செயற்பாடுகள் அமையப்பெற்றுள்ளன. இவர்களை பாடசாலை முறை மையில் இணைத்துக்கொள்வதற்கு ஏற்புடைய அடித்தள அங்குரார்ப்பணங்களையும் உளச்சார்பு நிறைந்த செயற்பாடுகளை உள்ளடக்கிய வழிமுறைகளும் இம் முன்பள்ளிக் கருமங்களில் நன்கு திட்டமிட்ட வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு. உள்ளது முன்பள்ளி முகாமைத்துவத் திட்டத்தினூடு பரிந் துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கமைய முன்பள்ளி செயற்பாடுகள் நெறிப்படுத்தப்படுவதும் குறிப்பி டத்தக்கது. இதற்கமைய குழந்தையொன்றின் பூரணவிருத்திக்கு
கையாளவேண்டிய வழிமுறைகள் பற்றிய விவரணம் கீழ் தரப்பட்டுள்ளது




## உடல்வளர்ச்சி

ஒவ்வொரு பிள்ளையினதும் உடல்வளர்ச்சியில் கண்காணிப்பு அவசியம். இப்பிராயத்தில் உடல் ரீதியாக வளர்ந்து வரும் பிள்ளைகளின் உயரமும் பருமனும் நல்ல முறையில் உடல் வளர்ச்சி

பெறுவதினூடாக உடல் திறன்களும் இயக்கத் திறன்களும் அதனூடான பண்புசார் நடத்தைகளும் எழுச்சி பெறும். உடல்வளர்ச்சியும் அபிவிருத்தியும் சமகாலத்தில் முன்னேற்றம் கண்டு வரும். உடல்வளர்ச்சிக்கு ஏற்றதான போசாக்கான உணவுகள் மிக இன்றியமையாததென்பது பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்படவேண்டும். எலும்புகள், நரம்புகள், தசைகள், சக்தி, பெறுவதற்கும் வளர்ச்சியடை வதற்கும் உடற்பயிற்சி வழிகாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாய்தல், ஏறியிறங்குதல், சுற்றிவருதல், ஓடுதல், ஊஞ்சலாடுதல் போன்ற பல்வேறு செயல்களை செய்ய பிள்ளைகளை ஊக்கு விக்கப்பட வேண்டும். முறையான அட்டவணைப்படுத்தல் மூலம் வயதுக்குரிய உடல்பருமன் அதற்கேற்புடைய உயரம் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துவதுடன் அதற்குரிய ஆவணங்களையும் முன்பள்ளிகளில் பேணி வரவேண்டும்.

## மொழிவிருத்தி

ஆரம்பபிள்ளை பருவத்தில் சூழலில் கற்கும் சொற்களை கொண்டு நாளாந்த தேவைகளை நிறைவேற்ற பிள்ளைகளை ஏற்புடையதாக்குவதே மொழிவிருத்தி படிமுறையின் ஆரம்ப நிலையாகும். இதன்மூலம் பிள்ளையின் உள்ளார்ந்த திறமை வளர்த்தெடுக்கப்படுகின்றது. தான்வாழும் சூழலுக்கு ஏற்பவே பிள்ளையொன்றின் சொல்விருத்தி வளம் பெறும். வளங்கள் நிறைந்த சூழலில் வளரும் பிள்ளைகளின் மொழிவிருத்தி ஏனையோரிலும் பார்க்க ஏற்றமிகு வளர்ச்சிப் பாதையில் தடம்பதித்துச் செல்லும்.

முன்பள்ளியொன்றில் மொழிவிருத்தி செயற்பாடுகளில் பிள்ளைகளிடம் வளர்த்தெடுக்கப்படவேண்டிய திறன்கள் பின்வருமாறு

01. செவிமடுத்தல்திறன்
02. பேச்சுத்திறன் / வாசிப்புத்திறன்
03. எழுத்துத்திறன்

இவற்றில் ஒவ்வொன்றிலும் தேர்ச்சி மட்டங்களை இனம் கண்டு அனுபவங்களை அளித்த பின்னர் அவற்றில் வினாக்களை முன்வைத்து பிள்ளைகளிடம் சிந்தனை கிளறல்களை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளில் திக்கிதிக்கி, தாமதித்துப் பேசுதல் போன்ற இயல்பினரும் இருப்பதுண்டு. இவர்களது வளர்ச்சிக்கு உதவும் அணுகுமுறைகளை அறிந்து செயற்பட்டு மாற்றமொன்றை ஏற்படுத்துவதில் மிகக்கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

## சூழல் சார் விருத்தி

ஆரம்பபிள்ளை பருவத்திலுள்ள பிள்ளைகளின் அனுபவங்கள் முதற் கட்டமாக சூழலில் இருந்தே தோற்றுவிக்கப்படுகின்றது என்பது நிறுவப்பட்ட தொன்று. சூழலிலுள்ள உயிருள்ள உயிரற்ற அனைத்து அம்சங்களும் உள்ளடங்கிய வீட்டுச்சூழல், முன்பள்ளி சூழல், சமூக சூழல், என்பவற்றை அறிந்து கொள்வதன் மூலம் இயற்கைசூழல் தொடர்பான விளக்கமும் அறிவும் பிள்ளையொனின் அறிவு விருத்திக்கு அவசியம். அவதானித்தல், அனுபவித்தல், உணர்தல், பார்த்தல், கேட்டல், என்பவற்றினூடாக பிள்ளை சூழலை அறிந்து கொள்கின்றது. சூழல் பிள்ளையொன்றின் முழுமையான வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைவதால் பின்வரும் விடயங்களில் பிள்ளைகள் வழிகாட்டப்படல் வேண்டும்.

01. இயற்கை அம்சங்களுடனான பௌதீக சூழல் (நதிகள், குன்றுகள்,தாவரங்கள், விலங்குகள்....)
02. இயற்கை நிகழ்வுகள் (காற்று, மழை, வெய்யில், இடி, மின்னல்.....)
03. பௌதீக கட்டுமான சூழல் (வீடு, போக்குவரத்து, வீதி, ஒழுங்கு......)
04. கலாசார சூழல் (உற்சவங்கள், பழக்கவழக்கங்கள.....)
05. ஒலிகள் பற்றிய விளக்கம் (ஒலிகளின் சுவை, வேறுபாடுகள்......)
06. உதவுபவர்கள், உதவிசெய்பவர்கள் (தாய், தந்தை, உறவினர்கள், ஆசிரியர்கள், மதகுரு, பொலிஸ், தபாற்காரர், தாதிகள், வியாபாரிகள்....... )

07. சூழலை பாதுகாப்பதற்கான பழக்கவழக்கங்களை ஏற்படுத்தல்

08. சூழலை / சுற்றாடல் அழகியல் சார்பான எண்ணங்களை உருவாக்குமுகமாக அழகுபடுத்தல்

## கணித எண்ணக்கரு விருத்தி

நாளாந்த செயற்பாடுகளில் விளையாட்டின் ஊடு கணித எண்ணக்கருக்களை பிள்ளைகளின் மனதில் பதிய வைக்கு முகமாக அனுபவங்களை வழங்க வேண்டும். பின்வரும் திறன்களை வழங்குவதனூடாக பிள்ளைகளின் பிரயோக மார்க்கத்தை வளர்த்தெடுக்கவேண்டும்.

- தெரிதல் , எண்ணுதல்
- வகைப்படுத்தல் , நிறம் அறிதல்
- நீள அகலம் , நிறை அளத்தல்.
- வரிசை கிரமம் பேணல் , உருவங்களை ஒன்று சேர்த்தல்

## மனவெழுச்சி விருத்தி

ஆரம்பப் பிள்ளை பருவத்தினரிடம் அவர்களது புலன்களை திசை முகப்படுத்தி அசைவுகளை மனப்படிமங்களினூடு ஊக்கு விக்கும் செயற்பாடு மனவெழுச்சி விருத்தியின் ஆரம்ப கட்டமாகும். இவ்வ கையிலான செயற்பாடுகள் பிள்ளையின் முழு வளர்ச்சிக்கு பொருத்தப்பாடான திறமையையும் சுய ஊக்கத்தையும் வளர்த்தெடுப்பதற்கு ஏதுவானவையாகும்.
மனவெழுச்சி செயற்பாடுகளை ஏனைய வளர்ச்சிக்கான படிமுறைகள் பின்பற்றப்படும் சமகாலத்தில் வினைத்திறன் மிக்க உத்திகளோடு கையாள வேண்டும்.

- பொதுவான நடைமுறை :- உடலின் சகல தசைநார்களின் இயக்கத்தை பெருக்கும் ஓடுதல், பாய்தல், ஏறுதல், இறங்குதல், போன்றவற்றை பிள்ளைகளின் மேலும் மேலும் செயற்பட உற்சாகமளித்தல்.
- சிக்கலான நடைமுறை :- நுண்ணிய மனவெழிச்சி செயற்பாடுகள் எனப்படும் வெட்டுதல் ஒட்டுதல், கிழித்தல், பொருத்தல், அடுக்குதல், வரைதல், பொறுக்குதல, முறித்தல், என்ற அனுபவங்களை பெற்றுக்கொடுத்தல்.

## சமூகம் சார் விருத்தி

ஆரம்ப பிள்ளைப் பருவ வயதினரின் முழுமையான வளர்ச்சிக்கு சமூகம் சார் விருத்தி மிகவும் அத்தியாவசியமானது . பெற்றோர், உறவினர், அயலவர்களினதும் அன்பும் ஒத்துழைப்பும் கிடைக்கும் பிள்ளைகள், தாம் வாழும் சூழலில் பழக்கவழக்கங்களுக்கும் நடத்தைக் கோலங்களுக்கும் நாள் தாறும் தம்மை இற்றைப்படுத்தி கொள்ளும். தனது சகபாடிகளுடன் சேர்ந்து நட்புறவை வளர்ததுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்கவும் ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளை யாடுவதற்குமான வழி வகைகளை ஏற்படுத்தி கொடுப்பதும் முன்பள்ளி ஆசிரியர்களது கடமையாகும். ஒவ்வொர் பிள்ளையினதும் சமூகப் பின்னணியை பரீசீலித்து அவர் தம் சமூகம் சார் விருத்திக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு பிள்ளை தான் சார்ந்த சமூகம் பழக்கவழக்கங்களையும் நடத் தைகளையும் இயல்பாகவே உள்வாங்குவதனால் முன்பள்ளி செயற்பாடுகள் ஒவ்வொன்றும் மூலம் பிள்ளையின் விருத்திக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

## அக-புற நடத்தைகள் விருத்தி

முன்பள்ளியொன்றை நாடி வரும் பிள்ளைகளில் அக-புற நடத்தைகளை வெளிப்படுத்துகின்ற வர்களும் நிச்சயமாக இருப்பார்கள். வெளிப்படையாக அழுது புரள்பவர்களும் பிடிவாத குணமுடை யோரும் பயவுணர்ச்சியால் பின்னடிப்போரும் மனம் வெதும்பிய சுபாவமுடையோரும் மனக் கலத்தை வெளிப்படுத்துவோரும் என ஒருசாரார் இருக்க மறுபக்கத்தில் மகிழ்ச்சியுடன் துள்ளித் திரிவோரும் தனது சக பாடிகளுடன் கலந்து பழகுவோரும் அமைதியாக அவதானிப்போரும் என இன்னோர் சாரரும் இருப்பார்கள். இவர்களின் இயல்புகள் காலப்போக்கில் முறையான வழி நடத்தல்களினால் மாற்றம் பெறுவதற்கான வழிமுறைகள் முன்பள்ளியொன்றில் அமுல்படுத்தப்பட வேண்டும். இதே சமயம் வெட்கம் ஏக்கம், கூச்சம், பயம் போன்ற சுபாவங்கள் வெளிப்படையாக வெளிக்காட்டப்படாத நிலையில் அவ்வாறான பிள்ளைகளிடம் தனியாள் வேறுபாட்டுக்கு அமைய பொருத்தமான அணுகுமுறைகளை பின்பற்றி அரவணைத்து செல்வது முக்கியம்.

கற்றல் இயலாமை Learning disabitilies
மெதுவாக உள வளர்ச்சியடைதல் Mental Retardation
உடலியல் குறைபாடுகள் Orthopetic Impairment
கேட்டல் பார்வைக் குறைபாடு Hearins, Visual Impairment
குருட்டு செவிட்டுத் தன்மை Deaf Blindness
நற்சிந்தனை Autism
டிவ்லெச்சியா Dylasia
போன்றவற்றை வித்தியாசப்படுத்தி வகை பிரித்தறிந்து ஆவன செய்வது பற்றி முன்பள்ளி ஆசிரியர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

## விவேக விருத்தி

ஆரம்ப பிள்ளை பருவத்தில் நாள்தோறும் பெறப்படும் புதிய புதிய அனுபவங்களில் எண் கணித அனுபவங்களுடன் விசேடமாக கிரகித்தல் அறிதலும் சேரும் போது அவர்களது விவேக விருத்தி வளர்ச்சி தூண்டப்படும். பிறப்பிலிருந்து கிடைக்கும் நுண்ணறிவு சார் தன்மை பிள்ளையொன்றின் வளமிகு சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப தூண்டப்படும். முன்பள்ளியொன்றில் வழங்கப்படும் புலன் வழி அனுபவங்கள் நீண்ட நேரம் நீடித்தல் எனும்போது இவ்வாறான பிள்ளைகள் சிலவேளைகளில் விரும்பத்தகாது நடத்தைகளை வெளிப்படுத்துவதற்கு வழிகோலும். இவ்வேளைகளில் புதியமுயற்சிக் கான வழிகாட்டல்கள், சிக்கல்களை விடுவிப்பதற்கு உதவுதல். இதற்கேற்ப விளையாட்டுக்களிலும் புதிய ஆக்கங்களிலும் பிள்ளைகளை ஈடுபட வைத்தல் சிறப்பானதாகும்.

**நிறைவாக பிள்ளையொன்றின் முழுமையான விருத்தியில் முன்பள்ளிகளும் அதன் நிர்வாக மும் பங்கேற்கும் போது ஒவ்வொர் பிள்ளையையும் தான் சார்ந்த சமுதாய பழக்கவழக்கங்களுடன் இழையோடியுள்ள கலாசார பண்பு சார் விடயங்களையும் ஆன்மீக உணர்வுகளை மனதில் இருத்தும் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களின் செயற்பாடுகள் பிள்ளைகளை அன்பாக அரவணைத்து செல்வதற்குரியதாக இருக்க வேண்டும். எவ்வடிவிலான தண்டனையை யும் வழங்கப்படாதிருப்பதை முன்பள்ளி ஆசிரியரும் அதன் நிர்வாகமும் உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். இன்றேல் அது பிள்ளைகளின் ஆளுமை விருத்தியை பாதிக்கும். இறுதியாக முன் பள்ளி யை நாடிவரும் ஒவ்வொர் பிள்ளையும் தனது ஆரம்ப பிள்ளைப்பருவத்தினை விருப்புடனும் மிகவும் மகிழ்ச்சியுடனும் கழிப்பதற்கான சூழ்நிலைகள் வழங்க வேண்டியது முன்பள்ளி ஆசிரியர் ஒவ்வொரு வரினதும் தலையாய கடமையாகும்.**

# உத்தேச பாடத்திட்டமும் பாடக்குறிப்பும்

முன்பள்ளி முகாமைத்துவ குழு கட்டமைப்பும் பொறுப்புக்களும் எனும் முதலாவது கட்டுரையில் நோக்கங்கள் எனும் தலைப்பில் கூறப்பட்டுள்ள பிரிவு 1:7 இல் கூறப்பட்டவாறு முன்பள்ளி செயற்பாடுகள் மு.ப. 8.00 மணி தொடக்கம் மு.ப. 12.00 மணி வரை நடைபெறுவதை முகாமைத்துவ குழுவினால் உறுதிபபடுத்தப்பட வேண்டும்.இதன் பிரகாரம் இவ்வாண்டு( 2015) தவணை ரீதியாக ஒவ்வோர் கிழமையும் முன்பள்ளிகளில் அமுல்படுத்தப்பட வேண்டிய உத்தேச பாடத்திட்டம் தரப்படுகின்றது. இதில் ஒவ்வொருவரும் சூழல், மொழி, கணிதம், சித்திரம், சங்கீதம், மன அபிவிருத்தி, மனவெழுச்சி, சுகாதாரம், பொது நிகழ்வு என்ற புலன் விருத்திகளுக்கு வழங்கப்பட வேண்டிய அனுபவங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதில் பயன்பாட்டிற்குரிய "விளையாட்டு அல்லாத விளையாட்டு" என்ற ஊக்குவிப்பு முறைகளடங்கிய நூலிலுள்ள தலைப்புக்குரிய பிரிவு இலக்கங்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே இந்நூல் இங்கு பயன்படுத்தப்பட்டே ஆக வேண்டும். இயலுமானவரை குறித்த திட்ட ஒழுங்கமைப்பில் இவ் உத்தேச பாடத்திட்டத்தின்படி பிரகாரம் முன்பள்ளி செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுவதொன்று.

இந்த வேளையில் முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் ஒரு கிழமைக்கு தான் எழுத வேண்டிய பாடக்குறிப்பு பற்றிய மாதிரி ஒன்றும்(23.03.2015 - 27.03.2015) தரப்பட்டுள்ளது.



# முதலாம் தவணைக்கான உத்தேச பாடத்திட்டம்

| திகதி | சூழல் | உடல் | மொழி | கணிதம் | சித்திரம் | சங்கீதம் | மன அபிவிருத்தி | மனவெழுச்சி | சுகாதாரம் | பொதுத்திறமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05.01.2015 09.01.2015 | [illegible] 04 – 32 | [illegible] 01 – 39 | [illegible] 02 – 11 | [illegible] 03 – 49 | [illegible] 5 – 1 – 43 | [illegible] 5 – 2 – 4 | [illegible] இருக்கும் போது 06-25 | [illegible] 7 – 1 | [illegible] | முன்பள்ளி மாணவர்களை அன்புடன் வரவேற்றல் பெ.க.உரையாடல் |
| 12.01.2015 16.01.2015 | காந்தம் 04 – 33 | தேன்பூ துளவியும் 01 – 38 | ஒருசொல் கூறுதல் 02 – 24 | எண்கழுத்து மாலை 03 – 68 | கறுப்பு மை சித்திரம் 5-01 – 36 | [illegible] 5-2-26 | பேச்சில்லை 06 – 30 | முன்பள்ளி மரம் 7-2 | முன்பள்ளி உணவு [illegible] | பொங்கல் விழா |
| 19.01.2015 23.01.2015 | பெட்டிகளில் அடுக்கிவைத்தல் 04 – 34 | விளையாட்டுப் பொருளை பார் விழுத்துவது 01 – 53 | புத்தகம் உருவாக்குதல் 02 – 22 | இலக்கம் பழப்போம 03 – 64 | விளையாட்டு [illegible] கோடும் 5 – 1 – 45 | இசையில் வைத்தல் 5-2-2 | அப்பிள் கதை மாம்பழத்தின் கதை 06-32 | [illegible] உதவுங்கள் 7 – 4 | மரம் நடுகை | சிரமதானம் |
| 26.01.2015 30.01.2015 | ஊசலாடி 04 – 35 | சமநிலை பேணல் 01 – 52 | எங்கள் தொலை பேசி 02 – 20 | பெருவிரல் அடையாள இலக்கங்கள் 03 – 62 | அழகிய [illegible] கடைகள் [illegible] இதழ்கள் 5-1-33 | [illegible] 5-2-23 | முகங்களின் உணர்ச்சிகள் 06- 28 | பிறருக்கு உதவுதல் 7 – 5 | தானியங்கள் விதைத்தல் | |
| 02.02.2015 06.02.2015 | மலையில் இருந்து கீழே வருதல் 04 – 36 | அதனை விழவிட கூடாது 01 – 34 | தேடலும் சொல்லுதலும் 02 – 23 | மறைந்துள்ள விளையாட்டுப் பொருட்களைக் கண்டுபிடித்தல் 03 – 58 | இரங்கை முதிரிகள் 5-1-21 | கழிவுப் பொருட்களில் இசை 5-2-17 | சிறுமரங்களைக் கட்டுதல் 06 – 16 | எனது விருப்பங்கள் 7 – 6 | ஒவ்வொரு நாளும் கைகளைச் சுத்தமாக்குதல். | |
| 09.02.2015 13.02.2015 | சூரிய கடிகாரம் செய்தல் 04 – 37 | ஆடும் பொம்மை 01 – 36 | முதல் திங்கள் பின் நான் 02 – 25 | இலக்கப் பலகைகள் 3 – 56 | சூரிய அடையாளம் 5-1-26 | ஒலியினை தேடுதல் 5-2-20 | நடிப்பினம் 6 – 17 | சகபாடிக்கு உதவுதல் 7 – 17 | உரிய முறையில் சுகாதாரம் பேணுதல் | பெ.க. உரையாடல் |
| 16.02.2015 20.02.2015 | பருகட் செய்தல் | பந்தை மேலே வைத்திரு 01 – 46 | நான் ஒரு தபாலறிவாளன் 02 – 11 | பந்து துளை வைத்தல் 03 – 46 | துண்டிலான ஓட்டுச் சித்திரம் 5-1-42 | ஒலியைக் கேட்டு நடப்பதை அறிதல் 5-2-18 | நண்பருக்கு அன்பளிப்பு 6 – 20 | சலை தூவல்கால் பட்டங்கள் 7 – 18 | சுத்தமான உடைகள் அணிதல். | |
| 23.02.2015 27.02.2015 | எங்கள்குடும்பத் திற்கு உதவி செய்வோம் 04 – 01 | சிலந்தியும் ஈயும் 01 – 42 | எழுத்துடன் உலா 02 – 16 | உங்களுடைய இலக்கத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் 03 – 44 | பாலம் கட்டுதல் 5-1-25 | தெளிவைந்த பக 5-2-11 | கதைகளை உருவாக்குதல் 6- 31 | கூட்டாளியுடன் வரைதல் 7 – 19 | உணவை மூடி வைப்போம் | |
| 02.03.2015 06.03.2015 | எங்கள் முன்பள்ளி 04 – 02 | சிறிய கூடை 01 – 57 | முதல் திங்கள் பின் நான் 02 – 25 | ஏழுது கைகளை ஒப்பிடுவோம் 03 – 16 | முன்பள்ளிக் கொடி 5-1-23 | முன்பள்ளி பாண்ட் வாத்தியம் 5-2-19 | தன்னை அறிமுகம் செய்தல் 6- 01 | கைமரம் 7-1 | சுத்தம் பேணுதல் கடவுளுக்கு நன்றி செலுத்துதல் | மாணவர்க்ள அசைவு பெ.க.உரையாடல் |
| 09.03.2015 13.03.2015 | போத்தலைச் சுழற்றி விடுதல் 04 – 03 | காலால் உதைக்கும் பயிற்சி 01 – 56 | தேடலும் செல்லுதலும் 02 – 23 | இலக்கு வைத்தல் 03 – 63 | நிறவித்தை 5-1-7 | ஒலியைக் கேட்டு நடப்பதை அறிதல் 5-2-18 | களைத்த முயல் 6 – 22 | ஒரு நடைத்தாண்டும் செயல் 7 – 12 | உணவுப் பாத்திரங்களை சுத்தமாக வைத்திருத்தல் | விளையாட்டுப் பயிற்சி பெ.க.உரையாடல் |
| 16.03.2015 20.03.2015 | நண்பர்களின் ஒதுக்கிடம் 04- 04 | பிடிக்க முயற்சிக்கவும் 01 – 55 | ஒரு சொல் கூறுதல் 02 – 24 | கைதிகள் 03 – 65 | முகமூடி அச்சு 05 – 1- 31 | இசைக்கு ஆடுதல் 5-2-25 | கதைகளை உருவாக்குதல் 6-31 | இழுத்து விரித்தல் 7 – 25 | கொதித்தாறிய நீரைப் பருகுதல் | விளையாட்டுப் போட்டிகள் |
| 23.03.2015 27.03.2015 | காற்று 04 – 05 | கைகளால் பிடிப்பதில்லை 01 – 54 | எங்கள் தொலைபேசி 02 . 20 | எண் கழுத்து மாலை 03 – 68 | பறக்கும் தட்டு 5-1-38 | இசையும் அசைவும் 5-2-4 | உணர்ச்சிகளை ஊகித்தல் 6-27 | தாங்களாக இருத்தல் 7 – 26 | கலைக்கூடல் [illegible] | [illegible] முன்பள்ளி [illegible] |
| 30.03.2015 03.04.2015 | மழைமேகம் 04 – 6 | ஆகாய விமானம் இறங்குதல் 01 – 49 | தேடலும் சொல்லுதலும் 02 – 23 | விரைவான கூட்டல் 03 – 59 | துளை உள்ள சித்திரம் 5-1-40 | விளையாட்டுச் சமரங்களும் மிருகங்களும் 5-2-21 | ஒலிமூலம் உணர்தல் 6-26 | பாதுகாப்புத் தீவு 7 - 27 | முன்பள்ளியை சுத்தம் செய்தல் | முன்பள்ளி [illegible] |
| 06.04.2015 10.04.2015 | குமிழ்கள் செய்தல் 4 – 7 | தண்ணீர் வழங்குதல் 01 – 21 | தலைவரின் ஆக்கச் செயலைப்பின்பற்றுதல் 2- 21 | எவ்வளவு நீ 03 – 33 | முகமூடி அச்சு 5-1-31 | ஊதுகுழல் செய்வோம் 5-2-16 | [illegible] 6-05 | [illegible] தவுங்கள் 7 – 4 | [illegible] | [illegible] சித்திரை வருடப் பிறப்பு |

# இரண்டாம் தவணைக்கான உத்தேச பாடத்திட்டம்

| திகதி | சூழல் | உடல் | மொழி | கணிதம் | சித்திரம் | சங்கீதம் | மனஅபிவிருத்தி | மனவெழுச்சி | சுகாதாரம் | பொதுநிகழ்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20.04.2015<br>24.04.2015 | துப்பரவும் பொம்மை<br>04 – 08 | கடலில் நீந்திவிடலாம்<br>01 – 40 | தேடலும் சொல்லுதலும்<br>02 – 23 | உங்களுடைய இலக்கங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்<br>03 – 44 | தெளிப்பு [illegible]<br>5-1-39 | உங்கள் பெயர் என்ன<br>5-2-1 | கதைகளை உருவாக்குதல்<br>6 – 31 | முன்பள்ளி மரம்<br>07 – 02 | சிரமதானம் | தொழிலாளர் தினம் |
| 30.04.2015<br>09.05.2015 | அதிசயப் பெட்டி<br>04 – 09 | களைத்த தசைநார்<br>01 – 51 | புத்தகம் உருவாக்குதல்<br>02 – 22 | சோடிகளை பொருத்தமாக்குதல்<br>03 – 45 | துணியிலான ஒட்டுச் சித்திரம்<br>5-1-42 | கழுத்துப் பொருத்தமுடன் நடனம்<br>5-2-7 | பேச்சின்மை<br>06 – 30 | அவர் இப்பொழுது எப்படி இருக்கிறான்<br>07 – 03 | ஆரம்ப முயற்சி | [illegible] |
| 11.05.2015<br>20.05.2015 | உணரும் பெட்டி<br>04 – 10 | வீதி<br>01 – 45 | கைப்பன் பந்துகள்<br>02 – 07 | மேளக்காரர்<br>31 – 47 | விளையாட்டு வகுப்பறைக் கோபுரம்<br>5-1-41 | பல்வேறு விதக் குரல்கள்<br>5-2-6 | சந்தோசமாக இருக்கும் போது<br>06 – 29 | சமாதானக் கதிரைகள்<br>07 – 29 | ஒழுங்குகள் | சமூக வளங்களைப் பாவித்தல் |
| 21.05.2015<br>29.05.2015 | எல்லாம் விழுகிறது<br>04 – 11 | சமநிலை பேணல்<br>01 – 52 | இரவினிலே முன்பள்ளி<br>02 – 18 | தட்டுகளும் பேப்பர் கிளிப்புக்களும்<br>03 – 48 | பறக்கும் தட்டு<br>5-1-38 | பானை ஒன்று தாருங்கள்<br>5-2-26 | முகங்களில் உணர்ச்சிகள்<br>6 – 28 | நீ என்ன செய்வாய்<br>07 – 28 | சத்துள்ள உணவுகள் | வானத்தைப் பார்க்க விடல். |
| 01.06.2015<br>10.06.2015 | தாழுதலும் மிதத்தலும்<br>04 – 12 | பிடிக்க முயற்சிக்கவும்<br>01 – 55 | ஆறு பசுக் குட்டியின் கதை<br>02 – 15 | மீன்சங்கிலி<br>03 – 49 | நிறக்கலவையினால் சித்திய சித்திரம்<br>5-1-35 | இரண்டு புகைவண்டிகள்<br>5-2-27 | மந்திரத் தொப்பி<br>06 – 25 | பாதுகாப்பு தீவு<br>07 – 27 | அவதானம் | ஆலயத்திற்கு செல்லுதல். |
| 11.06.2015<br>19.06.2015 | கண்ணாடிக் குவளை நிறைந்துவிட்டதா<br>04 – 13 | தண்ணீர் வழங்குதல்<br>01 – 21 | படத்தை நினைவில் வைத்தல்<br>02 – 05 | முழுவதும் அரைவாசியும்<br>03 – 50 | கண்ணாடி யன்னலில் கறைகள்<br>5-1-34 | இசை ஆக்கம்<br>5-2-28 | ஒலிமூலம் உணர்தல்<br>06 – 26 | இழுத்து விரித்தல்<br>07 – 25 | கொதித்தாறிய நீர் | மாணவர் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல். |
| 22.06.2015<br>01.07.2015 | பாத்திரத்தின் வடிவையே தண்ணீர் பெறும்<br>04 – 15 | பாயும் குழாய்கள்<br>01 – 43 | மாயக்கல்<br>02 – 09 | எண் புத்தகம்<br>03 – 54 | பென்சில் சீவல்களைக் கொண்டு ஆக்கம்<br>5-1-32 | மேலும் கீழும்<br>5-2-22 | புதிர் நண்பன்<br>06 – 21 | சிலந்தி வலை<br>7 – 20 | 2 வாரம் பிள்ளையைப் பார்வையிடல் | தொ. உரையாடல் |
| 02.07.2015<br>10.07.2015 | மழை பெய்வது போல் செய்தல்<br>04 – 16 | ஒரு பூனை நடக்கிறது<br>01 – 16 | நூலைக் குலைக்கும் கதை<br>02 – 10 | சங்கீத எண்கள்<br>03 – 53 | நகர்ந்து அசையும் வடிவம்<br>5-1-30 | ஒலியினால் தேடுங்கள்<br>5-2-20 | ஒன்றாயிருந்து சங்கீதக் கதிரை<br>06 – 19 | சகபாடிக்கு உதவுதல்<br>07 – 17 | விலங்குகளை அவதானிக்கவும் | நலன் விரும்பி சந்திப்பு |
| 13.07.2015<br>22.07.2015 | பொருட்களைத் தண்ணீர் மாற்றமுடைய செய்யுமா<br>04 – 17 | பலூன்<br>01 – 29 | பாரம் தூக்கிச் செல்லல்<br>02 – 12 | பாத்திரங்களை ஒழுங்கில் வைப்போம்<br>03 – 55 | பப்பாசி படகு<br>5-1-37 | முன்பள்ளி பாண்ட் வாத்தியம்<br>5-2-19 | நடிப்போம்<br>06 – 17 | உருட்டிப்பிடி<br>07 – 16 | தீங்கு உபயோகிக்கும் உபகரணம் | சமூக வளங்களை [illegible] |
| 23.07.2015<br>30.07.2015 | நமது உலகத்தில் வாழ்க்கை<br>04 – 19 | நிலை குலைதல்<br>01 – 33 | எழுத்தட்டை உலா<br>02 – 16 | புள்ளிப்பகடைக்காய்/ தாயக்கட்டை<br>03 – 57 | சூரிய அடையாளம்<br>5-1-26 | ஒலியை கேட்டு நடப்பதை அறிதல்<br>5-2-18 | நட்பு மனிதன்<br>06 – 15 | நண்பர்களுடன் பந்தை உதைத்தல்<br>07 – 15 | சுற்றாடலுக்கு கிருமி நாசினி தெளித்தல் | |

# மூன்றாம் தவணைக்கான உத்தேச பாடத்திட்டம்

| திகதி | சூழல் | உடல் | மொழி | கணிதம் | சித்திரம் | சங்கீதம் | மனஅபிவிருத்தி | மனவெழுச்சி | சுகாதாரம் | பொதுநிகழ்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31-08-2015<br>04-09-2015 | வீட்டு மிருகங்கள்<br>04 – 20 | மேலும் கீழும் துள்ளிபடித்தல்<br>1- 50 | படத்தை நினைவில் வைத்தல்<br>02 – 05 | உருவ நடை<br>03-21 | நகர்ந்த அசையும் வடிவை<br>5 – 1-30 | விளையாட்டுச் சமான்களும் மிருகங்களும்<br>5-2-21 | கையை அடையாளம் காணல்<br>6 – 7 | களைத் தமுயல் | உடல் பாதுகாப்பு | |
| 07-09-2015<br>11-09-2015 | மணத்தினால் அடையாளம் காணல்<br>04- 21 | களைத்த தசைநார்<br>01 – 51 | எழுத்தட்டை உள<br>02 – 16 | அதே வடிவத்தை உடைய பொருட்களை கண்டுபிடித்தல்<br>03 – 12 | இயற்கைச் சித்திரம்<br>5-1-20 | ஒலியை கேட்டு நடப்பதை அறிதல்<br>5-2-18 | அசைவுத் தொடர்<br>6 – 12 | எனது விருப்பங்கள்<br>07 – 06 | உடை பாதுகாப்பு பாத்திரங்கள் சுத்தம் | முதியோர் தினம் சிறுவர் தினம் |
| 14-09-2015<br>18-09-2015 | ஒலி உலா<br>04 – 22 | செயற்றித்தான் விளையாட்டு<br>01 – 48 | எங்கள் தொலைபேசி<br>2 – 20 | காக அல்லது பணம்<br>03 – 24 | சூரிய அசைபயணம்<br>5-1-26 | ஒலியினை தேடுதல்<br>5-2-20 | நடிப்போம்<br>6 – 17 | விடையளிக்கும் பெட்டி<br>07 – 07 | உணவு பாதுகாப்பு | |
| 21-09-2015<br>25-09-2015 | ஒலிப்பெட்டிகள்<br>04 – 23 | ஆடும் பொம்மை<br>01 – 36 | ஒரு சொல் கூறுதல்<br>02 – 24 | எண்ணும் தாய்<br>03 – 30 | கனியில் ஆக்கம் செய்தல்<br>5-1-22 | ஊதுகுழல் செய்வோம்<br>5-2-16 | தட்டு மணிகள்<br>06 – 15 | பிறருக்கு உதவுதல்<br>07 – 05 | சுற்றாடல் சுத்தம் | வாணி விழா |
| 28-09-2015<br>02-10-2015 | விதைகளைத் தேடிக் கண்டு பிடித்தல்<br>04 – 24 | சமநிலை பேணல்<br>01 – 52 | முதல் நீங்கள் பின் நான்<br>02 – 25 | போஞ்சி அட்டைகள்<br>03 – 35 | பந்தினால் நிறம் தீட்டுதல்<br>5-1-29 | தொலைந்த பசு<br>5-2-11 | புதிர் நண்பன்<br>06 – 21 | நற்செயல்<br>07 – 09 | உணவுப்பொருட்கள் சுத்தம் | |
| 05-10-2015<br>09-10-2015 | விதையை போல் வளர்தல்<br>04 – 25 | மீன் அசைவு<br>01-24 | புத்தகங்கள் உருவாக்கல்<br>02-22 | பொருட்களை எண்ணுதல் | நகர்ந்து அசையும் வடிவம்<br>5-1-30 | உடலை பலவித அசைவுக்கு இயல்பாக்கல்<br>5-2.9 | உணர்வு காட்டும் மணிக்கூடு<br>06 – 24 | நட போடு ஊர்ந்தல்<br>07 – 11 | மாணவர் சுத்தம் | |
| 12-10-2015<br>16-10-2015 | கற்களின் அரும்பொருட் சாலை<br>04 – 26 | தேனியும் குளவியும்<br>1-38 | மாயக்கல<br>02 – 09 | ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு சிறிய பாரைக்கல்<br>03 – 10 | இயற்கையான நிறம் தீட்டுவோம்<br>5-1-1 | சங்கீதக் கதிரை<br>5-2-3 | சந்தோசமாக இருக்கும் போது<br>06 – 29 | நண்பருடன் பந்தை உதைத்தல்<br>07 – 15 | பூந்தோட்டம் | |
| 19-10-2015<br>23-10-2015 | ஒருபூச்சியின் விருத்து<br>04- 27 | பிள்ளைகளும் வண்ணத்துப் பூச்சிகளும்<br>01 – 41 | டையன் பந்துகள்<br>02 – 17 | பந்து துள்ள வைத்தல்<br>03 – 46 | முண்டமனி புதிரை உருவாக்குதல்<br>5-1-10 | சூரிய நடனம்<br>5-2-8 | அப்பிள் கதை மாம்பழக் கதை<br>06 | சகபாடிக்கு உதவுதல்<br>07 – 17 | களிகூரும் மரங்கள் | |
| 26-10-2015<br>30-10-2015 | சேர்ணறயும் மணலையும் பரிசீலித்தல்<br>04 – 28 | ஆகாயவிமானம் இறங்குதல்<br>01 – 49 | சொல்லைக் கவனிப்போம்<br>02 – 14 | எவ்வளவு நீர்<br>03 – 33 | இயற்கைச் சித்திரம்<br>5-1-20 | இசையாக்கம்<br>5-2-28 | உணர்ச்சிகளை ஊகித்தல்<br>06 – 27 | கூட்டாளியுடன் வரைதல்<br>07 – 19 | விளையாட்டு முற்றம் | |
| 02-11-2015<br>06-11-2015 | இலைகளை ஒப்பிட்டுப் பார்த்தல்<br>04 – 29 | விளையாட்டுப் பொருட்களை யார் விழுத்துவது<br>01 – 53 | அது எதைப் போன்றது<br>02 – 07 | முழுவதும் அரைவாசியும்<br>03 – 50 | இலையினால் ஒட்டுச் சித்திரம்<br>5-1-3 | இசை வடிவங்கள்<br>5-2-15 | ஒன்றாய் இருத்தல்<br>06 – 19 | செருப்பு வேட்டை<br>07-21 | | |
| 09-11-2015<br>13-11-2015 | மரக்கறியும் பழங்களும்<br>04 – 30 | பந்தை மேலே வைத்திரு<br>01 – 46 | சந்தைக்குப் போவோம்<br>02 – 02 | ஒரேமாதிரியும் வித்தியாசமானதும்<br>03 – 04 | இயற்கை மாதிரிகள்<br>5-1-21 | கழிவுப் பொருட்களிலிருந்து இசை 5-2-17 | எனது நண்பனைச் சந்தியுங்கள்<br>06 – 14 | போதாது<br>07-24 | | |
| 16-11-2015<br>20-11-2015 | வானிலை அசைவுகள்<br>03 – 31 | பலபக்கமும் திரும்புதல்<br>01 – 44 | யார் வருவது<br>02 – 13 | இலக்கு அல்லது குறி<br>03 – 60 | அழகூட்டியஅட்டைகள், ஜரிகைகள் இதழ்கள்<br>5-1-33 | ஒலியைக் கேட்டு நடப்பதை அறிதல்<br>5-2-18 | கதைக்கும் கோல்<br>06 – 13 | பாதுகாப்புத் தீவு<br>07 – 27 | | |
| 23-11-2015<br>27-11-2015 | மீன்பிடித்தல்<br>4 – 32 | மீனும் மீன்பிடிகாரனும்<br>2- 39 | டையன் பந்து<br>02 – 17 | ஒரு அயலவரைக் காண்<br>03-34 | நீரின் அடியில் காட்சி<br>5-1-43 | பெரிய மீனும் சிறிய மீனும்<br>5-2-24 | குழுவின் படம்<br>06 – 6 | சமாதானக் கதிரைகள்<br>07 – 29 | | |
| 30-11-2015<br>04-12-2015 | காந்தம்<br>04-33 | ஐயரை உருட்டுவோம்<br>01-47 | நான் ஒரு துப்பறிவாளர்<br>2-11 | | இரட்டை வர்ணம் பூசுதல்<br>5-1-9 | இசைக்கு லயித்தல்<br>5-2-3 | பேசாமை<br>06-30 | நீ என்ன செய்வாய்<br>07-28 | | |

கிழமையொன்றுக்கான உத்தேச பாடக் குறிப்பு

| உத்தேசிய திகதி | பாடப்பரப்பு | பாடஅறிமுகம் | செயற்பாடு | நோக்கம் |
|---|---|---|---|---|
| திங்கள் 23.03.2015 | 1.சுழலை விளங்கிக் கொள்ளல் 2.ஆக்கச் செயல் அபிவிருத்தி | காற்று வீசுவது தொடர்பாக கதைத்தல் பாட்டுக்கேற்ப ஆடுவதைப் பார்த்தீர்களா | 4.5 காற்று 5.24 இசையும் அசைவும் | 1 அவதானித்தல் மூலம் இயற்கையின் அறிவை விரிவாக்கல் 2..இசையோடு அசைவை கேட்டல் மூலம் ஒருங்கிணைத்தல் |
| செவ்வாய் 24.03.2015 | 1.உடல் அபிவிருத்தி 2.சமூக மன வெழுச்சி அபி விருத்தி | விளையாட விருப்பம் தானே இன்று ஓர் விளையாட்டு பார்ப்போம் கோபம், சாந்தம், சிரிப்பு அழுகை போன்றன பற்றி | 1.54கைகளால் பிடிப்பதில்லை 6.27 உணர்ச்சிகளை ஊகித்தல் | 1.இணைப்பாக்க விளையாட்டில் தசைகளைப் பயன்படுத்துதல் 2. அவதானித்தல் மூலம் உணர்வுகளை இனம் காணல் |
| புதன் 25.03.2015 | 1. மொழி அபிவிருத்தி 2. சமூக மனமெழுச்சி | தற்போது டிதாலைலபேசி எல்லோரிடமும் இருக்கிறது பல்வேறு பிரச்சனைகள் உருவாகுதல், தீர்த்தல் | 2.20 எங்கள் தொலைபேசி 7.24 நாங்களாக இருந்தால் | 1.இணைப்பாக்க விளையாட்டில் தசைகளைப் பயன்படுத்துதல் 2. அவதானித்தல் மூலம் உணர்வுகளை இனம் காணல் |
| வியாழன் 26.03.2015 | 1.கணித எண்ணக்கரு விருத்தி 2.சுகாதார பழக்க வழக்கம் | எண்களை தொடராக சொல்ல வைத்தல் தினம் தோறும் செய்ய வேணடியவை | 3.68 கழுத்து மாலை மாணவர்களுடன் கலந்துரையாடல் | பொருட்களை சரியான எண்ணுடன் பொருத்தல் காலைக்கடன்களை ஒழுங்காக செய்ய வைத்தல் |
| வெள்ளி 27.03.2015 | 1.ஆக்க செயல் அபிவிருத்தி 2. முன்பள்ளியை அவதானித்தல் | விமானம் பட்டம் பறத்தல் வேறுபட்ட வசதிகள் | 5.13 றெஜிபோமில் விமானம் பறக்கும் தட்டு முன்பள்ளியை தரிசித்தல் | விஞ்ஞபன சேர்ந்த ஆக்கச் செயலில் மகிழ்தல் பல்வேறு வசதிகளை அறிதல் |

| உபகரணம் | ஆசிரியர் செயற்பாடு | மாணவர் செயற்பாடு | நிறை வேற்றிய திகதி | கை யொப்பம் |
|---|---|---|---|---|
| 1. பஞ்சு பொலித்தீன்<br>2. பெரிய வரிப்பு வானொலி ஒலி-ப்பதிவு நாடா | வெளியே கூட்டிச் சென்று காற்றி-னால் மரம், செடி, கொடி அசைவதை காண்பித்ல் ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தல் | பஞ்சு பொலித்தீன் போ-ன்றவற்றை பறக்கவிடல்இசை-க்கேற்ப மாணவர்கள் அநசவை மேற்கொள்வார் | | |
| 1.பந்து. பெட்டி சஞ்சிகைகளில் வெட்டி எடுத்த படங்கள் துளை-யிட்ட பெரிய காட்போட் | ருவரை விளையாட விட்டு ஆரம்பித்தல் பெரிய காட் போட் துளையூடாக படங்களைக் காட்டல் | ஒருவர் பந்தை எறிய மற்றவர் பெட்டியால் பிடித்தல் படங்களை அவதானித்து உணர்வுகளைப் பெறல் | | |
| துளையிடப்பட்ட தகரப் பேணிகள் நூல் | தகரப் பேணிகளை நூலால் இணை-த்து தொலைபேசி ஆக்கல்சைக்கிளை ஓட்டும் பிள்ளை விழுவதாக கதை-தகூறல் | மாணவர்களை செய்து கதை-தப்பதற்கு ஊக்கப்படுத்தல் நீங்கள் சைக்கிள் ஓட்எயவராக இருந்த விழுந்தால் என்ன செய்வீர்கள் நடித்தல் | | |
| துண்டாக்கப்பட்ட ஸ்றோ நாடா, எண் அட்டை நூல் | ஏண் அட்டை ஸ்றோ துண்டுகளை நூலில் கோர்த்து மா-லையாக்கல் கலந்துரையாடல் | மாணவர் ஆசிரியர் செய்ததை பின்பற்றி மாலை ஆக்குதல்<br>பின்பற்றுதல் | | |
| றெஜிபோம், கத்தரிக் கோல் முதலிய | றெஜிபோமில் வி-மானம் தயாரித்து பறக்கவிடல் முன்பள்ளியைக் கூட்டிச் சென்று காட்டுதல் | ஆசிரியரைப் பின்பற்றி விமா-னம் செய்து பறக்கவிடல் முன்பள்ளியை பார்தது விள-க்கங்களைக் கேட்டல் | | |

# ஆலமரம்

-"அருள் மணி"

ஆல மரத்தைப் பாருங்கள்
அகல மாகக் கிளைபரப்பி
பாலர் சேர்ந்து விளையாடப்
பரந்த நிழலைத் தருகிறது

கொப்புக ளெல்லாம் பறவையினம்
கூடுகள் கட்டி வாழுதற்கு
ஒப்புதல் கொடுத்துப் பெருமிதமாய்
உயர்ந்து நிற்கும் அழகைப்பார்!

மாடும் ஆடும் மனிதர்களும்
மகிழ்வாய் இருந்து களைப்பாற
நாடும் ஆல மரம்போன்று
நாமும் பிறர்க்கு நிழலாவோம்.

ஆல மரத்தின் விழுதெல்லாம்
அவற்றின் கிளையைத் தாங்குதல்போல்
கால மெல்லாம் நம்மவர்க்குக்
கைகொடுத்துதவப் பழகிடுவோம்.

சுபா. அருள்சுப்பிரமணியம் M.A
கனடா.

# திருமதி வேலும்மயிலும் சறோஜினிதேவி
# சேவை நலன் பராட்டு



திருமதி வேலும்மயிலும் சறோஜினிதேவி அவர்கள் 1996 ஆண்டு முதல் இன்று வரை எமது சித்தி விநாயகர் முன்பள்ளியில் ஆசிரியராக செயற்படுகின்றார். குழந்தைப் பருவம் முடிவடைந்து பிள்ளைப் பருவத்தில் இருக்கும் சிறார்கள் வீட்டுச் சூழலை விட்டு பள்ளிச் சூழலலுக்கு வரும் போது தயக்கத் தோடும், பயத்தோடும் வரும் போது வீட்டில் கிடைத்த தயாரின் அன்பும் அரவணைப்பும் கிடைத்தாலே அவர்கள் முன்பள்ளியில் பயமின்றி கூச்சமின்றி செயற்படுவர். இந்தவகை சறோஜினி தேவி ஆசிரியர் தாயாக இருந்து சிறுவர் மனங்களில் இடம்பெற்றமை அவர் செய்த சேவை வெற்றி பெற்றமையையும் இந்த ஊர் மக்கள் மதிக்கின்றனர். குடும்பம் பல்வேறு இடர்பாடுகனை அனு பவித்த போதும் தனது கடமையை தொடர்ச்சியாக நிறைவு செய்தமை எமது சமூகத்தால் மறக்க கூடியதல்ல முன்பள்ளி ஆசிரியர்கள் போதிய ஊக்குவிப்பு தொகை கிடைக்காது தமது சேவையை வழங்கி வருகின்றமை மனதை உறுத்தும் நிலையாகும். இந்த நிலையிலும் சறோஜினிதேவி ஆசி ரியர் கடமை நேரம் தவறாது செயற்பட்டு முழுப்பிள்ளையும் பாதுகாப்பாக வீடு நோக்கி வெளியேறும் வரை பொறுமையாக அனுப்பும் செயற்பாடு பிள்ளையின் பெற்றோரை நெகிழ செய்யும் சேவையாகும். தொடர்ந்து 20 வருடங்களாக கடமையாற்றி தன்னிடம் 500 பாலர்களையும் நல்வழிப்படுத்தி எழுத் துக்களை அறிமுகம் செய்து பாலர்கள் வாழ்வை வளப்படுத்திய திருமதி வேலும்மயிலும் சறோஜினி தேவி சேவையை ஊர் மக்களாகிய நாம் போற்றுகின்றோம்.

முகாமைத்துவகுழு

# மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளி முகாமைத்துவக் குழு

## Mathagal Sithi Vinayakar Pre-School Management Committee

www.mathagal.net

மாதகல்

பதிவு இல. / Regd.No } NP/41/(16)/SO548

Mathagal.

திகதி ..................

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி புதிய கட்டட திறப்புவிழாவையொட்டி வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கான பின்வரும் ஆக்கங்கள் குறித்த துறை சார்ந்தோரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது அவற்றை 28.02.2015 க்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது ஈமெயில் முகவரிக்கோ அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

*விடய தலைப்புக்கள்*

*01. முன்பள்ளி சிறார்களின் அழகியல் உணர்வினை விருத்தி செய்யும் ஆக்கங்கள் (சங்கீதம், பாட்டு, நாடகம் )*

*02. முன்பள்ளி சிறார்களின் உடல் உள மேம்பாட்டு ஆரோக்கிய விடயங்கள் (பொருத்தமான விளையாட்டு வகை உள ஆரோக்கிய செயற்பாடுகள் )*

*03. முன்பள்ளி சிறார்களின் தனிநபர் சுகாதார பழக்கவழக்கங்களும் சுய செயற்பாட்டிற்கான உத்திகளும்*

*04. மேலைத்தேய நாடுகளின் முன்பள்ளி கட்டமைப்புக்களும் செயற்பாடுகளும் (ஆசிரியர்வகிபாகம் , விளையாட்டு பொழுதுபோக்கு உள ஆற்றுப்படுத்துகை)*

*05. முன்பள்ளி சிறார்களின் புலன்வழிவிருத்தி செயற்பாடுகளுக்காக முன்பள்ளி ஆசிரியர்கள் பிரயோகிக்க வேண்டிய உத்திகள்*

மேற்குறித்த விடயத்தலைப்புக்கள் கொண்ட ஆக்கங்களை கட்டுரையாகவோ அல்லது கவிதையாகவோ அல்லது பாடலாகவோ அல்லது கருத்தோவியங்களாகவோ அனுப்பி வைக்க முடியும்

அனுப்பவேண்டிய முகவரி
Svinapreschool@gmail.com.

திரு.வி. ஜெயந்தன்
செயலாளர்

முன்பள்ளி முகாமைத்துவக்குழு,
சித்தி விநாயகர் முன்பள்ளி,
மாதகல் கிழக்கு,
மாதகல்.

மாதகல் சித்திவிநாயகர் முன்பள்ளி
முகாமைத்துவக் குழு
மாதகல்.

கி. பேரின்பநாதன் — தலைவர்

வி.ஜெயந்தன் — செயலாளர்

கி.பேரின்பநாதன்
தலைவர்

வி.ஜெயந்தன்
செயலாளர்

சூ.சிவசரன்
பொருளாளர்

WWW.MATHAGAL.NET

# நன்றி நவிலல்

எமது சித்திவிநாயகர் முன்பள்ளிக்கு சகல அடிப்படைவசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றை சிறப் புற அமைப்பதற்கு நிதியுதவிநல்கிய கனடா மாதகல் முன்னேற்றக் கழகம், கனடா மாதகல் நலன் புரிச்சங்கம், பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம் ஆகியவற்றிக்கும் எமக்குப் பல ஆலோசனைகளை யும் உதவிகளையும் வழங்கிய மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர், கல்வியளாளர்கள் மற்றும் ஊர்ப்பெரியோர்களிற்கும் கட்டடப்பணிகளுக்கு தேவையான தளபாடங்களை வழங்கியுதவிய மாதகல் இளைஞர் சங்கத்தினர் மற்றும் அரசடிப் பிள்ளையார் ஆலயப் பிரதமகுரு ஆகியோருக்கும் எமது கட்டிட பணிகளில் தொண்டர் அடிப்படையில் பணிபுரிந்த மாதகல் இளைஞர் சங்கத்தினருக்கும் பிரதேச இளைஞர்களுக்கும் இக்கட்டிடத்தினை சிறப்புற அமைத்துத்தந்த கலைஞர்களுக்கும் எமது கட்டடப் பணிகளின் போது குறிப்பிடத்தக்க உபசரணை வழங்கிய மாதகல் பாணாகவெட்டி புவனேஸ் வரி அம்பாள் ஆலயத்தினருக்கும் இம்முன்பள்ளியை வினைத்திறனுடன் இயக்குவதற்கு எம்மோடு சேர்ந்து உழைக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் இசைநடன பயிற்றுவிப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கும் சித்திவிநாயகர் முன்பள்ளியின் முகாமைத்துவ குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்

நன்றி

செயலாளர்

மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி

முகாமைத்துவக்குழு







# நகுலேஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
# NAKULES HARDWARE STORS

சித்தன் கேணி வீதி, பண்டத்தரிப்பு









கட்டிடப் பொருட்கள், பெயின்ற் வகைகள், மஸ்கன் கூரை சீற்கள், எஸ்லோன் பைப்கள், கம்பி வகைகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்

**T.P. 021 4977055**
**0778102898**

EWWS


# CHILDREN SPORTS HAPPINESS



## And

## ELECTRICAL WEDING WORK SHOP





T.P 0779231455
0776849985

**Main Road Chankanai.**



வாடிக்கையாளர்களே!

உங்கள் சேவையே


எங்களுக்குத் தேவை

# பண் சிற்றி
# ஸ்ரார் சிற்றி

Net to phone, Dialog ID Card, Airtel Card,
Hutch IDD Card, Dialog Sim, Hutch Sim,
Mobitel Sim,
Net Browsing...

பாடசாலை உபகரணங்கள்,
பல்வேறு கையடக்கத் தொலைபேசிகள்,
அதன்பாகங்களும் , பெண்களுக்கான
அழகுசாதனைப் பொருட்கள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்

























































உலகெங்குமுள்ள மாதகல் உறவுகளை
இணைக்கும் உறவுப்பாலம்

www.mathagalmurasu.com

mathagalmurasu

mathagalmurasu@hotmail.com



facebook MATHAGAL MURASU



அனுசரணை
**வி.இரவீந்திரன்**
(பிரான்ஸ்)